உ

கடவுள் துணை.

# ஜெயமுனி வாக்கியம்.

என்று வழங்குகின்ற

ஜெயமுனிசூத்திர மொழிபெயர்ப்பு.

cl. 50679
1997

மதுரை சோதிடம்

**த. குப்புசாமி நாயுடவர்கள்**

பரிசோதித்து,

மதுரை புக்ஷாப்,

**பி. நா. சிதம்பர முதலியார் பிரதர்ஸ்**

அவர்களால்

மதுரை, விவேகானந்தா பிரஸில்

[illegible]திப்பிக்கப்பெற்[illegible].

14-

இதன் விலை] 1931 [அணா 8

உ

முருகக்கடவுள் துணை.

# ஜெயமுனிசூத்திர மொழிபெயர்ப்பு.

சுலோகம்.

ஸ்ரீமத்கங்காதரசுதம் சந்தரரேகாவதம்ஸம்
சித்திதம்சர்வவித்யானும் வந்தேதந்தகஜானனம்
சுபாசுபபலம்துருஷ்டவா சர்வேஷாம்பிராணிநாம்பி
ஆதனலக்னமாரப்ய தாஷ்டவயம்கைவவுத்தமம்.

## அறுசீர்கழி நெடிலடியாசிரிய விருத்தம்.

ஆட்சியாம் உச்ச மூலம் அவரவர் நின்று ராகிற்
காட்சியாம் பலன்கள் நல்கும் கைவரும் கருமமாகும்
தாட்சியாம் நீச மூடந் தானது பகைவீ டானல்
சூட்சியாம் பலன்கள் அற்பம் துன்பமே தொடருங் கோட்கள். (1)

ஆறினை யெட்டை மற்றை யீராறை யடைந்த கோளும்
கூறுமா றெட்டா றின் கோளுடன் நின்ற கோளும்
சீறியே பகைநீ சத்தில் நீக்கோளைச் சேர்ந்த கோளும்
ஊறிடு மென்ப நல்லாற் பயனொன்றும் உதவி டாதே. (2)

திசாபுத்தி பலன்.

## சூரியமகா திசை ௵-6.

இதற்குப் பலன்.

இருக்கும்நிலைவிட்டு தேசாந்தரம் போதல் சுயபந்து சனங்களிலே மரணதுக்கம் சொற்பபலன் நிலையானவஸ்துக்கள் நாசம் நாற்கால் சீவன்களிலே நஷ்டம் உத்யோக பங்கம் ரோக பயம் சோர பயம் இவைகள் உண்டாம்.

திசாநாதன்.

திரிதீயஷ்டமத்திசைகளிலிருந்தால் பூலாபம் சௌக்கியம் குருவுக்கு அல்லது பந்துக்களுக்கு தேககாட்டியம் சாதகனுக்கு உஷ்ணரோகம் மாடாடுதந்தாக்கியம் விவசாயம் கைகூடுதல், தேவபிராமணபூசை ஆசாரகிருதயம் அல்லது இராசப்பிரீதி இவைகள் உண்டாம்.

உச்சசொட் சேத்திரனுப் சுபவர்க்கம்பெற்று சுபக்கிரஹங்களுடனே கூடிசுபஸ்தானம் பெற்றிருந்தால், கெசலாபம் அஸ்வலாபம் அல்லது பிரபுபிரீதி எத்தனித்த காரியசித்தி வியாபார பலிதம் இவைகள் உண்டாம்.

திசாநாதன்.

நீசனாய் அஷ்டமவியத்தில் இருந்தாலும் அந்த ஸ்தானாதிபதிகளுடன்கூடியிருந்தாலும் தாரித்திரியம் இவைகள்உண்டாம்.

திசாநாதன்.

இலாபஸ்தானத்தில் இருந்தால் சுபபலன் உண்டாம்.

திசாநாதன்.

துதியஸப்தமஸ்தானத்தில் இருந்தால் தேகநலியாம்.

திசாநாதன்.

மாரகாதிபதியானாலும் அவர்கள்சம்மந்தமானாலும் ஆயுர்தாயத்திற்குச் சரியாக வந்தொத்துக் கொண்டாலும் மாரகம் உண்டாம்.

## சூரியமகாதிசையிற் சூரிய புத்தி மீ 3. நாள்-18.

இதற்குப் பலன்.

உச்சசொட்சேத்திரகேந்த்ர திரிகோணங்களில் சுபனாய் இருந்தால் பூ லாபம், கோ லாபம், திரவிய லாபம், தேக சவுக்கியம் சுபம் வாகனம் பூஷணம் இவைகள் உண்டாகும்.

புத்திநாதன்.

பாபனாயிருந்தாலும் சஷ்டாஷ்டம் வியஸ்தானத்தில் இருந்தாலும் தேகசாட்டியம் வியாதி சோராக்னி பீடை கண்டபீடை இவைகள் உண்டாகும்.

புத்திநாதன்.

பாபயோகத்தில் இருந்தாலும் சுபயோகத்தில் இருந்தாலும் பாபர் சுபர்களுடன் கூடியிருந்தாலும் மேற்படி பலன் [illegible] தாய பலனாகச் சொல்லப்படும்.

## சூரியமகாதிசையிற் சந்திரபுத்தி மீ-6.

இதற்குப் பலன்,

கேந்திர கோண[illegible]களிலே நின்றால் [illegible] தன தான்ய விருத்தி [illegible]கவிருத்தி வாகனம் இவைகள் [illegible]

உச்சசொட்சேத்[illegible]ங்களில் பெலத்[illegible] [illegible]கள் சம்மந்தமாவதும் லக்னாதிபதி [illegible] மந்தமாவதும்இருந்தால் தாரசௌக்கியம் தனப்பிராப்தி புத்திர லாபம் இராஜப்பிரீதி இஷ்டார்த்தசித்தி இவைகள் உண்டாம்.

புத்திநாதன்.

நீசம்பெற்று பாபயுக்தனாய் அஷ்டமாதி பதிகளுடன்கூடி இருந்தால் சீதளசுரம் ரோகபயம் தாரநாசம் புத்ரநாசம்

மூலைக்குமூலை சஞ்சாரம் சத்ருபீடை கலகம் தனதானிய விரயம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

அஷ்டமத்தில் பாபர்திஷ்டி பெற்றிருந்தால் ஜலகெண்டம் வியாதி வியாகூலம் ஸ்தானப்பிரஷ்டம் தாயாதி நிஷ்டூரம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு இலாபத்தில் பாக்கியத்தில் கேந்திரத் திரிகோணங்களில் தனத்திலிருந்தால், தனதானிய சம்பத்து இராஜப்பிரீதி புத்திரவிருத்தி மனோத்சாகம் ஸ்தானப்பிரஷ்டனாயிருந்தால்,ஊர்வந்துசேருதல் புண்ணியதீர்த்தஸ்நானம் தேவதாதரிசனம் புண்ணியகயிங்கரியம் தேவாலயமாவது தடாகமாவது உண்டு பண்ணுதல் நல்ல பக்தி சத்ருநாசம் இஷ்டான்னபோஜனம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு 6-8-12 விருந்தால் தனவிரயம் பந்துத்துவேஷம் மித்ருத்துவேஷம் நல்லபோஜனமில்லாமை சோரபீடை இராஜபீடைமரணரோகம் சத்ருபீடை இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

சப்தமஸ்தானத்திலே மாரகாதிபதி சம்மந்த மிருந்தால் அபமிருத்யு தோஷம் வரும் அதற்கு வெள்ளியாவது வெள்ளைப் புடவையாவது தானம் பண்ணுவது.

## சூரியமகாதிசையில் அங்காரகபுத்தி ௴-4 நாள் 6.

இதற்குப்பலன்.

புத்திநாதன்.

இலக்னத்திற்கு கேந்திர திரிகோணங்களில்சொட்சேத்திரங்களில் தனலாபத்தில் 3-9ல் இருந்தால் பூலாபம் கிருஷிவிருத்தி ஜனவிருத்தி தான்ய விருத்தியும் சிவந்த வஸ்திரலாபம் சேனாதிபத்யம் யுத்தத்திலே ஜெயம் இராச்சிய விருத்தி இராஜமூலத்தில் வாகனம் பூஷணங்கிடைத்தல் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

நீசனாய் பாபருடன்கூடி சஷ்டாஷ்டம் வியம்பெற்றிருந்தால் பாபகர்மம் துஷ்கிர்த்திய இராசத்வேஷம் சத்துரு பயம் ஆத்மபந்துநாசம் தாரநாசம் புத்ர நாசம் எதுகாரியத்திலும் அபஜெயம் தேக ரண பீடை மனஸ்தாபம் வீட்டிலே அக்கினி பயம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

இலக்னுதிபதியுடன் கூடினுல் சௌக்கியம் இராஜனுக்குச் சமானமான யோகம் தனலாபம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

கேந்திரஸ்தானத்திலிருந்து இரண்டாம் வீட்டுக்காரனுங் கூடக்கூடினுல், பிதுருபீடை அற்ப சௌக்கியம் அற்ப லாபம் அன்னத்துவேஷம் இராஜ பயம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

6-8-லிருந்தால் தனநஷ்டம் பிராணபீடை சோர உபத்ர வம் இராஜ தெண்டனை அல்லது வீடு காற்றினுல் சேதமாகுதல் விலங்கு வருதல் பராபரவேசம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திர திரிகோணத்தில் இலாபத்தில் இருந்தால், சொற்ப சவுக்கியம் சொற்ப லாபம் கிஞ்சித்தர்மம் சுபாசுபம் ஸ்தானப்பிரஷ்டம் குருபந்துயோகம் துர்புத்ராள் பீடை துர்க்கிர்த்தியங்கள் பாபகிர்த்தியங்கள் பந்துத்துவேஷம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

துதீயசப்தமாதிபதிகளுடன் சம்மந்தமானுல், தேகசாட்டியமும் வரும் அதற்கு தேவப்பிராமணுள் கையினுலே செபஞ் செய்து அன்னதானஞ்செய்தால் பரிகாரமாம்.

## சூரியமகாதிசையில் இராகுபுத்திமீ-10 நாள் 24.

இதற்குப்பலன்.

இலக்கினத்திற்கு கேந்திரதிரிகோணங்களில் இருந்தால், தனநாசம் சோர பீடை இராசமூல்யத்திலே தனவிரயம் புத் தாரங்களுக்கு ரோக பீடை உடனேசௌக்கியம் இவைகளு டாம்.

புத்திநாதன்.

சுபருடனேகூடி சுபர் திருஷ்டி பெற்றிருந்தாலும் சுபாசுபம் பெற்று சுபங்களில் அல்லது உச்சனுயிருந்து இலக்னுதிபதி யுடனே கூடி இருந்தாலும் தேகாரோக்யம் மகாசௌக்யம் தன தான்யாதி லாபம் வஸ்திரபூஷணம் வாகனம் விவசாயம் கொடுக் கல் வாங்கல் அகாலபோஜனம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

துஷ்டாஷ்டமவியத்தில் பாபயுக்தனுயிருந்தால் கிரகப்பிர வேசம் சோரபயம் தாரபுத்ராள் பீடை நாலுகால் சீவன்களிலே

சிலது நஷ்டம் க்ஷேத்ரநஷ்டம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு 6-8-12-ல் பாபயுக்தனுயிருந்தால் இராஜ பீடை சோராக்னி பயம் சுரபயம் குன்மவியாதி அல்லது க்ஷய ரோகம் அதிசாரம் மரணபீடை விஷப்பீடை ஸ்தானப்பிரஷ்டம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

இலக்னுதிபதியுடனேகூடி சுபயுக்தனுய் சுபதீட்சண்யனுய் இருந்தால் பாக்கியவிருத்தி கீர்த்திப்பிரதிஷ்டை தாரவிருத்தி புத்திர விருத்தி வீட்டிலே கலியாணம் தனதான்யவிருத்தி இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிபதியுடனேகூடியாவது அந்தஸ்தானங்களிலாவது அவர்கள் [illegible]யமாவது இருந்தால் அபமிர்த்தீவுபயம் சர்ப்ப பயம் இவைகளுண்டாம். இதற்கு ஆட்டுக்கிடா தானம் அல்லது எருமைக்கிடா தானம் பண்ணினுல் தீரும்.

## சூரியமகாதிசையில் குருபுத்தி மீ-9 நா 18.

இதற்குப்பலன்.

புத்திநாதன்.

இலக்னத்திற்கு கேந்திரத்திரிகோணங்களில் சொட்சேத்திரங்களில் தனலாபத்தில் இருந்து திசாநாதனுடன் கூடில், விவாகம், இராஜதரிசனம், தனலாபம், தான்யலாபம், புத்ரலாபம் சுபம் ஆரோக்யம் தேகபுஷ்டி இராஜப்பிரீதி சமானசனங்களிலே மரியாதை வஸ்திர பூஷணம் அஸ்வலாபம் கீர்த்தி தர்மசித்தி இஷ்டசித்தி வைபோகம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

தர்மகர்மாதிபதியுடனே கூடினுல், இராஜமூல்யத்தில் நரவாகனம் யோகம் சேனுதிபத்யம் அதிகசௌக்யம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

பாபியுடனேகூடினுல், பாபகர்மங்களைப் பண்ணுதல், பாப மூலத்தில் திரவியநாசம் தேசப்பிரஷ்டம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

நீசனுய் அஸ்தங்கிதனுய் இருந்தால், தனவிரயமும் பயமும் இராஜகோபமும் இஷ்டபந்துக்கள் நாசமும் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திரத்திலிருந்தால் புத்ரலாபம் தசகர்மங்கள் ஐசுவரியம் ஆரோக்கியம் சிவபூசை விஷ்ணுபூசை தனதான்ய விருத்தி புராணகாவியங்களில் கேள்வி தடாகம் கோபுராதி புண்ய பலன்கள் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு 9-ல் இருந்தால் தனலாபம் புத்ரலாபம் தேவப்பிரதிஷ்டை குரு பக்தி மந்திர சித்தி வாகனங்கள் பூஷணங்கள் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் பாபயுக்தனாயிருந்தால் சோரபயம் இராஜபயம் சர்வகால விசனம் புத்திமுதலிலே கொடுத்து அந்தியத்தில் சுபப்பலன் லாபம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிபதிகள் சம்மந்தமானால் தேகசாட்டியம் வரும். இதற்கு சொர்னதானமும் ருத்ராபிஷேகமும் பசுதானமுஞ் செய்தால் பரிகாரமாம்.

## சூரியமகாதிசையிற் சனிபுத்திமீ-11 நாள் 12.

இதற்குப்பலன்.

புத்திநாதன்.

இலக்னத்திற்கு கேந்திரதிரிகோணங்களில் சொட்சேத்திரங்களில் சுபர் பார்வை சம்மந்தமிருந்தால், சத்துருநாசம், மனோத்சாகம் தனதான்யங்கள் பாக்கியங்கள் விருத்தியும் விவாக சம்பிரமம் சுபகர்மங்கள் பந்துஜனங்கள் பூசிதம் பூலாபம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

பாபசம்மந்தம் பார்வையாயிருந்தால் இராஜவிரோதம் தாயாதிகலகம் தனநாசம் பந்தனம் காரியஹானிமித்ருகிலேசம் நாலுகால் சீவன்களில் கஷ்டம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திர திரிகோணங்களில் இருந்தால், பயம் புத்திர சோகம் பிதுர்நாசம் இவைகளுண்டாம்.

திசாநாதனுக்கு 6-8-12 ல் இருந்தால் பாபயுக்தனானால் புத்ர தார நாசம் தேசப்ரதிஷ்டை இராஜ பயம் ருத்ர பயம் மானபங்கம் தேவ நிந்தனை குரு நிந்தனை தனமில்லா மனம்

பிறவிதுர்பந்து விபசாயம் பசுக்கள் இத்தியாதி நஷ்டம் புத்தி முதலே கிஞ்சித் சௌக்யமுண்டாம் மற்ற முழுமைக்குப் பாவ பலன் உண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு இலாபத்தில் இருந்தால், தனதானியம் கறுப்பு வர்னமான வஸ்திர லாபம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிபதி சம்மந்தமானல், அபமிர்த்தி தோஷம் வரும். இதற்கு மூர்த்தி செபம் ஆட்டுக்கிடா தானமும் அல்லது எள்ளும் இரும்பும் கறுப்புக் கம்பளியும் தானஞ் செய்யவும்.

## சூரியமகாதிசையிற் புதன்புத்தி மீ-10, நாள்-6.

இதற்குப்பலன்.

புத்திநாதன்.

இலக்னத்திற்கு கேந்திர திரிகோணங்களில் சொட்சேத் திரங்களில் நிற்கச் சுபர்களுடன் கூடி பெலத்திருந்தால், இராச்சிய லாபம், மனோத்சாகம், தனதான்யங்கள், நித்திய கருமங்கள், வித்யா லாபம், கலைக்கியானம், பிரபுக்களிஷ்டம், கீர்த்தி, வஸ்திர பூஷணங்கள், வாகனம், புண்யதீர்த்தப் பலபிராப்தி இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

தனபாக்யாதிபதிகளுடன் கூடினல் தனபாக்யலாபங்களும் சத்திரசாமரங்களும் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

5-9-ல்இருந்தால் இராஜப்ரீதி சுகிர்தம் தேவப்ராமணபூசை தனதான்யங்கள் நிறைந்திருந்தால் விவாகசம்பிரமம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

6-8-12-ல் இருந்தால் பாவபலனுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திரதிரிகோணங்களில் தனலாபத்திலாவது சுபர்களுடன் கூடியிருந்தால் எக்கியம் அல்லது ஒருதீட்சை விவாகம் தானதருமங்கள் செபதபங்கள் தியானம் இராஜப்பிரீதி சௌக்கியம் விபசாயம் பூமிவிருத்தி முத்துரத்தினங்கள் போஜனசவுக்கியம் வாகனங்கள் பூஷணங்கள் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

6-8-12-ல் இருந்தால் அல்லது நீசனுயிருந்தால் முதலிலே சவுக்கியம் வஸ்திரபூஷணங்கள் ஆரோக்யம் தாரபுத்ராதி சவுக்கியம் இராஜநிஷ்டூரம் பசுநஷ்டம் எருமைநஷ்டம்இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

துதிய சப்தமாதிபதிகளுடன் கூடினல் அல்லது அந்தஸ்தானங்களிலிருந்தால் தேகஜாட்டியம் சுரபயம்உண்டாம்.

இதற்கு விஷ்ணுஜெபம்செய்து ஆட்டுக்கிடா அல்லது ரிஷபம் தானஞ்செய்தால் பரிகாரமாம்.

## சூரியமகாதிசையிற் கேது புத்திமாதம்-4, நாள்-6.

இதற்குப்பலன்.

அர்த்தவிரயம் தேகத்தில்வியாதி வியாகூலம் இராஜகாரியம் சுயஜனங்களால் உபத்ரவம் உண்டாம்.

புத்திநாதன்.

இலக்னுதிபதியுடன்கூடினல்புத்திமுதலிலே சௌக்யம் தனகமம் மத்தியிலும் அந்தியத்திலும் விசனம் சாவு வார்த்தையுண்டாம்.

புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியத்தில் பாபருடன் கூடினல், மண்டைக்குடைச்சல் பல்குடைச்சல் அல்லது தலைநோய் பல்நோய் நீரிழிவு பேதியாவதுகாணும். இன்னம் ஸ்தானப் பிரஷ்டமும் மித்துருக்களைத் துரோகம்பண்ணுதலும் பிதா பாட்டன்இறந்து போதலுமுண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுடன் கூடியிருந்தால் பித்தரோகபயம், சர்ப்பவிஷபீடை, தாரம் புத்ராளுக்குத் தேகபீடை உண்டாம்.

புத்திநாதன்.

இலக்னத்தில் சுபருடன்கூடினல் அர்த்தலாபம் விவாகம் ஐசுவரியம் சுபகாரியம் நல்லசத்கருமங்கள் இராஜபலம் புத்ரோத்சாகம் சந்தோஷமும் யானை குதிரை இலாபமும் உண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு இலாபத்தில் இருந்தால்சவுக்கியபலன், 3-ல் இருந்தால் காரியவிக்னம், துதியசப்த மாதிகளுடைய சம்மந்தமானல், அபமிர்த்திவுதோஷம், அல்லது மந்திரசூன்ய உபத்திரவம் உண்டாம்.

இதற்குத் துர்க்கை ஜெபம்செய்து ஆட்டுக்கிடா தானஞ் செய்தால் பரிகாரமாம்.

## சூரியமகாதிசையில் சுக்கிரபுத்திஷ-1.

இதற்குப்பலன்,

புத்திநாதன்

இந்த புத்திநாதன் கேந்திரதிரிகோணங்களில் இருந்தால், நாலுகால் ஜீவன்களால் லாபமும், போகஸ்திரீகளுடைய சவுக்கியமும், சம்பிரமும் கிராமங்களுக்குப் பிரயாணமும் பிராமணளிடத்தில் விசுவாசமும், பெரியோர்கள் தரிசனமும், இராச்சிய லாபமும், மகாசவுக்கியமுமுண்டாம்.

புத்திநாதன்.

இந்த புத்திநாதன் சொட்சேத்திரனுல் சுபபலன் சொல்லவேண்டும், பாபிகளுடன் கூடினுலும், நீசனு யிருந்தாலும்-6-8-12-ல் இருந்தாலும்புத்ராளுக்குரோகமும் அல்லதுவீடுவாசல்மண் மனைகளுக்கு ஹானியும், மாமனர்வீட்டுஜனங்களிலே வியக்கம்நாற்கால்ஜீவன் ஹானியும் உத்யோக பங்கமும், தேகத்திற்கு வியாதியும், சத்ருபீடையும், வியாகூலமும், வீட்டிலேசண்டையும். இராஜஸ்திரீ விரோதத்திலும், அற்பசவுக்யமும் மனஸ்தாபமும்உண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திரதிரிகோணத்தில் தனலாபத்தில் இலக்கினத்திற்கு தனலாபத்திலிருந்தால்,இராஜ்யம் பிராப்தியும்,இராஜப்பிரீதியும், தனபூஷணமும், உற்சாகமும், யானையும், கீர்த்தியும், சம்பத்தும்,ஸ்திரீசவுக்கியமும்,புத்திரசவுக்கியமும், பாக்கிய விருத்தியும், இராஜாக்களிடத்தில் போக்குவரத்தும், தேவப்பிராமணுளால் பக்தியும், தாரம்புத்ராளுக்கு சவுக்கியமும், வஸ்திர பூஷணலாபமும், வாகனலாபமும் உண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு-6-8-12-ல் பாபிகளுடனே கூடியிருந்தால் இராஜகோபமும், தனவிரயமும், ஸ்திரீபுத்ராளுக்கு ஹானியுமுண்டாம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிபதி சம்மந்தமானலும், அபமிர்த்திவு தோஷம்வரும், இதற்குவெள்ளாடாவது எருமையாவது தானஞ்செய்தால் பரிகாரமாம்.

சூரியமகாதிசை-முற்றிற்று

உ

கடவுள் துணை.

# சந்திரமகாதிசை வருடம்-10.

## இதற்குப்பலன்.

ஐசுவரியமும் நரவாகனமும் யானையும் சத்துருநாசமும் இஷ்டான்னபோஜனமும் சயனுதிசவுக்கியமும் தர்மார்த்த லாபமும் விபசாய விருத்தியும் புத்திர விருத்தியும் மாதுர் சவுக்கியமும் உண்டாம்.

## புத்திநாதன்.

இலக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களில் சொட்சேத்திரங்களிலாவது, தனலாபத்திலாவது, சுபவர்க்கம் உத்தமாங்கிசம் பெற்றிருந்தால், தனுர்ச்சிதமும் பசுக்கள் பூமி களத்ர புத்ரலாபங்களும், பின்னும் வித்தை புத்தியும் சம்பாத்தியமும் இராஜபூஜிதையும் உண்டாம்.

## புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியத்தில் நீசத்தில் இருந்தால் களத்ரபுத்ர தனதானியங்களுக்கு ஹானியும், சஞ்சாரமும் ஜலபயமும் சவுக்கியத்திற்குக் குறைச்சலும், முதலிலே இராஜபூஜிதையும் கீர்த்தி வந்தனுதலும் சௌக்கியமும் மத்தியில் தாரம் புத்ராள் வீடு வாசல் தனம் இதுகளிலே ஒன்றிற்கு ஹானிவருதலும் கடைசியில் வாகனமும் இஷ்டான்னபோஜனமும் பூஷணமும் இத்தியாதி சவுக்கிய பலன்கள் உண்டாம்.

# சந்திரமகாதிசையில் சந்திரபுத்தி மீ-10.

## இதற்குப்பலன்.

இராஜப்பிரீதியும் கீர்த்தியும் விவாகமும் பூத்திரோற்பத்தியும், பூமி கிராமங்கள் அதிகாரமும், வாகனமும் உண்டாம்.

## புத்திநாதன்.

சொட்சேத்ரகேந்திர திரிகோண லாபஸ்தானங்களில், சுபயுத்தனுய் சுபவீக்ஷண்யமாய் இருந்தால், இராஜ்ய லாபமும் மகா சவுக்கியமும், கீர்த்தியும், சுபபலனும் உண்டாம்.

புத்திநாதன்.

4-6-ல் பூரணபெலமாயிருந்து பாக்கிய கர்மாதிபதி சம்மந்தமானல், யானை முதலான இலாபங்களும், தேவதாபக்தி குருபக்தியும் புராணகாவியாதி கேட்கையும் புண்ணிய கீர்த்தியுமுண்டாம்.

புத்திநாதன்.

பாபயுக்தனுனல் நீசமானல் 6- 8 - 12-ல் இருந்தால் ஸ்தானப்பிரஷ்டமும் மனவியாகூலமும் கோபமும் தேகாயாசமும் இராஜமந்திரி விரோதமும் தனநாசமும் வடதிக்குப் பிரயாணமும் சமான ஜனங்களினுல் புத்திரஹானி வரும்படியான காரியம் வந்துநேரிடுதலும் உண்டாம்.

புத்திநாதன்.

4-6-க்குடையவனுவது அங்காரகனுடனேயாவது கூடினல், ஆயுதத்தினலே ஒரு உபத்திரவமும் மித்ரு பந்துக்களுக்கு ஒரு ஹானியும் தான் சேவிக்கப்பட்ட பிரபுக்கு ஹானியும் உண்டாம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிபதி அஷ்டமாதிபதிகளோடு கூடியிருந்தால், தேகசாட்டியமும், மானபங்கமும், அபமிர்த்தியுதோஷமும் வரும். இதற்கு வெள்ளை எருமை தானஞ் செய்யப்படும்.

## சந்திரமகாதிசையில் அங்காரகபுத்தி மீ -7.

இதற்குப்பலன்.

புத்திநாதன்.

இலக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களில் சொட்சேத்திரங்களிலிருந்தால், தேகாரோக்யமும்சௌபாக்கியமும் இராஜப்பிரீதியும் வஸ்திராபரணமும் பூசிதமும் யத்தினகாரிய சித்தியும் க்ஷேத்ரம் வீடுவாசல் உண்டாதலும் சொற்ப விவகாரமும் உண்டாம்.

புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியங்களில் பாபயுக்தனுயிருந்தால், அல்லது நீசத்தில் சத்ருக்ஷேத்திரத்தில்யிருந்தால், துர்க்கருமங்கள் செய்தலும் இராஜபயமும், ஒரு அபகீர்த்தியும், சுபஜெனங்களிலே நிஷ்டூரமும், கலகமும் துக்கப்படுதலும், தேசாந்திரியனும், தேகத்திலே உஷ்ணமும், மகா விசனமும், சோராக்கினி பயமும், பிணியும் உண்டாம்.

புத்திநாதன்.

சொட்சேத்திரத்தில் சுபர்திருஷ்டிபெற்று இலாபத்தில் இருந்தால் நாலுகால், சீவன்கள் இலாபமும் தனதான்ய சம்பத்தும், வாகனமும் வஸ்திராபரண லாபமும் விபசாயமும் தனசம்பத்தும்; இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

2-மிடத்திலிருந்தால், தனவிரயமும் சோராக்கினி பயமும் உண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திர திரிகோணங்களில் இலாபத்தில் பலவந்தனுடனே கூடியிருந்தாலும் இலக்கினுதிபதியுடனே கூடியிருந்தாலும் தர்மகர்மாதிபதிகளுடனே 5-மிடத்ததிபதியுடனே கூடியிருந்தாலும், இராஜமூலத்திலே இலாபமும் தனதான்ய விருத்தியும் பலவகை விருத்தியும் பின்னும் பல்லக்கு முதலான வாகனங்களும் வஸ்திர பூஷண ரத்தினுபரணமும் பூமியும் இராஜாக்கள் அபிமானமும் புத்ரமித்ரகளத்ராதிகளுக்கு சௌக்கியமும் உண்டாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு த்தியஸ்தானத்தி லிருந்தால், ரெணபீடையும் ரோகமும் ஆயாசமும் மனேவியாகூலமும் தனவிரயமும் உண்டாம்.

புத்திநாதன்.

திதியசப்தமாதிபதி அஷ்டமாதிபதிகளின் சம்மந்தமானுல், அபமிருத்து தோஷமுண்டாம். இதற்கு சிவபூசை பண்ணிவைத்தால் பரிகாரமாம்.

### சந்திரமகாதிசையில் இராகு புத்திவருஷ-1, மீ-6.

இதற்குப்பலன்.

இராகு சுபயுக்தனுய் சுபர்திருஷ்டிபெற்று இலக்னுதிபதியுடனே கூடியாவது, கேந்திர திரிகோணத்திலாவது உச்ச இராசிகளிலாவது இருந்தால், புத்திமுதலிலே சௌக்யமும் இலாபமும், சத்துருநாசமும், மத்தியில் 3 மாதம் சோரபயமும் உடனே மற்ற இராசிகளில் தனதான்ய விருத்தியும், பால்யமாயிருக்கப்பட்ட பிரபு விருத்தியும் நிருதிபக்கம் மேற்கே பிரயாணமும் போனவிடத்தில் ஜெயமும் வஸ்திர பூஷணமும் வாகனலாபமும் உண்டாம்.

புத்திநாதன்.

இராகு அங்காரகனுடன் சம்மந்தமிருந்தால், ஆயுதத்தினுல் பிராண ஹானி வரும்.

புத்திநாதன்.

இராகு அஷ்டமாதிபதி சம்மந்தமிருந்தால், பந்தனமும் விலங்கும் வரும். சுபர் சம்மந்தமிருந்தால், பிரபுக்கள்மூலத்தில் அசுவலாபம் தேகாரோக்யம் கீர்த்தி அனேக தன லாபம் ஸ்திரீ லாபம் உண்டாம். திசாநாதனுக்கு கேந்திரத்திலிருந்தால், முன்னெழுதிய பலமேயாம்.

புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியத்திலிருந்தாலும், பாபயுக்தனு யிருந்தாலும், தனவிரையமும் புத்ரகளத்ரஹானியும், கலகமும், அபமிர்த்தியு பயத்தினல் வியாதி பாபகர்மங்கள் பண்ணுவன், கிரகப்பிரவேசம்வரும், அல்லது ஸ்தானப்பிரஷ்டம் வரும், சத்ருவிருத்தியுண்டாம், விஷபீடையுண்டாம்.

புத்திநாதன்.

இராகுதிசாநாதனுக்கு இலாபத்திலிருந்தால்,இலாபம் சவுக்கியம் தனதான்யவிருத்தியும் ஜாதகன் தவிர மற்ற சுயஜனங்களுக்கு தேகத்திற் பிணியுண்டாம் அற்ப தேசசஞ்சாரம் வரும்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிபதி சம்மந்தமிருந்தாலும், அந்த ஸ்தானங்களிலிருந்தாலும், அல்லது மகாராசியிலிருந்தாலும், அஷடமாதிப்தி சம்மந்தமிருந்தாலும், தேகபிணியுண்டாம். அபமிர்த்தியு தோஷமுண்டாம். அதற்கு ஆட்டுக்கிடா தானஞ்செய்தால் தீரும்.

## சந்திரமகாதிசையில் குரு புத்திபலன் வரு-1, மீ-4.

இதற்குப்பலன்.

புத்திநாதன்.

குரு இலக்கினத்திற்கு கேந்திர திரிகோணத்தில் சொட்சேத்திரஸ்தானத்திலிருந்தால், புத்ரசவுக்யம், வாகன லாபம், தேவ. பிரர்மண பூஜை தேகாலங்காரபூஷணம், இராஜப்பிரீதிகளுமாம். இஷ்ட தேவதாப்பிரார்த்தனை கங்காதீர்த்தத்துக்குச் சமானமாயிருக்கப்பட்ட புண்ணியதீர்த்த ஸ்நான பலனும் வீட்டில் சுபசோபனமும் நாற்கால் சீவன்கள் சேர்க்கையும் வரும்.

புத்திநாதன்.

குரு சஷ்டாஷ்டமவியத்தில் அஸ்தங்கிதனுய் பாபயுக்தனுயிருந்தால், குருவுக்காவது புத்ராளுக்காவது, ஹானிவரும். அல்லது ஸ்தானப்பிரஷ்டம் வரும். தனநாசம் அல்லது வனவாசம் வீடு மிராசு வாகனம் இதுகளுக்கு ஹானி வரும்.

புத்திநாதன்.

குரு திசாநாதனுக்கு கேந்திர திரிகோணங்களில் தன லாபங்களிலிருந்தால், சுகபோஜனம் வீட்டில் கலியாண காரியங்களும், பிராமணுள் பிரபுக்கள் தரிசனமும், சத்கீர்த்தியும், விதரணையான குணங்களும் வஸ்திரபூஷணங்களும் தனலாபம் புத்ர மித்திராதிகள் விருத்தி தேவப்பிராமண பூசை குருபக்தி நித்ய அன்னதானம், எக்யாதி கருமங்கள், இராஜாக்கள் அநுசரிப்பு, யத்தன காரியத்தில் ஜெயமும், சாஸ்விதமானபொருள் தேடுகையும் உண்டாம்.

புத்திநாதன்.

துதிய சப்தமாதிபதிகளுடைய சம்மந்தமிருந்தால், அபமிர்த்திவு தோஷம் வரும். குருவுக்குச் சகஸ்திரநாம ஜெபம் செய்வித்து சொர்ன தானஞ் செய்தால் தீரும்.

## சந்திரமகாதிசையிற் சனிபுத்தி ௵-1, ௴-7.

இதற்குப்பலன்.

சனி கேந்திர திரிகோணங்களில் இலாபத்திலிருந்தால், அற்ப சவுக்கியமும், சொற்ப லாபமும், காரிய விசனமும், பந்துத் துவேஷமும் கிஞ்சித்பயமும் துக்கமும், விசனமும் நாற்கால் சீவன் நஷ்டமும் தேசாந்திரமும் வரும்.

புத்திநாதன்.

சனி திசாநாதனுக்கு கேந்திர திரிகோண லாபங்களில் உச்ச சொட்சேத்திரங்களில் 3-6-11-ல் இருந்தால், பூமிலாபம், புத்ர லாபம், நூதன கிரகமுண்டாம். கலியாணகாரியங்கள் சுகந்தபரிமள புஷ்பாலங்காரம் பூஷணலாபம் இராஜ சம்பாஷணையும் நினைத்த காரியம் கைகூடுதலும், கிராமாதிகாரமும் பூமி சேர்க்கையும் பத்துப்பேர்களுக்குத் தலைவனுவன்.

புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியத்தில் நீசத்திலிருந்து, சுபருடன்கூடினுல், சுபபலத்தைக் கொடுப்பான். பாபனுடன் கூடினுல், நீசஸ்திரீகமனம் பண்ணுவன். புத்ரதாரரோகம் பிதுர்மாதுர் ஹானி வரும். அஜீர்ணமானதின்பேரில் குன்மம் வரும் அல்லது வாத பித்தங்களால் ஒருரோகமாவது சம்பவிக்கும்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிபதிகளுடன் கூடினுல் வாதசுரமாகவும் தேகத்திற்குப் பிணிகாணும். நல்லெண்ணெய் தானம்பண்ணத் தீரும்.

## சந்திரமகாதிசையில் புதன் புத்திவரு-1, மீ-6.

இதற்குப்பலன்.

புதன் கேந்திரகோணங்களில் சொட்சேத்திரங்களில் தன லாபங்களிலிருந்தால், இராஜப்பிரீதியும், அபுரூபமானவஸ்திரமும், அசுவ லாபமும், வித்யா விநோதங்களில் சம்பிரமமான கேள்வி யும், வியாபார மூலமாய் இலாபங்கள் கிடைப்பதும், சுயஜெனங் களால் சந்தோஷங்களும் ஒருகாரிய மூலமாய், தனவிரயமும், வரும். ஞானமுண்டாம், விதரணையான குணங்கள் சாஸ்திரவந்த னுவன். வாகனம் குடைகளுண்டாம்.

புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியத்திலே நீசத்திலே பாபயுக்தனுயிருந்தால், முதலிலே தேகப்பிணிகாணும் தாரம் புத்ராளுக்கு வாதபித்தம்அ ஜீர்ணங்களால் பிணிகாணும். தேசாந்திரம் போகவரும் இராஜ பயம் சோரபயம் அக்கினிபயமுண்டாம்.

புத்திநாதன்.

இலக்கினுதிபதியுடன்கூடினுல் வந்தவுடன் சௌபாக்கிய பல னுய் திரவியவருத்துண்டாய் இராஜப்ரீதி யுண்டாய் சுபர் சுபபல னுக நடக்கும்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால், அல்லது அஷ்டமத் தில் பாபருடன் கூடியிருந்தால், சிரரோகமும் நோய்வியாகூல மும் துஷ்டகிருத்தியான காரியவிக்னங்களும் பயமுமாம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன் சம்மந்தமானுல், அபமிருத்து தோஷம்வரும். அதற்கு விஷ்ணு ஜெபம் செய்தால் தீரும்.

## சந்திரமகாதிசையில் கேது புத்தி மீ-7.

இதற்குப்பலன்.

கேது கேந்திர திரிகோணங்களில் சுபருடன் கூடினுலும், அல்லது இலக்கினுதிபதியுடன் கூடி உச்சத்திலிருந்தாலும், சுபர் பார்வைபெற்றிருந்தாலும், கலியாணசம்பத்து விபசாயம் கூடுதல் நாற்கால் ஜீவலாபம் இராஜப்பிரீதியுமாம். இந்தஸ்தானங்களில் பாபயுக்தனு யிருந்தால், தேசதேசங்கள் சுற்றுகிறதும், சூன்யா ரோகம்சத்துருபீடை சண்டைகூச்சல் விவகாரம்பேசுகிறதுமாம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன் சனியுடன் குளிகனுடன் கூடினுல், மரணமுண்டாம். அல்லது தோஷமாவது வரும், அதற்கு வெள் ளியினுல் நாகர் பண்ணி தானம் செய்தால் தீரும்.

## சந்திரமகாதிசையில் சுக்கிரபுத்தி வரு-1, மீ-8.

### இதற்குப் பலன்.

சுக்கிரன் இலக்கினத்திற்கு கேந்திர திரிகோணங்களில் இலாபத்தில் பலவந்தனோடே கூடியிருந்தால் இராஜ்யலாபம் வரும்.

### புத்திநாதன்.

2-4-7-லிருந்தாலும், அந்த வீட்டுக்காரனுடன் கூடினாலும், புதையலகப்படும். அல்லது இராஜாக்களிடத்தில் வாகன பூஷணமுண்டாம். நாற்கால் ஜீவன் லாபம் புத்ரதாரங்கள் சவுக்யம் நூதன வஸ்துக்களுண்டாம். நித்தியம் இஷ்டான்ன போஜனம் சுகந்த புஷ்பாலங்கிர்தமான பஞ்சணையின்பேரில் படுக்கையும் மனதிற்கிஷ்டமான ஸ்திரீ சவுக்யம் சம்பிரமங்களுமாம்.

### புத்திநாதன்.

திசாநாதனுடன் கூடினால் இராச்சியம் அதிகாரஞ் செய்வன். கிரகத்தில் இலட்சுமி விலாசமாம் சுபகாரியம் சம்பிரமமாய் நடக்கும். மாதுர் பிதுர் சவுக்கியமுண்டாம். கீர்த்தி-வித்தை சுகமுண்டாம்.

### புத்திநாதன்.

நீசனாய் அஸ்தங்கிதனாய் பாபயுக்தனாயிருந்தால், பின்னும் அங்காரகன் பார்வைபெற்றிருந்தாலும், பூமிநாசம் சிரவேதனை அலைச்சல்-திரிச்சல், பெண்சாதிவிசனம், நாற்கால் ஜீவஹானி, இராஜநிஷ்டூரம். உச்சத்தில் சொட்சேத்திரத்தில் 9-ம் வீட்டுக்காரனுடன் கூடியிருந்தாலும் பாக்யவிருத்தி, தபோவிர்த்தி, தானதருமங்கள், தேவதாபக்தி, தேவப்பிராமணபூஜை பூமிலாபமாம் தாரபுத்திரபாக்கியமாம் பூஷணங்கள் மனோத்சாகமாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் திசாநாதனுக்கு கேந்திர திரிகேணங்களில் தனலாபத்திலிருந்தால் இராஜப்பிரீதி தன்னுடைய ஸ்திரீ அதிககீர்த்தியாய் சுகம் வரும் வீடுவாசல் விருத்தியுண்டாம். வித்யாப்பிரசங்கம் பண்ணுவன் வாகனம் பசுக்கள் விவசாயம் தனதான்யம் திரிகாலங்களிலும் பிராமண போஜனம் சர்க்கரை தேன் முதலான நற்போஜனமும் உண்டாம்.

### புத்திநாதன்.

திசாநாதனுக்கு 6-8-12-ல் இருந்தால் பாபயுக்தனானால் மகாகஷ்டம் சர்வஜனங்களுக்கும் சத்துருவாவன் கலகம் பந்துத்துவேஷம், பரஸ்திரீபோகம் சத்துருவிர்த்தி சத்துருபயம் போகபாக்கியங்களுக்குக் குறைச்சலும் தாரம் புத்ராளுக்கு ஹானியும் அன்னியதேச வாசமும் இராஜாக்களாலுபகாரமும் ரோகமும் வரும்.

### புத்திநாதன்.

சுக்கிரன் துதியசப்தமாதிகளுடன் கூடினுல், அபமிருத்து தோஷம் வரும். அதற்கு ருத்ரஜெபம் வெள்ளி தானம் பண்ணத் தீரும்.

## சந்திரமகாதிசையில் சூரியபுத்தி மீ-6.

### இதற்குப் பலன்.

சொட்சேத்திர கேந்திரங்களில் தனலாபத்தில் பலவந்தனுயிருந்தால் நஷ்டமான திரவியலாபம் நஷ்டமான இராச்சியலாபம் வீட்டில் சுப சோபனுதிகள் மித்திரர்களினுல் பிரபுக்கள் பிரீதியுண்டாம். பூமிகிராமலாபமாம் கடைசியில் தேகத்திற்கு ஒரு பிணியுண்டாம்.

### புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியத்தில் பாபயுக்தனுய் பாபர்திருஷ்டி பெற்றிருந்தால்,மனேவியாதி குன்மம் வாதபித்தம் அதிகரிக்கும். நாற்கால்சீவனுக்கு ஹானி பிதுர்வர்க்கத்தாருக்கு விசனமும் இலக்கினுதிபதி பாக்கியாதிபதியுடன் கூடினுல், முதலில் சௌக்கியம் அந்தியத்தில் மானபங்கபலன் விக்கினமானபலன் மாதா பிதாவுக்கு ஹானி வரும்.

### புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திரகோணலாபத்திலிருந்தால், தேக சவுக்கியம்,மனேத்சாகம், வஸ்திரபூஷணலாபம், சந்தோஷமாம், சாஸ்திரவிசாரணேயும் இராஜப்பிரீதியுமுண்டாம்.

### புத்திநாதன்.

திசாநாதனுக்கு-6-8-12-ல் பாபயுக்தனுயிருந்தால், இராஜாக்கள் திருடர் அக்கினிபயமுண்டாம். சுரம்குன்மம் அதிசாரப்பீடையும், துதியசப்தமாதிபதிசம்மந்தமானுல்அபமிருத்துதோஷமாம் அதற்கு சூரியநமஸ்காரம் வெள்ளாடு தானம் செய்தால் தீரும்.

சந்திரமகாதிசை-முற்றிற்று

# அங்காரகமகாதிசை வரு-7.

### இதற்குப்பலன்.

இராஜாக்களால்உபத்திரவம்வரும்சோரபயம் அக்கினிபயம் விசனம் சுரரோகம் கலகம் வீட்டுக்கு ஹானி தரித்திரம் துக்கம் அன்னியதேசம்போகவரும் புத்திரஹானி மானபங்கம்வரும்.

### புத்திநாதன்.

அங்காரகன் சொட்சேத்திரனுய்-3-6-10-லிருந்தால்இராசமூலமாய் அர்த்தலாபம்புத்ரமித்ரகளத்ராதி சகோதரலாபம்வரும்.

### புத்திநாதன்.

அங்காரகன் துற்பெலனுய் பாபயுக்தனுனல், புத்ரமித்ரர் வீடுவாசல்பசுக்களுக்குஹானிவரும். பின்னும் குன்மாதிரோகங் களும் சம்பவித்து சகோதரர் ஹானிவரும். சுபனேடுகூடினுல், சுபபலத்தைக்கொடுப்பன் முதலிலே அர்த்தநாசம். மத்தியில் சோராக்கினிபயம் அந்தியத்தில் ஆயுதபயம் உண்டாம்.

## குஜன்மகாதிசையில் குஜன்புத்தி மீ 4-நாள்-27.

### இதற்குப் பலன்.

கேந்திரகோணத்தில் இலக்னதிபதியுடன் கூடினுல் கொஞ் சம் சௌக்யமும் கொஞ்சதனலாபம் ஆலசியங்கொடுத்து கடை சியில் சௌக்யமும் பின்னும்தாயாதிகள் வியாச்சியமும் பிதுர் மாதுர் வாக்கியத்தில் விரோதமுண்டாம்.

### புத்திநாதன்.

அங்காரகன் சொட்சேத்திர உச்சனுய் சுயயுக்தனுய் சுப திருஷ்டி பெற்றிருந்தால், இராஜமூலத்தில் அர்த்தமுண்டாம். இலட்சுமிகடாட்சமும் நஷ்டமான பூமிகிராமங்களும் பால்பசு தனதான்ய விருத்தியுமுண்டாம்.

### புத்திநாதன்.

அங்காரகன் நீச அஸ்தங்கிதம் சத்ருக்ஷேத்ரம்பெற்று சஷ் டாஷ்டமவியத்திலிருந்தால், மானபங்கம், மனஸ்தாபம், சோராக் கினி இராஜபயம் சகோதரத் துவேஷம், பந்துத்துவேஷம் காரா கிரகப்பிரவேஷம் இரத்தபயமாம்.

### புத்திநாதன்.

அங்காரகன் அம்சையில் உச்சம்பெற்று சுபர் பார்வை பெற் றிருந்தால் வீடுகளுண்டாம். பிராசுகள் பசுக்கள் எருமைகள் இஷ்டமான காரியங்களுங் கைகூடும்.

### புத்திநாதன்.

துதியசப்தமாதிபதிகளுடன் கூடினுல் தேகத்திற்கு சாட்டி யம்வரும் அதற்குச்சுப்பிரமணியர் செபஞ்செய்யவும்.

## அங்காரகமகாதிசையில் இராகுபுத்திவருஷ.1-நாள்-18.

### இதற்குப்பலன்.

கலகம்மனேவியாகூலம் உத்யோக ஹானி அர்த்தநாசம் நாற்கால் ஜீவஹானி சத்துருவிருத்தி இராஜத்துவேஷ பயமும் உண்டாம்.

புத்திநாதன்.

இராகுசுபயுக்தனுப் சுபர்திருஷ்டிபெற்று அல்லதுஇலக்னதிபதியுடன்கூடி கேந்திரகோணத்திலிருந்தால் கிராமபூமிகள்உத்தியோகலாபம் தனலாபம் களத்ரசவுக்கியம் விவசாயங்கூடுதல், சேதுஸ்தானம் அல்லது அதற்குச்சமானமான புண்ணியதீர்த்தபலன். அன்னிய தேசகமனம் பந்துஜனங்களில்விசனமும் வழியில் திருடர்பயம் உடனே பலபிராப்தியானகாரியங்கள் இராஜாக்கள் அநுக்கிரகத்தால் குருபக்தியடையலுமாம்.

புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியத்தில் சுபதிருஷ்டிபெற்றிருந்தால், சோரபயம் மரணபயம், அக்கினிபயம் நாற்கால்சீவலாபம் வாதபித்தக்ஷயரோகம் கிரகப்பிரவேசம்வரும்.

புத்திநாதன்.

இராகு இலக்கினதிபதியுடன் கூடினுலும் அல்லது திசாநாதனுக்கு இலாபத்திலிருந்தாலும், பிதாவுக்கு இலாபம், பயிர் பசுக்கள் மன சந்தோஷவிருத்தியாம், இராஜப்பிரீதியுண்டாம் முதவில் தேகசாட்டியம் மத்தியில் சுபா சுபம் அந்தியத்தில் மேலெழுதிய சவுக்ய பலனுண்டாம்.

புத்திநாதன்.

இராகு து தீய சப் த ம த் தி யிலிருந்தால், அபமிருத்து தோஷம் வரும், அதற்குச் சேவல் தானஞ்செய்தால் தீரும்.

## அங்காரகமகாதிசையிற் குரு புத்தி மீ-11, நாள்-6.

இதற்குப்பலன்.

புத்திநாதன்.

குருகேந்திர திரிகோணங்களி லிருந்தால், இராஜாக்களால் கீர்த்தி வாகனுபரணம் ஒரு இராஜகாரியத்திற்கு ஆரம்பிக்கிறதும் அதை இராஜாக்களால் தடுக்கிறதும், மறுபடியும் இராஜபிரசாதத்தினுல் நினைத்தகாரியங் கூடுதலும், மித்ராளாகிய பிரபுக்களால் பந்தமாகிறது. சொட்சேத்திரங்களில் உச்சாம்சவோரையில் சுயாம்சையில் இருந்தாலும், சுபனுடன் கூடினுலும், இலக்கினத்திருந்தாலும், இராஜமந்திரிகளால் மிகுதியும் ஐசுவரிய வந்தனும்.

புத்திநாதன்.

குருஸ்தானதிபதியினலே பார்வை பெற்றிருந்தால் விவசாயம்பசுக்கள் தனதான்யசம்பத்துண்டாய் இராஜாக்களால் பூசிதனய் அன்னியபிரபுக்கள் தரிசனங்கிடைக்கும் நினைத்தகாரியம் கைகூடும்.

### புத்திநாதன்.

குருசஷ்டாஷ்டமவியத்தில் பாபயுக்தனுய் பாபர்பார்வையி லிருந்தால் நீசனுல்அஸ்தங்கிதனுய்பலயீனனுயிருந்தால்,சோராக் னிபயம் இராஜாக்களாலுபத்திரவம்வரும். விஷபயம் ரோகம்போ ஜன சூக்ஷமம் நற்போஜனமில்லாமலும் பந்துநாசம் ஸ்தானபிரஷ் டமாய் போனவிடத்தில் சகோதராளாலே துக்கமும்உண்டாம்.

### புத்திநாதன்.

திசாநாதனுக்குக் கேந்திர திரிகோணத்திலிருந்தால், இரா ஜப்பிரீதியுண்டு சகோதர சௌக்கியம் தனசம்பத்து வீடுவாசல் பிராசுகளுண்டாம். கிரகத்தில்கலியாண சம்பிரமங்கள் தேகா ரோக்கியங்கள் புத்ரமித்ராளுக்கு விவாகமும் மாதுர்பிதுர் சௌக்கியமுமாம்.

### புத்திநாதன்

குரு திசாநாசனுக்கு -6-8-12-ல் பாபயுக்தனுய் பாபர் திருஷ்டியிருந்தால், குரூரமானகர்மங்கள்செய்கையும் சத்ருத்வ மும் பலபுத்தியும் சாவுவார்த்தை கேட்கிறதுமாம் ஸ்தானப் பிரஷ்டமும் வரும்.

### புத்திநாதன்.

குரு துதியசப்த மாதிபதிகளுடன் கூடினுல், அபமிருத்து சுரம்வரும் அதற்கு சுப்பிரமணியர் சகஸ்திரநாமசெபம் சொர்ன தானம் பண்ணத் தீரும்.

## அங்காரகமகாதிசையிற் சனிபுத்தி-வரு-1-மீ-1-நாள்-9.

### இதற்குப் பலன்.

சனி கேந்திரகோண சொட்சேத்திரத்தில் அம்சையில் உச்சனுயிருந்தாலும், சுயாம்சையாயிருந்தாலும், இராச்சிய சுகம் கீர்த்தியுண்டாம். தனதானியவிருத்தியும் புத்திரபவுத்திர விருத்தியும், பசு விருத்தியும் தன்னுடைய சனிவாரத்திலும் மாதங்களிலும் இராஜப்பிரீதியும் சம்பத்துமுண்டாம்.

### புத்திநாதன்.

சனி நீசத்தில் சத்துருஸ்தானத்திலிருக்க, அந்த ராசிகள் இலக்கினத்திற்கு சஷ்டாஷ்டமவியமாயிருந்தால், மிலேச்சப் பிரபுக்களால் பயமும் தனதான்ய நாசமுமாம்.

### புத்திநாதன்.

சனி துதியசப்தமாதிபதிகளுடனேகூடி பாபயுக்தனுனல், தனநாசம் அலேச்சல் திரிச்சல் இராஜத் துவேஷம் சோராக்னி

ப்யம் இராஜபயம், சகோதர நாசம் நிகளபந்தனம் தற்காலத்தில் ரோகம் அன்னியதேசத்திற்கனுப்பிவிடும். ஜீவனத்திற்கு ஹானியும் ஆலசியமும் கலகம் சத்ருபீடை, புத்ரபீடை, கைகால் நோய் இராஜாக்கள் தனத்தை அடித்து பறிப்பார்கள். மாதுர் பிதுர் பீடை ஆத்ம பந்து ஜனவிசனமாம்.

## அங்காரகமகாதிசையிற் புதன் புத்திமீ-11, நாள்-27.

### இதற்குப்பலன்.

புதன் கேந்திரகோணத்திலிருந்தால் புண்யகதைகள் கேட்கிறதும் எதுவாகிலும் தானங்கொடுத்தாலும் தருமபுத்தியும் கீர்த்தியும் நீதியான நடக்கையும் நித்யஇஷ்டான்ன போஜனமும் வாகன பூஷணம் பசுலாபம் கியானம் அதிகசௌக்கியமுமாம்.

### புத்திநாதன்.

புதன்நீசனுய் அஸ்தங்கிதனுய் சஷ்டாஷ்டமவியத்திலிருந்தால், மார்புநோயும் பந்துஜனமும்தாரம் புத்ராளுக்குநஷ்டமும் அல்லது நாற்கால்சீவ ஹானியுமாம்.

### புத்திநாதன்.

புதன்திசாநாதனுடன் கூடினுல், சத்துருவிருத்தியும் மகாபயமும் அன்னியதேசாபிமானமும் நானுவிதவியாதியும் ராஜவிரோதமும் கலகமுமாம்.

### புத்திநாதன்.

புதன்திசாநாதனுக்கு கேந்திரதிரிகோணத்தில் உச்சலாபத்திலிருந்தால், அனேக ஜனங்களுக்கு நாதனுகவும் இராஜப்ரீதியுண்டாகுதல் மிர்தங்கவாத்தியம் சேனுபதிபத்யம்வரும் பின்னும் வித்யா விநோதங்களிற்பிரீதியுள்ளவனுய் வஸ்திரபூஷண வாகனம் புத்ரர்களுக்குப்பெலமுண்டாம் கிரகத்தில் இலட்சுமி விலாசம் பொருந்தியிருக்கும்.

### புத்திநாதன்.

புதன்-6-8-12-ல் பாபனுடன் நின்ருல் ஒருமாதவரைக்கும் மிருதியும் குரூரபலன் கொடுக்கும் ஈனசாதி விரோதம் சத்கருமங்கள் செய்வன். சோராக்னிபயம் ஒரு ஊருக்குப்போகையில் ரெணபயம் வரும் கலகம் சமுசயமில்லாமற் கொடுப்பன்.

### புத்திநாதன்.

புதன் துதிய சப்தமாதிகளுடன் கூடினுல், அபமிருத்து தோஷம் வரும் அதற்குஅஸ்வதானம் விஷணுசெபம்பண்ணினுல் தீரும்

## அங்காரகமகாதிசையிற் கேதுபுத்திமீ-4-நாள்-27.

### இதற்குப்பலன்

கேது கேந்திரகோணங்களில் சொட்சேத்திரனுய் சுபருடன் கூடினுல், அல்லது இலக்னுதிபதியுடன் கூடினுல், அற்பசௌக்யம் சொற்பலாபம் அதிகச்செலவு புத்திமுதலில் மத்திபம் இப்படி கொடுத்து உடனே பூமிலாபம் சுபகாரியங்கள் இராஜசினேகிதம் தனலாபம் நூதனப்பிரபுக்கள் நேசமாம் கடைசியில் கஷ்டபலன் உண்டாம்.

### புத்திநாதன்.

சஷ்டாஷ்டமவியத்தில் சொட்சேத்திரனுனுல், இலக்னுதியுடன்கூடினுல், புத்ர தாரங்கள் விருத்தியும் ஆரோக்யமும் ஐசுவரியமும் சுபபலனுமாம்.

### புத்திநாதன்.

கேது திசாநாதனுக்கு கேந்திரதிரிகோணங்களில் பாபியுடன்கூடினுல், விசனம் காரியவிக்னம் மனேபயம் இருந்தாற்போலிருந்து சத்துருஉண்டாவன் சுயஜனங்களால் உபத்ரவம் வரும். பிராணத்திற்கு பயமுண்டாம் பிராணமரணம் அன்னியதேசகமனமுண்டாம் போனவிடத்தில் சௌக்யபலனும்.

### புத்திநாதன்.

கேது இலாபஸ்தானத்தில் சுபயுக்தனுயிருந்தால், முதலில் அற்ப சௌக்யம் மத்தியில் விசனம் எத்தனித்த காரியங்கள் விகாதம் சகல ஜனங்களுக்கும் பொல்லாதவனுய் கடைசியில் சவுக்கியபலனும்.

### புத்திநாதன்.

கேது திசாநாதனுக்கு-6-8-12-ல் பாபயுக்தனுனுல், கலகம் பலநோய் சோரபயம் சகோதரனுக்கு அரிஷ்டமாம்.

### புத்திநாதன்.

கேது துதிய சப்தமத்திலிருந்தால், அரிஷ்டமுண்டாம் அதற்கு ஆட்டுக்கிடா தானஞ்செய்தால் பரிகாரமாம்.

## அங்காரக மகாதிசையில் சுக்கிரபுத்தி வருடம்-1, மீ 2.

### இதற்குப் பலன்.

சுக்கிரன் கேந்திர திரிகோணத்திலிருந்தால், வந்தவுடனே புண்ணியதீர்த்தஸ்நானம் தேவதா தரிசனம், அன்னியதேசம் போனவன் ஊரில் வந்து சேர்வன். கெந்தபரிமளாதிகள்

தரித்துக்கொள்கிறதும் தான தர்மம் செய்வன். தடாகமுண்டாக்குகிறதும், சேனாதிபத்யம் வரும். யாதொரு காரியத்திலுஞ் செய்ய தீரமுண்டாகும்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு-6-8-12-ல் இருந்தால் விசனமே பெரிதாம். கிரகப்பிரவேசமும் இராஜாவினால் ஆக்கினைரோகம் ஆயுதபீடை பயம் சோராக்கினிபயம் தனமில்லாமையுமாம்.

புத்திநாதன்.

சுக்கிரன் துதிய சப்தமாதிகளுடன் கூடினால் தேகசாட்டியம் வரும். அற்கு வெள்ளெருமை தானம்பண்ணினால் தீரும்.

## அங்காரக மகாதிசையில் சூரியபுத்தி மீ-4-நாள்-6.

இதற்குப் பலன்.

சூரியன் கேந்திர திரிகோணங்களில் சொட்சேத்திரங்களில் இருந்தால் சௌக்யமாய் இராஜப்பிரீதியுண்டாம், கீர்த்தியுண்டாம், கிஞ்சித்திரிச்சலுண்டாம். முதலில் கஷ்டபலன் மத்தியில் சௌக்யம் அந்தியத்தில் விசனம் அன்னியதேசம் போனவிடத்தில் சோரபயமுண்டாம்.

புத்திநாதன்.

சூரியன் இலக்கினாதிபதியுடன்கூடினால், தன தானியவிருத்தி மனது சந்தோஷம் வரும் வஸ்திரபூஷணலங்காரமுமாம்.

புத்திநாதன்.

சூரியன் திசாநாதனுக்கு கேந்திரகோணத்திலிருந்தால் கொஞ்சந் தனலாபம் வீட்டில் சுபகாரியமுண்டாம் விவசாயங் கூடுதலாம் இராஜதரிசனம்.

புத்திநாதன்

சூரியன் திசாநாதனுக்கு-6-8-12-லிருந்தால் எத்தனகாரியங் குறைந்தாலும் பயம் ரோகம் வரும் இதற்குச் சூரியப்பிரீதி ஸ்நானம் பண்ணினால் தீரும்.

## அங்காரக மகாதிசையில் சந்திரபுத்தி மீ-7.

இதற்குப் பலன்.

சந்திரன் சொட்சேத்திர கேந்திரகோணத்தில் இலாபத்திவிருந்தால், புண்யதீர்த்தஸ்நானம் தேவதரிசனம் இராஜப்பிரசாதம் சௌபாக்கியம் விவாகம் புத்ரசம்பத்தும் தடாகம் தருமசித்தியும் சத்கருமங்கள் செய்வன். வீட்டில் இலட்சுமி கடாட்சம் பொருந்தியிருக்கும். பின்னும் சகோதர சௌக்யம் ஐசுவரிய

முண்டாம். நற்போஜனம் பசுவாகனம் சம்பிரமம் பூரணச்சந்திரனால் பூரணபலன் பின்னும்வடக்குத்திக்கில் பிரயாணம்போனவிடத்தில் இராஜதேவதரிசனம்.

புத்திநாதன்

நீசத்தில் சத்துருக்ஷேத்ரத்திலிருந்தாலும்-6-8-12-லிருந்தாலும் மரணமுண்டாம் இராசபுத்தி இராஜாக்களால்பயமுண்டாம் பசு தனதான்யத்திற்குக் குறைச்சல்வரும்.

புத்திநாதன்.

சந்திரன் களத்ரஸ்தானத்ததிபதியுடனும் பாக்யாதியுடனுங்கூடினால் அல்லது குருவுடனுங்கூடி பார்வைபெற்றிருந்தால் இராச்சியபாரமுண்டாம். சந்தன புஷ்பாலங்கார பூஷணத்தினுடனிருப்பான். தடாகம்புண்ய க்ஷேத்ரதருமங்கள் பண்ணுவன். கியானம் தேவப்பிராமணபூசைசெய்வான்.

புத்திநாதன்

சந்திரன் திசாநாதனுக்கு கேந்திரகோணலாபத்தில் நின்றால் பிதாவுக்குசவுக்யம் புராணகாவியங்கேட்பன் சேனாதிபத்யமுண்டாம். யுத்தத்தில் ஜெயம் வரும் சுய ஜனங்களால் சௌக்கியமுண்டாம்.

புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு - 6 - 8 - 12-லிருந்தால் இராஜயோகம் துக்கமுண்டாம். மனதிற்குப் பீடை பிடித்தாற்போல புத்திரர் சம்பவிக்கும்.

புத்திநாதன்.

சந்திரன் துதிய சப்தமாதி பதிகளுடன் கூடினால், அவமிருத்து தோஷமாம். அதற்கு துர்க்கை ஜெபம் வெள்ளைப் புரவி தானஞ் செய்யவும்.

அங்காரகமகா திசை முற்றிற்று.

---

# இராகுமகாதிசை—வருஷம்-18.

இதற்குப்பலன்.

நாளுக்குநாள் புத்தி குறைச்சலாயிருக்கும். வியசனத்தை ரோகத்தைக் கொடுப்பான், துக்கத்தைக் கொடுப்பான். பாப கன்மங்கள் செய்யப்பட்ட புத்தியைக் கொடுப்பன். வெகு நஷ்டத்தைக்கொடுத்து தரித்திரத்தையும் கொடுப்பன்.

புத்திநாதன்.

இராகு 3 - 6 - 10 - 11-லிருந்தாலும், அல்லது உச்சராசியி லிருந்தாலும், இராச்சிய லாபம் சுற்றத்தார் சௌக்கியம் விவசா யம் அர்த்த லாபம் மேலெழுதினபடி இல்லாவிட்டால் கஷ்டத் தைக் கொடுப்பன் குன்மம் க்ஷயரோகம் பித்தரோகம் வரும் பொருளை இராஜாக்கள் பரித்துக்கொள்வர். முதலில் ரோகாக் கினி பயம், இராஜ பயம் மத்தியில் அர்த்த லாபம் அந்தியத்தில் சௌக்கிய பலனும். பாபயுக்தனு யிருந்தால் கடைசியில் தேக பீடை வரும். அல்லது நிகளபந்தனம் ஸ்தானப் பிரட்டம் வரும்.

## இராகுமகாதிசையில் இராகுபுத்திவூ-2, மீ-8,-நாள்12.

இதற்குப்பலன்.

தன தானிய நாசம் சத்துரு பீடை பயம் வாதரோகம் சூலே நிலைவிட்டுப்பேருதலும், மனேவியாகூலமும் தாரம் புத்ராளுக்கு ஹானியுமாம்.

புத்திநாதன்.

இலக்கினுதிபதியுடன் கூடினுல், தேசதேசத்திற்கு சஞ்சா ரம் செய்வன், கடகத்தில் ரிஷபத்தில் கன்னியில்இருந்தால்முதலி லாவது அந்தியத்திலாவது இராஜப்பிரீதியும் கீர்த்தியும் தேசாந் திர ஐசுவரியங்களும் வஸ்திராபரண சௌக்யம் சேனுதிபத்யம் புத்திர லாபமுண்டாம், மேற்குத் திசையிற் பிரயாணமும் போனவிடத்தில் வாகனுதி லாபமுமுண்டாம், சுபருடன் கூடி னுல் சுபதிருஷ்டி பெற்றிருந்தாலும், பிதுர் அரிட்டம் வரும்.

புத்திநாதன்.

2-9-இலக்கினத்தில் பாபயுக்தனுனல் அதிகமுங் கஷ்டம். மாதுர் பிதுர்களுக்குக் கஷ்டம், புத்ரசோபம் நாற்கால் சீவ நஷ் டம் அஜீரணத்தாலுபத்திரவமும் சமானமான ஜனங்களால் விசனமுமாம்.

புத்திநாதன்.

கேந்திரகோண லாபத்தில் சுயபக்தனுயிருந்தால், வீடு வாசல் மிராசுகள் விருத்தியுண்டாம், இலட்சுமி கடாட்சமுண் டாம். துர்க்கை ஜெபஞ்செய்தால் சௌக்கியமாம்.

## இராகுதிசையில் குருபுத்திவூ-2, மீ-4, நாள்-24.

இதற்குப்பலன்.

கேந்திர திரிகோண சொட்சேத்திரத்தில் இலாபத்தில் பின்னும் பரம உச்சனுகயிருந்தால் இராஜாக்கள் பூசிதனுய் இராஜ யோகத்தில் சம்மந்தப்படுவன். நாளுக்குநாள் சந்திரன் வளரு

கிறதுபோல் ஐசுவரிய விருத்தியாகும். வாகன யோகமும் பசுக்கள் சேரும். நிருதிமூலையிலாவது மேற்கேயாவது பிரயாணம் வரும். போனவிடத்தில் இராஜதரிசனமுண்டாம். அதன் காரிய சித்தியும் மறுபடி உடனே ஊருக்கு வருவன். பிராணபூஜை யாத்திரை சத்கருமங்கள் செய்வன். இஷ்டமான போஜனஞ் செய்வன்.

### புத்திநாதன்.

குரு நீசனாய் அஸ்தங்கிதனாய் சத்துரு வீட்டில் 6-8-12-ல் பாபயுக்தனானால், நித்தியம் பாபகன்மத்தைப் பண்ணுவன். புத்ரகளத்ர பீடை தனவிரயம் மார்புநோய் காணும், ஸ்தானப் பிரஷ்டம் வரும்.

### புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திரகோணங்களில் தனலாபத்திலிருந்தால், வீடு மிராசுகள் போஜன சவுக்கியம் பூஷணம் தேகாரோக்கியமாம்.

### புத்திநாதன்.

திசாநாதனுக்கு-8-12-ல் பாபயுக்தனாயிருந்தால் தனச்சேதம் இராஜகோபம், சத்துரு பீடை, மனஸ்தாபம், அன்னிய தேச பிரயாணம், அஜீரண உபத்திரவம், முற்பாதி தேகபீடையிற் பாதி சௌக்கியம் சுபருடன் கூடினால் சுபபலம் துதிய சப்தமத்திபிலிருந்தால், அஜீரணத்தால் சுரம் வரும். அதற்கு சொர்ன தானம் செய்யவும்.

## இராகுமகாதிசையில் சனிபுத்தி வரு-2, -மீ-10-நாள்-6.

### இதற்குப்பலன்.

சனி கேந்திரகோணத்திலும் சொட்சேத்திர மூலத்திரிகோணத்திலும், இலக்கினாதிபதியுடன் கூடினாலும், வாகன லாபம், இராஜபயம், விவாகம், சுபசோபனாதிகள், புண்யகாரியம் தடாகம் சுத்தப்பிரபுக்க ளிஷ்டமாகிறதும் தீவுகளுடைய வஸ்துக்கள் இலாபம், தன்னுடைய பிரபு தனக்கு சவுக்கியத்தைக் கொடுப்பான்.

### புத்திநாதன்.

சனி இலக்கினத்திற்கு -6-8-12-ல் தனத்தில் நீ சத்தில் சத்ருக்ஷேத்ரனானால், பந்தனம், க்ஷயரோகம், தேசசுகமனம், ஆபத்தான பந்துஜன மனஸ்தாபம் மாதுர் ஜனங்களுடைய துவேஷம் இராஜகோபம் சகலத்திற்கும் குறைச்சலாம்.

புத்திநாதன்.

சனி திசாநாதனுக்கு கேந்திரகோண லாபத்தில் பாபயுக்தனுனல், இராஜபீடை, தாரம் புத்ரபீடை புக்திமுதலில் சுப பலன். இராஜமூலத்தில் அர்த்தலாபம் உடனே ஸ்தானபிரஷ்டம் மனஸ்தாபம் ஆஸ்திகளுக்கெல்லாம் குறைச்சலாம்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு 6-8-12-ல் பாபயுக்தனுனல் மார்பு நோய் காணும் விஷபயம், அக்கினி பயம், இராஜ பயம் க்ஷயரோகம், குன்ம ரோகம், சூலே, பித்தரோகம் நற்போஜனமில்லாமை உத்தியோகமில்லாமையும் விசனமுமாம்.

புத்திநாதன்.

துதியசப்தமத்தில் அந்தஸ்தானுதியுடன் கூடினுலும், சுரத்தினுல் வாதகுன்மத்தினுல் பீடிப்பன். இதற்கு எருமை தானம் அல்லது சனி ஜெபஞ் செய்தால் தீரும்.

## இராகுமகாதிசையில் புதன்புத்திவரு-2, மீ-6-நாள்-18.

இதற்குப்பலன்.

புதன் சொட்சேத்திரகேந்திர கோணலாபத்தில் நின்ருல், வியாபாரவர்த்தக திரவியம் வித்யாலாபம் சுபசோபனுதிகள் செய்வன். தாரம் புத்திரர்கள் இச்சையான ஸ்திரீகளுடன் நேசம் ச்கலத்திற்கும் சவுக்கியமுண்டாம்.

புத்திநாதன்.

புதன்-6-8-12-ல் சனிசூரியனுடன் கூடியிருந்தால், அவர்கள் பார்வையிருந்தாலும், கலகம் துக்கம் தேகஜாட்டியமாம்.

புத்திநாதன்.

புதன் திசாநாதனுக்கு கேந்திரகோண லாபத்தில் சொட்சேத்திரத்திலிருந்தால், இஷ்டான்னபோஜனம், பூஷணுலங்காரமும், விவசாயம், வாகனம் நாற்கால்சீவன், கிணறுகுளம் உண்டு பண்ணுவது புண்யகருமங்கள் கிராமம் பூமி சாஸ்விதமாயிருக்கப்பட்ட நிலே உண்டாகிறதும், இதுகளுக்கெல்லாம் சவுக்கிய பலனும்.

புத்திநாதன்.

புதன் திசாநாதனுக்கு-6-8-12-ல் பாபயுக்தனுனல் துர்ப்புத்தி சோராக்னிபயம் கலகம் சகல காரியத்திற்கும் ஹானியாம்.

புத்திநாதன்.

புதன் துதியசப்தமாதிகளுடன் கூடினுல் அபமிருத்து தோஷம் வரும் இதற்கு புதன் ஜெபம் செய்தால் பரிகாரமாம்.

## இராகுமகாதிசையில் கேதுபுத்தி வருடம்-1, நாள்-18.

### இதற்குப் பலன்.

கேது சுபயோகத்திலிருந்தால் சுபப்பலம், பாபயோகத்திலிருந்தால் பாபபலம், புத்திசபலம், சூத்ராசூனியம் சம்பவிக்கும், தாரம் புத்ராளுக்கு ரோகங்காண்பிக்கும், நாற்கால்சீவ நஷ்டம் வரும், கேது வாகனாதியுடன் கூடினால் வாகனம் வரும், சுபனுடன் கூடி சுபதிருஷ்டி பெற்றிருந்தால் புத்திரலாபம் சவுக்கியம் இராஜயோகமுமாம்.

### புத்திநாதன்.

கேது சஷ்டாஷ்டமவியத்திலிருந்தால் மரணம்-2-லிருந்தால் விஷபீடை-3-லிருந்தால் சகோதரபீடை-4-லிருந்தால் மாதுர் நாசம்-9-லிருந்தால் சத்ரு நாசம் உச்சனால் இராஜசம்பத்து சகல சவுக்கியமு முண்டாம்.

### புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திரகோண லாபத்தில் நின்றால் அற்ப சௌக்கியம் சொற்பலாபமுமாம், விவசாயம் பசுவிருத்தி அற்பமாம் கடைசியில் கஷ்டத்தையும் தனவிரயத்தையும் கொடுக்கும்.

### புத்திநாதன்.

கேது ப்ரபநீசனுடன் கூடினால் சுரம் விஷரோகம் சகலத்திற்கு பீடை மானபங்கமாவது அன்றியும் பிரபுவினால் கஷ்டம் வரும் விரோதமாவன் விருட்சிகத்தில் கடகத்தில் சிங்கத்திலிருந்தாலும் கலகம் பந்துஜனத் துவேஷம் அன்னியதேசப் பிரவேசம் வரும்,

### புத்திநாதன்.

8-லிருந்தால் அபமிருத்துவும், மகரத்திலிருந்தால் விஷபீடை காணும் அதற்குச் சாந்தி சேவல் தானஞ்செய்யத் தீரும்.

## இராகுமகாதிசையில் சுக்கிரபுத்தி வருடம்-3.

### இதற்குப்பலன்.

சுக்கிரன் கேந்திரகோணத்தில் இலாபத்திலிருந்தால் யோகப்ரபலமாம் பிராமணர்மூலத்தில் தனப்ராப்தியாம். சிநேகிதர் புத்ராள் சகலகாரியமும் இராஜயோகபலனும்.

### புத்திநாதன்.

சுக்கிரன் உச்சனாய் சொட்க்ஷேத்ரனாயிருந்தால் வாகனாதி லாபம் இராஜவிருத்தி சௌபாக்கியத்தைக் கொடுக்கும், வீடு மிராசுபுத்ர மித்ர களத்ரம் மகாசௌக்யம்,

புத்திநாதன்.

6-8-12-லிருந்தால் நீசனாய் சத்ருவுடன் கூடினாலும், சனியுடன் கூடினாலும், கலகம் யோகம், தன் பிரபுக்களினால் கஷ்டம், வீட்டில் சர்வஜனங்களுக்கும் பீடையுண்டாம்.

புத்திநாதன்.

சுக்கிரன் திசாநாதனுக்கு கேந்திரகோணலாபத்தில் சுபருடன் கூடினால், நூதனக்கிரகமுண்டாம் போஜனம் பந்துசிநேகிதாள், புத்ரலாபம் வாகனசௌக்யம் களத்ர ஸ்திரீபோக பாக்கியம் இராஜப்ரசாதம் நினைத்தகாரியம் ஜெயம் மேற்குத்திக்கில் பிரயாணம் வரும் போனவிடத்தில் வெள்ளை சால்வை வெகுமானம் வரும்.

புத்திநாதன்.

சுக்கிரன் திசாநாதனுக்கு-6-8-12-ல் பாபயுக்தனானால் துன்பம் பீடை தலைநோய் சுரம் இராஜபீடை விஷபீடை குன்மவியாதி அகால போஜனம் சகலத்திற்கும் வருத்தமாம் கிரகப்பிரவேசம் இராஜரால் தனச்சேதம் துதியசப்தமாதிகளுடன் கூடில் அபமிருத்து வரும் அதற்கு துர்க்கை ஜெபம் செய்யவும்.

## இராகுமகாதிசையில் சூரியபுத்தி மீ-10-நாள்-24.

இதற்குப் பலன்.

சூரியன் சொட்க்ஷேத்ர கேந்திரகோணத்தில் இலாபத்திலிருந்தால் அல்லது சுபயுக்தனாய் சுபப்பார்வை பெற்றிருந்தால், இராஜரால் ஸ்திரீகளால் கீர்த்தி அற்ப சௌக்கியம் அற்ப கிராமம் கிராமாதிகாரம் புத்திராளுக்கு அற்ப விருத்தி.

புத்திநாதன்.

சூரியன் இலக்னாதியுடன் பாக்யாதியுடன் குரு சந்திரன் பார்வைபெற்றிருந்தால், இராஜனனுசரிப்பான் மத்தியில் நிபுணனாவான். மனதில் வியசனமாவது ஒரு பயமாவது தோற்றப்படும், வெள்ளைக்குடையுண்டாம், இராஜபூஜிதனாவன், மனதிலிருக்கப்பட்ட கோரிக்கை ஈடேறும், சூரியன் உச்சனாயிருந்தால் மேலெழுதியபடி நடக்கும்.

புத்திநாதன்.

6-8-12-ல் தனத்திலாவது பாபயுக்த துற்பெலனாயிருந்தால், சுர பயம் வரும், நோய் அதிகார ரோகம் கலகம், இராஜ நிஷ்டூரம், பிரயாணம், சத்ருபீடை, சோராக்கினிபயம் சகல ஜனங்களுக்கும் விரோதமாம். சகோதர பீடை கிரகப்பிரவேசம் வரும்.

புத்திநாதன்.

சூரியன் திசாநாதனுக்கு -6-8-12-ல் பாபருடன் கூடினல், குன்மரோகம் மார்புநோய் க்ஷயரோகம் இவைகளில் ஒன்று காண்பிக்கும் பந்துக்கள் கலகமாம்.

புத்திநாதன்.

சூரியன் துதியசப்தமாதிகளுடன் கூடினல், அவமிருத்து தோஷமுண்டாம் சூரியன் செவ்வாய் பார்வைபெற்றிருந்தால் பந்துக்களில் கலகமுண்டாயிருக்கும். அதற்கு சூரியப்பிரீதி பண்ணினல் தீரும்.

## இராகுமகாதிசையில் சந்திரபுத்திவரு-1, மீ-6.

இதற்குப் பலன்.

சந்திரன் சொட்சேத்திர கேந்திரகோணலாபத்தில், மித்துரு வீட்டிலாவது சுபருடன் கூடியிருந்தால், இராஜபதியாவன், அல்லது இராஜபூஜிதனவன் வாகனதி பூஷணம் ஆயுராரோக்யம் அஷ்ட ஐசுவரியமும் புத்ரசம்பத்துண்டாம். பூரணச்சந்திரனல் பூர்ண பலத்தைக் கொடுப்பன். இராஜப்பிரீதிக்குச் சமுசயமில்லை, சாதனபூமி லாபமுண்டு சந்தோஷமுண்டாம்.

புத்திநாதன்.

பாபயுக்தனய்-6-8-12-ல் பூரணச்சந்திரனனல், கிராமம் பூமி ஆடுமாடு விவசாயம் தாரம் புத்ரர் இவைகளுக்கு ஹானி வரும். தெற்கு திக்கில் பிரயாணம் வரும். போனவிடத்தில் இராஜதரிசனமாம். நினைத்தகாரியங் கைகூடும்.

புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு கேந்திரகோண லாபத்திலிருந்தால் வீட்டில் இலட்சுமிகடாட்சம் பொருந்தியிருக்கும். எந்தக் காரியமுங் கூடுதலுமாம். தேவபிராமணள்பூஜை செய்வன் கூபந் தடாகமுண்டுபண்ணுவன். நற்போஜனமுண்டாம்.

புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு -6-8-12-ல்சத்துருவீட்டிலிருந்து சத்துருவுடன் கூடினல், காமாலை பாண்டு ரோகமுண்டாம். பசாசு பயம் சோரபயம் தனதான்யபயவிபரம் ஊருக்குப் போகையில் சோரபயம் அல்லது சிரங்கு ரெணங்காண்பிக்கும்

புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன்கூடினல், அபமிருத்துவம். அதற்கு வெள்ளாடு தானஞ்செய்தால் தீரும்.

## இராகுமகாதிசையில் அங்காரகபுத்தி-வரு 1, நாள்-18.

இதற்குப்பலன்.

அங்காரகன் கேந்திர திரிகோணங்களில், ஸ்வக்ஷேத்ரலாபங்களில் சுபருடன் கூடினல், சுபபார்வை பெற்றிருந்தால் அல்லது இலக்னதியுடன் கூடினல், சுபசோபனங்கள், களத்ர புத்ர சௌக்கியங்கள் சகல காரியங்களும் ஜெயமாம்.

புத்திநாதன்.

அங்காரகன் பாபயுக்தனைய் நீசனைய் -6-8-12-லிருந்தால் கலகத்தினல் விரயமுண்டாம். அன்னியதேசப் பிரயாணம்வரும் போனவிடத்தில் ஆயுதத்தினல் தேகத்திற்குப் பீடையுண்டாம். விலங்கு வரும், சகல காரியத்திற்கும் ஹானி வரும். புத்திமுதவிலே நடக்கும் மத்தியில் கடைசியில் சௌக்கியமுண்டாம். சீதளசுரம் அதிசாரம் சமுசியமில்லாமல் வரும்.

புத்திநாதன்.

அங்காரகன் திசாநாதனுக்கு கேந்திரகோணத்தில், விருச்சிகத்தில் இலாபத்திலிருந்தாலும், அற்பசௌக்கியம் சொற்பலாபம் இராஜமூலத்தில் சுகம் கலியாணம் பூமி லாபம் ரத்னலாபம் சிவந்த வஸ்திரம் சேவலையான குதிரை பிரயாணமூலத்தில் இராஜ்தரிசனமுண்டாம்.

புத்திநாதன்.

அங்காரகன் திசாநாதனுக்கு-6-8-12-லிருந்தால், நீசத்தில் பாபருடன் கூடினல், தாரம், புத்ரர்களுக்கும், சகோதரர்களுக்கும் ஹானிவரும். அங்காரகன் -2-7-ல் கூடினல், தேக பீடையுண்டாம். பிரீதி எருது தானஞ் செய்தால் தீரும்.

இராகு மகா திசை - முற்றிற்று.

---

# குருமகாதிசை வரு-16.

இதற்குப் பலன்.

இராஜ அதிகாரம் சந்தோஷ சித்தத்தையுடைத்தானவன் தருமார்த்தகாமங்களிலே விபவமுள்ளவன். எந்தவாகனத்திலிச்சையோ அந்தவாகனமுண்டாம், தன தான்ய சம்பத்துகள் நிறைந்திருக்கும், புத்ரமித்ரகளத்ராதிகள் சம்பத்தும் சுபசோபனதிகளுமாம்.

புத்திநாதன்.

இலக்கினத்திற்கு கேந்திரகோணங்களில் சொட்சேத்ர தன லாபத்திலிருந்தால், இராஜ்யஞ் செய்வன், கீர்த்திபெறுவன், யானை முதலிய வாகன பூஷணமுண்டாம், தேவார்ச்சனை முதலான பூஜைகள் செய்வன்.

புத்திநாதன்.

குரு சஷ்டாஷ்டமவியத்தில் நீசனுனல், துக்கத்தையனுபவிப்பன், அன்னியபோகம்வரும், சகல காரியத்திற்கும் குறைச்சல் வரும்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன் கூடினுல், மானபங்கம் பயம் புத்ரமித்ர சகோதரர்களுக்கெல்லாம் ஹானிவரும் ஸ்தானப் பிரஷ்டம் இராஜத்துவேஷம் வரும். சோராக்கினி பயம் முதலில் கொடுத்து மத்தியில் கடைசியில் சௌக்கியம் பலனுண்டாம்.

## குருமகாதிசையில் குருபுத்தி வரு-2, மீ-1-நாள்-18.

இதற்குப் பலன்.

குரு சொட்சேத்திர கோணத்திலிருந்தால் இராஜ்யலாபம் சுபசோபனுதிகள் சத்கருமங்கள் தேவகுருபூஜை முதலாகியதுஞ் செய்வன் ஐசுவரியமுண்டாம்.

புத்திநாதன்.

குரு கர்மாதிகளுடன்கூடினுல் பிராமணபிரபுக்களினுல் ஒரு தயவுதன்னுடைய பிரபுக்களினுல் கூடுதலையுண்டாம்.

புத்திநாதன்.

குருநீசத்தில் சஷ்டாஷ்டமவியத்திலிருந்தால், முதலில் இராஜபயமுண்டாம் சத்துருவுண்டாம். தாயாதி ஜனங்களுக்குத் துவேஷம்வரும் கலகம் விசனத்தைத்தரும், தன்னுடைய பிரபுவினுல் பயம்வரும். அல்லது தாரம்புத்திராளுக்கு ஹானி வரும் தேசகமனம் வரும்.

புத்திநாதன்.

குரு துதியசப்தமாதிகளுடன் கூடினுல் அவமிருத்துபயம் வரும் அதற்கு உருத்திரஜெபஞ்செய்யவும்.

## குருமகாதிசையில் சனிபுத்தி வரு-2-மீ-6 நாள்-12.

இதற்குப்பலன்.

சனி சொட்சேத்திரத்தில் மித்துருஸ்தானத்திலாவது, கேந்திர கோணங்களிலாவது, அல்லது இலக்கினுதியுடன்கூடினுலும்,

சௌக்யபலன். தனதானியம் அன்னியஸ்திரீபோகம். எத்தன காரியங்களும் மேற்குத்திக்கில் பிரயாணம் போனவிடத்தில் இராஜதரிசனம். தனதானியலாபங்களுமுண்டாம் தீர்த்ததரிசன மாவது காட்டும்.

### புத்திநாதன்.

சனி-6-8-12-ல் நீசனுப் அஸ்தங்கிதனுனல் சகலகாரியங் களுக்கும் ஹானிவரும். பிதுர்மாதுர் புத்ரகளத்ராள் இவைகளுக் காவது ஹானிவரும். சோராக்கினிபயமாம்.

திசாநாதனுக்குக் கேந்த்ரகோணத்திலிருந்தாலும், இலா பத்தில் நின்றுலும், பூலாபம் தனலாபம், சூத்திராள்மூலமாய் சகல இலாபமுண்டாம்.

திசாநாதனுக்கு-6-8-12-ல்பாபயுக்தனுனல்,பந்துமித்திராதி கள் விரோதம் உத்தியோகத்திற்கு ஹானிதேகபிணியும் சுய ஜனவிரோதமுமாம்.

சனி துதியசப்தமாதிகளுடன் கூடினுலும், சம்மந்தம் இருந் தாலும், அபமிருத்துவாம். அதற்கு விஷ்ணுஜெபமும் கறுப்பு வஸ்திரதானம் செய்யவும்.

## குருமகாதிசையில் புதன் புத்தி வருஷ-2-மீ-3-நாள்-6.

### இதற்குப் பலன்.

விவசாயம் தனலாபங்கூடுதலால்,புதன் திசாநாதன் பார்வை பெற்றிருந்தாலும், கூடினுலும் இராஜ்யலாபம். இராஜப்பிர சாதம். நினைத்தகாரியங்கைகூடுதலும், வீட்டில் பசுசேர்க்கை யும், சகலபாக்கியமுமுண்டாம்.

### புத்திநாதன்.

புதன் செவ்வாயுடன்கூடினுலும், பார்வைபெற்றுலும், சத்ரு பீடை பயமும் அதிகாரம்சுரரோகம் குய்யஸ்தானத்தில் ரோக முமாம்.

### புத்திநாதன்.

புதன் சொட்சேத்திரகேந்திரகோண தனலாபத்திலிருந் தால், நஷ்டமாய்ப்போனராஜ்யம் அல்லது நஷ்டமான திரவிய முங்கிடைக்கும். பந்துஜனங்கள் கலியாணப்பேச்சுகள் நடக்கும். பிள்ளைகள் மூலமாய்த் தனலாபங்களுங் கிடைக்கும், மேற்குத் திக்கில் பிரயாணம் இராஜதரிசனம் எத்தனகாரியங் கைகூடுதலு மாம்.

### புத்திநாதன்.

புதன்-6-8-12-ல் பாபயுக்தனுனல், பாபகன்மத்தைச் செய் வன். அநேக ஜனங்களுக்கிம்சைசெய்வன். பித்தம் அதிகரிக்கும்

நிகளபந்தனம்வரும். அல்லது ஸ்தானப்பிரஷ்டம்வரும் சர்ப்ப பீடைவரும்.

புத்திநாதன்.

புதன் திசாநாதனுக்கு கேந்திரகோணலாபத்தில் நின்றால், தன்னூரில் தனலாபம்வரும், மாதுர்பிதுர்களுக்கு சௌக்கிய முண்டாம், இராஜரால் மந்திரிகளால் தயவுண்டாம். சாஸ்திர புராணபுண்ணியதீர்த்தம் திருமாலை கிடைக்கும்.

புத்திநாதன்.

6-8-12-ல் பாபயுக்தனானால், சுபர்திருஷ்டியில்லாமலிருந்தால், கலகம் சோரபயம் மரணபயம் கிரகப்பிரவேசம் தேசகமன மாம்.

புத்திநாதன்.

புதன் துதியசப்தமாதிபதிகளுடன் கூடினால், தேகத்திற்கு ஹானிவரும் விஷ்ணுஜெபஞ்செய்யவும்.

## குருமகாதிசையில் கேதுபுத்தி மீ-11-நாள்-6.

இதற்குப்பலன்.

கேதுகேந்திரகோணத்தில் சுபருடன்கூடியிருந்தால், அவந் தரையானபோஜனம் தலைநோய் வாதபித்தம் வரும்.

புத்திநாதன்.

கேதுசுபர்திருஷ்டிபெற்றிருந்தால், சுபபலத்தைக்கொடுக்கும்.

புத்திநாதன்.

கேதுபாபருடன்கூடி பாபர்திருஷ்டிபெற்றிருந்தால்-6-8-12 லிருந்தால், தாரம்புத்திராளுக்கு ஹானி சத்துரு பீடைவரும், பயம் இராஜகோபம் தனச்சேதம் பந்தனம் ரோகபீடை பெல ஈனம்சாவுவார்த்தை சகோதரபீடை சௌக்கியமில்லாமையுமாம்.

புத்திநாதன்.

கேது-2-7-லிருந்தால் தேகத்திற்கு உபத்திரவமுண்டாம். அல்லது தாரத்திற்காவது தோஷம்வரும், சேவல் தானஞ் செய்யவும்.

## குருமகாதிசையில்சுக்கிரபுத்தி வரு-2-மீ-8.

இதற்குப்பலன்.

சுக்கிரன் சொட்சேத்திரகோணம் பரமவுச்சம் பெற்றிருந் தால்நரவாகனபோகம் தேசாந்திரஐசுவரியம் இராஜாக்களுடைய தயவு தேசாதிகாரம் தனக்குச் சமானமா யிருக்கப்பட்டவ னுடைய தயவு, வடதிக்கில் பிரயாணம்போனவிடத்தில் இராஜ தரிசனம் தேவகுருபக்தி சகல காரியங்களும் சுபசௌக்கிய பலனும்.

புத்திநாதன்.

சுக்கிரன் - 6 – 8 - 12 - ல் நீசத்தில் சத்துருவுடன் கூடில், சோராக்கினி பயம் இராஜபயம் சகல காரியத்திற்கும் ஹானி வரும்.

புத்திநாதன்.

சுக்கிரன் துதியசப்தமாதிகளுடன் கூடில், அபமிருத்துத் தோஷம் வரும். அதற்கு லட்சுமி ஜெபஞ் செய்தால் பரிகாரமாம்.

## குருமகாதிசையில் சூரியபுத்தி-மீ 9-நாள்-18.

இதற்குப்பலன்.

சூரியன் கேந்திர கோணங்களிலாவது, அஷ்ட.மாதி:புடனாவது, அவன் பார்வையிருந்தாலும், முதலிலே விசனம் சுரரோகம் நிலைவிட்டுப் பேருதல், பாபகன்மங்கள் செய்கிறது. பயம் சத்துரு பீடை பந்தனம் ஒரு கலகம் இவையுண்டாம்.

புத்திநாதன்.

சூரியன் சொட்சேத்திர கேந்திரகோணலாபத்தில் சுபருடன் கூடி சுபர்திருஷ்டிபெற்றிருந்தால், கீர்த்திப் பிரதாபம் எந்தயிடத்திற் போனாலும் மரியாதை கொஞ்சம் சிரவேதனையுண்டாம். நினைத்த காரியங் கூடுதலுமாம்.

புத்திநாதன்.

சூரியன்-6-8-12-ல் நீசத்தில் பாபியுடன் கூடியிருந்தால், எத்தனகாரியம் விகாதம், அன்னியதேசப்பிரயாணம் போனவிடத்தில் சோராக்கினி பீடை ஆயுதபயம் வரும். நாற்கால் ஜீவஹானி வரும்.

புத்திநாதன்.

சூரியன் திசாநாதனுக்கு கேந்திரகோண லாபத்திலிருந்தால் மனோதுக்கம் தேகாயாசம் திரிச்சல் இராஜகோபமுமாம்.

புத்திநாதன்.

சூரியன் திசாநாதனுக்கு -6-8-12-லிருந்தால் வயிற்றுநோய் வியாதி சகல காரியத்திற்குங் குறைச்சல் வருகுமாம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன் கூடினால், அபமிருத்து வரும், நிகளபந்தனம் வரும், அதற்கு அக்கருமந்திரப் பானு ஜெபஞ் செய்யவும்.

## குருமகாதிசையில் சந்திரபுத்தி வரு-1, மீ-4.

### இதற்குப்பலன்.

சந்திரன் கேந்திரகோணலாபத்தில் சொட்சேத்திரனைப் பூரணச் சந்திரனையிருந்தால், இராச்சிய லாபம் கீர்த்தியுண்டாம். தாரபுத்ரசௌக்கியம் இராஜப்பிரீதி ஆரோக்கியம் சுபசோபனாதிகள் யானை குதிரை அநேக லாபமும் சகல காரியமுஞ் செய்ய சௌக்கியமாய் விருத்தியாயிருக்கும்.

### புத்திநாதன்.

சந்திரன் சஷ்டாஷ்டமவியத்தில் பாபருடன் கூடினல், இராஜத்துவேஷம் பொல்லாங்கு தேசப்பிரஷ்டம் பீடை ரோகம் சகல காரியமும் ஹானியாம்.

### புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு -5-9-லிருந்தால், கிரகத்தில் இலட்சுமி கடாட்ச முண்டாய் சௌபாக்கியங்களு முண்டாயிருக்கும்.

### புத்திநாதன்.

திசாநாதனுக்கு தனலாபத்திலிருந்தால், நித்யலாப முண்டாயிருக்கும்.

### புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு -6-8-12-ல் பாபருடன் கூடில், இராஜத்துவேஷம் நிகளபந்தனம் அன்னியதேச கமனம் சீதளசுரம் இவையுண்டாம்.

### புத்திநாதன்.

6-8-12-ல் சுபயுக்தனுனல் அற்ப சௌக்கியம் சொற்ப லாபம்.

### புத்திநாதன்.

சந்திரன் துதியசப்தமாதிகளுடன் கூடினல், கிலேசம் அதற்குத் துர்க்கை ஜெபஞ் செய்தால் சௌக்கியமாம்.

## குருமகாதிசையில் அங்காரகபுத்தி-மீ 11 - நாள்6.

### இதற்குப்பலன்.

அங்காரகன் சொட்சேத்திர திரிகோணத்திலிருந்தால், முற்பாதியில் அற்ப லாபங்கொடுத்து, கடைசியில் அர்த்தவிரயமாகும். பிற்பாதி சௌக்கியபலன் தனதானியத்திற்கும் விருத்தியுண்டாம். சகோதரர்க்கு ரணபயம் இராஜமூலத்தில் வஸ்திர பூஷண வாகன லாபமுண்டாம்.

புத்திநாதன்.

அங்காரகன் குரூர கிரகமானதினால், தனதானிய விரயம் வரும்.

புத்திநாதன்.

6-8-12-ல்-9-க்குடையவனுடன் கூடினாலும், பார்த்தாலும், தேகாரோக்கியம் கிராம பூமி லாபங்கிடைக்கும், செலவு அதிகரிக்கும்.

புத்திநாதன்.

6-8-12-ல் நீசனானால், அக்கினிபயம் மற்றொருவர்மூலமாய் பரஸ்திரீபோகம் தன்னுடைய குலாசாரத்தைவிட்டு துஷ்ட நடத்தை செய்வன்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திர திரிகோணத்திலிருந்தால், இராஜப்பிரீதி சுபகருமங்கள் மற்றொரு இடத்திற்கு யுத்தமூலமாய் பிரயாணமும் போனவிடத்தில் இராஜமூலத்தில் இலாபமும் வரும்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு -6-8-12-ல் பாபயுக்தனானால், சகல காரியத்திற்கும் ஹானி விசனம் பயமுண்டாம் நேத்திரவியாதி அன்னிய தேசப்பிரயாணமாவது வரும்.

புத்திநாதன்.

செவ்வாய் துதியசப்தமத்திலிருந்தால், தேகசாட்டியம் வரும். அதற்குப் பரிகாரம் எருது தானஞ்செய்தால் தீரும்.

## குருமகாதிசையில் இராகுபுத்தி வருஷம் - 2, மீ - 4 -நாள்-24.

இதற்குப்பலன்.

இராகு பாபியுடன் கூடி கேந்திரகோணத்திலிருந்தால், விடாத கலகமுண்டாம். இஷ்டமானவன் மனவிரோதமானவன் ஒருத்தனுடன்வாதாடுவன் அதனாற் கிலேசம்வரும். மேலெழுதிய ஸ்தானங்களில் சுபருடன் கூடினால் சுபபலனாய் நடக்கும்.

புத்திநாதன்.

இராகு -6-8-12-லிருந்தால் கலகம் இராஜ நிஷ்டூரம் திருடர் பயம் மனைவியாகூலம் பசாசு வாதை சூத்ரசூன்யமுமாம்.

புத்திநாதன்.

இராகு திசாநாதனுக்கு கேந்திரகோணத்தில் சுபருடனும் பாபருடனுங் கூடினால், தாயாதிகளுக்கும் இவனுக்கும் விகாதம் வரும் செய்யப்பட்ட காரியங்களுக்கு ஹானி வரும் மானபங்கம் தேசகமனம் முற்பாதி கஷ்டம் பிற்பாதி சௌக்கியம் வரும்.

புத்திநாதன்.

இராகு திசாநாதனுக்கு -6-8-12-லிருந்தால், பாபயுக்தனுல், முழுதுங் கஷ்டம் அந்தியத்தில் கொஞ்சஞ்சௌக்கியம் அப்போது இராஜமூலத்தினுல் சந்தோஷம் வரும்.

புத்திநாதன்.

இராகு அதியசப்தமத்திலிருந்தால், தேகசாட்டியம் வரும். அல்லது தாரக் கிலேசமாம். யாதொரு காரியங்களும் கெடுதலையாம். அதற்குச் சேவல் தானஞ்செய்தால் தீரும்.

குருமகாதிசை முற்றிற்று.

---

## சனிமகாதிசைவருடம்-19.

இதற்குப்பலன்.

அபவாதமான வார்த்தைகளும், சோராக்கினிபீடையும், தனதானிய நஷ்டமும், பிதுர்வர்க்க ஹானியும்வரும்.

புத்திநாதன்.

கேந்திர திரிகோண சொட்சேத்திரத்தில் பெலத்திருந்தால், மண்டலாதிபதியாவன், அல்லது ஒரு கிராமமாகிலும் அதிகாரஞ் செய்வன், பந்துஜன கலகமுண்டு.

புத்திநாதன்.

சனி 8-லே பெலத்திருந்தால், தேசாந்திர வனவாசம் மரணமோசம், சகசமாயிருந்த பட்டணத்திற்கு அதிகாரியாவன்.

புத்திநாதன்.

சனி 3-9-லிருந்தால் இராஜ்யலாபம், இராஜாக்கள் அனுசரிப்பு.

புத்திநாதன்.

சனி-2-7-லிருந்தால், இராஜத்துவேஷம், எத்தனகாரியமும் விரோதமாம், சகலகாரியத்திற்கும் ஹானியாம், க்ஷயரோக பீடை முதலில் ஸ்திரீ சகோதர நாசம், மத்தியில் அன்னிய தேசத்திற்குப் போகவரும். மற்றொரு ஊரிலேயாகிலும் வாசஞ் செய்வன், கடைசியில் சௌக்கிய பலன்.

### சனிமகாதிசையில் சனிபுத்தி வருடம்-3-நாள்-3.

இதற்குப்பலன்.

சுபபலத்தைக் கொடுத்து இராஜ்யலாபம் நல்ல கீர்த்தியும், யானை முதலாகிய வாகனமுண்டாம், இராசிமாதத்தில் நினைத்த காரியங் கைகூடுதலையாம், நாற்கால்ஜீவனுல் இலாபமுண்டாம்.

புத்திநாதன்.

சனி-6-8-12-ல் நீசபாபயுக்தனு யிருந்தால், ஆயுதத்தினுல் ஒரு காயமுண்டாம், நாவரட்சி சுரம் விஷத்தினுற் கிலேசமாம்.

சனி அஷ்டமாதிபுடன் கூடினுல், அபமிருத்து தோஷமுண்டாம். அதற்கு எருமை தானஞ்செய்தால் தீரும்.

சனிமகா திசையில் புதன்புத்தி வருடம்-2, மீ 8-நாள்-9.

இதற்குப்பலன்.

புதன் கேந்திரகோண சொட்சேத்திரலாபத்தில் சுபருடன் கூடி சுபர் அம்சைபெற்றிருந்தால், தன்னுடைய இராஜ்யத்திலாவது பிறர் இராஜ்யத்திலாவது பூஜிதனும் இராஜயோக வாகனமுண்டாம்.

புத்திநாதன்.

புதன் பரம அம்சை பெற்றிருந்தால் வெகு ஜனங்கள் போஷகனுயிருப்பன்.

புத்திநாதன்.

சத்துருஸ்தானத்தி லிருந்தால், புண்ணிய தீர்த்தயாத்திரை பலன் நடக்கும்.

புத்திநாதன்.

புதன்-6-8-12-ல் கேந்திரகோணத்தில் நீசனுய் சத்துரு க்ஷேத்திரனுய் சூரியன் செவ்வாய் சனியாவது, இவர்களுடன் கூடியிருந்தாலும், இராஜபயம் மித்திரனுயிருக்கப்பட்டவன் சத்துருவாகிறதும் காரிய ஹானியும் பிரயோஜன பங்கமுமாம்.

புத்திநாதன்.

புதன் திசாநாதனுக்கு கேந்திரகோண லாபத்திலிருந்தால், தேகசௌக்கியம் ஆயுராரோக்யம் வித்யாலாபம் இராஜாவினுல் தேசகிராமங்கள் அதிகாரஞ் செய்வன். இந்தப்புத்தி கடைசியில் தேகபிணியும் அபவாதமான வார்த்தைபந்துக்கள் மரணமுமாம்.

புத்திநாதன்.

புதன் திசாநாதனுக்கு -6-8-12-ல் பாபருடன் கூடியும், பார்வை பெற்றிருந்தாலும் பாபயுக்தனுனுல், அற்ப சௌக்கியமும் முதலில் நடந்து அந்தியத்தில் வாகனபூஷண லாபங்களுண்டாம். தேவகுரு பக்தியுமாம்.

புத்திநாதன்.

புதன் துதியசப்தமாதிபதிகளுடன் கூடினுல், அன்னிய இடங்களுக்குப் போகவும், குய்யஸ்தானத்தில் ரோகம் சோராக்கினி பயம் இராஜபயம் அபமிருத்துவாம். இதற்கு விஷ்ணு ஜெபஞ் செய்யவும்.

## சனிமகாதிசையில் கேதுபுத்தி-வரு-1, மீ-1-நாள்-9.

### இதற்குப்பலன்.

மற்றொரு இடங்களுக்குப் போய்வரும்போது வழியில் ரெண பயங்காண்பிக்கும் ஆலசியமான புத்தியைக் கொடுக்கும்.

### புத்திநாதன்.

கேது பாபயுக்தனுல் தரித்திரம் பந்தனம் தன்னுடைய எஜமானனுக்கு விசனம் வரும்.

### புத்திநாதன்.

கேது இலக்னதிபதியுடன் கூடினுல், முதலில் சௌக்கியம் கெங்கா தீர்த்தஸ்நானங் கிடைக்கும்.

கேது திசாநாதனுக்கு கேந்திர திரிகோண சஷ்டாஷ்டம வியத்திலிருந்தாலும், அபமிருத்து தோஷம் வரும். தலைநோய் மார்பு நோய் காண்பிக்கும் ஸ்தானப்பிரஷ்டம் வரும்.

கேது மேலெழுதிய ஸ்தானங்களிலிருந்தாலும், கஷ்டபலன் இதற்குக் கேதுவுக்குப் பிரீதி செய்து ஸ்நானஞ்செய்யத் தீரும்.

## சனிமகாதிசையில் சுக்கிரபுத்திவரு-3, மீ-2.

### இதற்குப்பலன்.

சுக்கிரன் சொட்சேத்திர திரிகோணலாபத்திலிருந்தால், பாக்கிய விருத்தி கோவிருத்தி க்ஷேத்திரலாபம் தீவாந்தர வஸ்துக்கள் வரும்.

### புத்திநாதன்.

சுக்கிரன் சனியுடன் கூடினுல் யோகபலனும் சகல காரியமும் ஜெயமாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் சத்துருக்ஷேத்திர நீச அஸ்தங்கிதனுய் -6-8-12-லிருந்தால், கிலேசம் இராஜ நிஷ்டூரம் உண்டாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் திசாநாதனுக்கு கேந்திரகோணலாபத்தில் நின்றால், தேவப்பிராமண பூசை புராணகாவிய கேள்வியும் படிப்பும் சத்கருமங்கள் செய்கையும் இராஜப்பிரசாதமும் சத்ரசாமரைகளுண்டாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் திசாநாதனுக்கு 6-8-12-லிருந்தால், நேத்ரரோகம் தேகஉஷ்ணதிகளுண்டாம் குலஸ்திரீ விக்னமும் பல்நோய் சூலை மார்புநோய் அன்னவஸ்திரத்திற்கு வருத்தமுமாம்.

புத்திநாதன்.

சுக்கிரன் துதியசப்தமாதிகளுடன் கூடினால், அபமிருத்து தோஷம் வரும். அதற்கு துர்க்கை ஜெபஞ் செய்யவும்.

## சனிமகாதிசையில் சூரியபுத்தி மீ-11-நாள்-12.

இதற்குப்பலன்.

சூரியன் இலக்கினுதியுடன் கூடினால், முதலில் பயத்தைக் கொடுக்கும் மத்தியில் கடைசியில் விசனத்தைக் கொடுக்கும்.

புத்திநாதன்.

சூரியன் இலக்கினத்தில் சந்திரனுடன் கூடியிருந்தால், தாயாதிஜனநிஷ்டூரம் பயம் ரோகம் குருபார்த்தால், சத்துருக்களுக்கு ஹானிவரும் போகபாக்கியமுண்டாம்.

புத்திநாதன்.

சூரியன் சனி இராகுவுடன் கூடினுலும் செவ்வாயுடன் கூடியிருந்தாலும், பிணிகாணும் தன்னுடைய பிரபுவுக்கு பயமுண்டாம் தேசாந்திரம்போய்த் திரிவன் சகலத்திற்கும் ஹானியாம்.

புத்திநாதன்.

சூரியன் திரிகோணலாபத்திலிருந்தால், புண்ணிய கதைகள் கேள்வியும் விவசாயங் கைகூடுதலுமாம்.

புத்திநாதன்.

சூரியன் நீசத்தில் சத்துருஸ்தானத்தில்-6-8-12-லிருந்தால், தேகத்திற்கு தாபசுரமானபிடை பிதுர்க்கிலேசம் நானுவியாகூலம் சோராக்கினி பயமுண்டாம்.

புத்திநாதன்.

சூரியன் திசாநாதனுக்கு கேந்திரகோணலாபத்திலிருந்தால், அன்னிய தேசகமனம் அவந்தரையான போஜனம் உத்தியோக பங்கமுமாம்.

புத்திநாதன்.

சூரியன் திசாநாதனுக்கு -6-8-12-லிருந்தால், கொடூரமான கஷ்டத்தைக் கொடுக்கும். மகாபயம் ஆசனரோகம் சோராக்கினி பயம் உண்டாம்.

புத்திநாதன்.

சூரியன் துதியசப்தமாதிகளுடன் கூடினுலும், அந்த ஸ்தானங்களில் நின்றாலும், அவர்கள் பார்வையிருந்தாலும், அபமிருத்து தோஷமுண்டாம். அதற்கு சூரிய ஜெபஞ் செய்யவும்.

## சனிமகாதிசையில் சந்திரபுத்திவருஷ-1, மீ-7.

### இதற்குப்பலன்.

சந்திரன் சுபர்திருஷ்டியிருந்து சுபனுடன் கூடினால், இராஜ்யப்பிராப்தி இராஜாபிஷேகம் அல்லது நூதனமாயிருக்கப்பட்ட பிரபுக்கள் சிநேகம் வாகனபூஷணம் பிதுர் மாதுர் சௌக்கியம் பால் பசு விருத்தி அதிகபலமாம்.

### புத்திநாதன்.

பூரணச்சந்திரனைய் உச்சசொட்சேத்திரகேந்திர திரிகோணத்திலிருந்தால், மேலெழுதியபடி பலன் கொடுக்கும், நினைத்த காரியம் ஜெயமாம்.

### புத்திநாதன்.

க்ஷீணச்சந்திரனைய் பாபயுக்தனைய் பாபர் பார்வையிலிருந்தாலும், குரூராம்சை பெற்றிருந்தாலும் மிகுதியுங் கஷ்டத்தைக் கொடுக்கும். தேக ஆயாசமாம்.

### புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு கேந்திரகோணலாபத்தில் நின்றால், தனப்பிராப்தி தேசகிராமாதிபத்யம் சகலகாரியஞ் சித்தியாம்.

### புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு -6-8-12-விருந்தால், ஜெயம் சவுக்கியம் சத்துரு நாசம் போகபாக்கியமுண்டாம்.

### புத்திநாதன்

சந்திரன் மேலெழுதியபடி பாபயுக்தனைய், பாபர் திருஷ்டி பெற்றிருந்தால் மாதுர் பிதுர் . ஹானி ஸ்தானப்பிரஷ்டம் நிகளபந்தனம் உண்டாம்.

### புத்திநாதன்.

சந்திரன் துதியசப்தமாதிகளுடன் கூடி பாபயுக்தனையிருந்தால், மாரகங்கொடுக்கும். அதற்கு திரியம்பகி ஜெபஞ் செய்ய வேண்டும்.

## சனிமகாதிசையில் செவ்வாய்புத்திவருஷ-1, மீ 1-நாள் 9.

### இதற்குப் பலன்.

செவ்வாய் சொட்சேத்திர கேந்திர திரிகோணலாபத்திலிருந்தாலும், திசாநாதனுடன் கூடினாலும், சுரம் தாபம் வாதபித்த சிலேட்டுமமுண்டாம். செவ்வாய் லக்னாதிபுடன் கூடி சொட்சேத்திரனையிருந்தால், சந்தோஷமான வாகனம் பூஷணம் சேனாதிபத்தியம் எதுகாரியங்களும் ஜெயமாம்.

புத்திநாதன்.

செவ்வாய் இலாபாதிபதி புத்தியாயிருந்து, திசாநாதன் இலக்னாதிபதியாயிருக்க, யுத்தத்திற் போகிறவன் ஜெயப்பிரதாபமாவன், இராஜ்யம் வரும், பூலாபம் சகோதர ஹானி தேக ஆரோக்கியம் உண்டாம்.

புத்திநாதன்.

செவ்வாய் அஷ்டமாதிபதியுடன் கூடினாலும், துதியாதியுடன் சனியுடன் கூடினாலும், அபமிருத்துண்டாம் எருது தானஞ் செய்யவும்.

புத்திநாதன்.

செவ்வாய்-6-8-12-ல் நீசனாய் அஸ்தங்கிதனா யிருந்தால், சோராக்கினிபயம் ரெணபயம் யுத்தம் கிரந்தி ரோகமாம்.

புத்திநாதன்.

செவ்வாய் திசாநாதனுக்குக் கேந்திரகோண லாபத்திலிருந்தால், தனவரத்து கலியாண சம்பிரமமாம்; புத்திக் கடைசியில் விசனத்தைத் தரும் ஸ்தானப் பிரஷ்டம் வரும்.

## சனிமகாதிசையில் இராகுபுத்தி வருஷ-2. மீ-10. நாள்-6.

இதற்குப் பலன்.

மனோவியாகூலம் தேகபீடை தனவிரயம்வரும்.

புத்திநாதன்.

இராகு இலக்கினாதியுடன்கூடினால் புத்திமுதலில்சௌக்கியம் மத்தியில்விசனம் கடையில் சாவுவார்த்தை கேள்வியுமுண்டாம்.

புத்திநாதன்.

இராகு ரிஷப கடக கன்னி மகரங்களில், மிதுனத்திலிருந்தால், இலக்கினாதிபதியுடன் கூடினால், சமானமான ஜனங்களினால் மரியாதை இராஜாவினால் மரியாதைகிடைக்கும் மேற்குத் திக்கில்பிரயாணம்வரும் போனவிடத்தில் காரியங் கூடுதலையுண்டாம்.

புத்திநாதன்.

இராகு செவ்வாயுடன் கூடியிருந்தால் தாரக்கிலேசம்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன் கூடியிருந்தால் அற்பசௌக்கியம்.

புத்திநாதன்.

இராகு-6-8-12-லிருந்தால் திரிகோணத்திலே சுபனுடன் கூடினால், அற்பசௌக்கியம் பாபியுடன் கூடினால் மகாபயம் க்ஷயரோகம் பசாசுசூத்ரசூன்யம் வியாகூலப்படுவன்.

புத்திநாதன்.

இராகு சுபர்திருஷ்டிபெற்றிருந்தால், இராஜப்பிரீதி விவாகம் எக்கியம் தான தருமம் ஞானமாம்.

சனிமகாதிசையில் குருபுத்தி-வரு-2-மீ-6-நாள்-12.

இதற்குப்பலன்.

குரு கேந்திரகோணலாபத்தில் உச்சசொட்சேத்திரனாய் சுபனுடன்கூடி சபாம்சைபெற்றிருந்தால், நற்கீர்த்தி சேனாதிபத்தியம் தேவப்பிராமணாள்பூஜை வீட்டில்இலட்சுமிகடாட்சம் பொருந்தியிருக்கும் வாய்வுமூலையில் பிரயாணம் போனவிடத்தில் இராஜதரிசனம் வஸ்திரபூஷணவாகனலாபம் சண்டைமுகத்தில் ஜெயமும் யாதொரு காரியமும் குறைவில்லாமல் நடக்கும்.

புத்திநாதன்.

குரு-6-8-12-ல்சுபர்பாபருடன் கூடினால், அற்பலாபம் சொற்பசௌக்கியம் சபலசித்தம் பாபகர்மங்கள் துஷ்டஸ்திரீ அனுபோகம் செய்வன்,

புத்திநாதன்.

குரு திசாநாதனுக்கு கேந்திரகோண இலாபத்திலிருந்தால் தாரசௌக்கியம் இராஜஸ்திரீயுடைத்தானவனாய் தனசம்பத்தும் வாகனாதி லாபத்துடன் கூடினவன் பிரதாபமும் கீர்த்தியும் நவரத்தின மிழைத்த பூஷணாலங்காரமும் ஞானார்த்தமுமாம்.

புத்திநாதன்.

குரு திசாநாதனுக்கு-6-8-12-ல் நீசனுடன்கூடினாலும், முதவில்கஷ்டம் விசனம் பந்தனம் கலகம் தேகப்பிணியும் சகலத்திற்குங் குறைச்சலாம்.

குருமேலெழுதிய ஸ்தானங்களில் பரம உச்சாம்சைபெற்றிருந்தால், நூதனமாய் பிரபுக்களைக்காண்கிறதும் தனப்பிராப்தியும் புத்திரபவுத்திர விருத்தியுமாம் கடைசியில் பிணிகாணும்.

குரு துதியசப்தமாதிகளுடன் கூடியிருந்தால், அவமிருத்து தோஷம்வரும் அதற்கு விஷ்ணுஜெபஞ்செய்யவும்.

சனிமகாதிசை-முற்றிற்று,

## புதன்மகாதிசை-வரு-17.

இதற்குப்பலன்.

நல்ல ஸ்திரீகளுடனே சங்கமம் கேளீவிலாசம் எந்தவாகனம் வேண்டுமோ அந்தவாகனமுண்டாம். பொன்முதலிய இரத்தினங்களிழைத்தபூஷணமும் விபசாயமும் வியாபார விருத்தியும் பிள்ளைகள் பிறக்கிறதுமாம்.

புத்திநாதன்

புதன் சொட்சேத்திரத்திலிருந்தால் வித்யாலாபம் பசுக்கள் மிராசுகள் இஷ்டான்னபோஜனம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

புதன் கேந்திரகோண சொட்சேத்திரத்திலிருந்தால், கீர்த்தியுள்ளவனுய் ஒருவர்க்காகிலும் ஞானபோதனைசெய்வன் தேசாந்திரத்தைசுவரியன் பந்துபுத்திர மித்திரர்களை சவாட்சணை செய்வன்.

புத்திநாதன்.

புதன்-6-8-12-ல் நீசத்தில் நீசாம்சையிலாவதுஇருந்தால், சகலகாரியத்திற்கும் ஹானியாம்.

## புதன்திசையிற் புதன்புத்தி-வரு-2-மீ-4 நாள்-27.

இதற்குப்பலன்.

புதன் கேந்திரிகோண லாபத்தில் சொட்சேத்திரனு யிருந்தால், வியாபாரம் தனதானியம் வித்தியாலாபம் வீட்டில் கலியாணம் சம்பிரமம் மரியாதை இரத்தினலாபம் வித்துவகீர்த்தியும் நூதனபிரபுக்கள் தரிசனமாம்.

புத்திநாதன்.

புதன் 6-8-12-ல் நீசபாபயுக்தனுய் அஸ்தங்கிதனுயிருந்தால், சூலை ரோகம் கிரகப்பிரவேசம் இராஜகாரியத்தில் கலாபம் உண்டாம்.

புத்திநாதன்.

புதன் துதியசப்தமாதிபதிகளுடன் கூடினல், தாரக்கிலேசம் அல்லது ஆத்மசம்மந்தமான ஜனங்களுக்கு ஹானிவரும். இதற்கு விஷ்ணு ஜெபஞ்செய்யவும்.

## புதன்மகாதிசையில் கேதுபுத்திமீ-11நாள்-27.

### இதற்குப்பலன்.

கேது இலக்கினகேந்திரகோண சுபருடன் கூடி சுபர்திருஷ்டி பெற்றிருந்தாலும், இலக்கினாதிபதியுடன் கூடினாலும், அற்ப சௌக்கியம் சொற்ப லாபம், பந்துசிநேகம், திரிச்சல் மேற்கு திக்கில் பிரயாணம் போனவிடத்தில் காரியம் விகாதம் உண்டாம்.

### புத்திநாதன்.

கேது-6-8-12-ல் பாபருடன் கூடி பாபர் திருஷ்டி பெற்றிருந்தால், ஒரு வாகனத்திலிருந்து கீழேவிழவும், புத்திரசோபமும், சோராக்கினிபயம், இராஜபயம், பாபகருமஞ்செய்கை, இவைகளுண்டாம்.

### புத்திநாதன்.

விருச்சிகத்திலிருந்தால், விஷபீடையுண்டாம். நீசனானால் ஒரு காலத்தில், அவஸ்தைப்படுவன், துக்கத்தையடைவன், திரிச்சலுண்டாம்.

### புத்திநாதன்.

கேது துதியசப்தமாதிபதிகளுடனிருந்தால், தேகசாட்டியம் வரும், சாகரஸ்நானஞ்செய்யத் தீரும்.

## புதன்மகாதிசையில் சுக்கிரபுத்திவரு-2, மீ-10.

### இதற்குப் பலன்.

சுக்கிரன் குருவுடன் கூடினால், புண்ணியகதைகளைக்கேட்பன் மித்திரரால் பிரபு சிநேகிதமாகும் சகல லாபமுமுண்டாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் புத்திரடக்கச்சே கன்னிவிருச்சிகம் தனுசு சிம்மம் மேஷம் இந்த ஐந்து மாதங்களில் சுக்கிரனுக்குக் குரூர மாதமானதால், சுரபயம் தாரநிஷ்டூரம் கிழக்குத்திக்கில் போக்குவரத்து நாற்கால் ஜீவனாற் பயமுமாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் சூரியனுடன் கூடினால், அற்பசௌக்கியம், சொற்ப வித்தையாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் திசாநாதனுடன் கூடினாலும், கேந்திரகோண சொட்சேத்திரலாபத்திலிருந்தாலும், இராஜ்யம் பூமி கிராமம் விவசாயம், பசுக்கள் எக்கியம் தீட்சை நல்ல அசுவ லாபமும் இராஜயோகங்கள் கிடைக்கும். கிணறு குளம் தானதருமம் இவைகளுண்டாம்.

புத்திநாதன்.

சுக்கிரன் துதியசப்தமாதிபதிகளுடன் கூடினல், தே[illegible] சாட்டியமாம். அதற்கு துர்க்கை இலட்சுமி ஜெபஞ்செய்யவும்.

## புதன்மகாதிசையில் சூரியபுத்தி-மீ-10-நாள்-6.

இதற்குப்பலன்,

சூரியன் சொட்சேத்திர திரிகோணத்திலிருந்தால், இராஜப்பிரசாதமும் பிரபு கிநேகிதாளும் இஷ்டமுண்டாம் சூரியன் செவ்வாய் பார்வை பெற்றிருந்தால், பூமிலாபமுண்டாம். இலக்கிஞதியுடன் கூடினல், முதலில் தனவருத்தும் மத்தியிலும் கடைசியிலும் விசனத்தைக்கொடுத்து சாவுவார்த்தை கேட்கப்படும்.

புத்திநாதன்.

சூரியன்செவ்வாய் சனிஇராகுகூடினுலும், அவர்கள், பார்வையானுலும், தேகத்தில் ரெணங்காண்பிக்கும் மனஸ்தாபம்வரும் இராஜாவினுலும் சுயஜனங்களினுலும் உபத்ரவம்வரும்.

புத்திநாதன்.

சூரியன் 6-8-12-ல்சத்துருவீட்டிவிருந்தால்,விஷபயம்சோரபயம் ஸ்தானப்பிரஷ்டம்வரும் ஆயுதபயமுமாம் பூமி நாற்கால் ஜீவன்நஷ்டம் மாதுர்பிதுர்கிலேசம் அதிசாரரோகபயமுமாம்.

புத்திநாதன்.

சூரியன் துதியசப்தமாதிபதிகளுடன் கூடினல், அபமிருத்துவரும் அதற்கு சூரியஜெபஞ்செய்யவும்.

## புதன்மகாதிசையில் சந்திரபுத்தி வஸ-1-மீ-5.

இதற்குப்பலன்.

சந்திரன் கேந்திரதிரிகோணசொட்சேத்திரனுப் சுபர்திருஷ்டி பெற்றிருந்தால் இராஜப்பிரீதி சௌக்கியம் விசேஷதனலாபம் ஸ்திரீ லர்பம் நூதனகிரகம் இஷ்டான்னபோஜனம் சங்கீதங் கேட்கிறதும் புத்திராள்பிறக்கிறதும் தெற்குத்திக்கில் பிரயாணம் போனவிடத்தில் இராஜப்பிரீதியும் தீவாந்திரவஸ்துலாபமுமாம்.

புத்திநாதன்.

சந்திரன்-6-8-12-ல் நீசனுப் சத்துருவீடாய் பாபர்கூடி பாபர் திருஷ்டியிருந்தால், பூரணச்சந்திரனுனுலும், சௌக்கியக்குறைச்சலும், தேகபிணியும் காரியவிக்னமும் மனஸ்தாபமும் சர்வஜனவிரோதமும் தன் பிரபுக்கு ஹானியுமாம்.

### புத்திநாதன்.

சந்திரன் குரு சுக்கிரன்கூடி திசாநாதனுக்கு கேந்திர திரிகோணலாபத்திலிருந்தால், புண்ணியதீர்த்த ஸ்நானப்பலனும், தன்பிரபுவினலே கூடுதலும், தனச்சேர்க்கையும், வித்தியா விலாசமும், புராணக்கதைகள் கேள்வியும் உண்டாம்.

### புத்திநாதன்.

சந்திரன்-6-8-12-ல் பாபருடன்கூடினுலும் தன்னூரில் அதிகாரம் மாதுர்கிலேசமாம்.

### புத்திநாதன்.

சந்திரன் துதியசப்தமாதிபதிகளுடன் கூடினல் தேகஜாட்டியமாம் இதற்கு துர்க்காதேவிஜெபஞ்செய்யவும். வெள்ளிப்பதுமை தானம் பண்ணவும்.

## புதன்மகாதிசையில் செவ்வாய்புத்திமீ-11-நாள்-27.

### இதற்குப் பலன்.

செவ்வாய் கேந்திர திரிகோண உச்சசொட்சேத்திரனுய் இலக்கினதியுடன் கூடினல், இராஜப்பிரீதி வெகுலாபம்நஷ்டமான திரவியங்கூடிவரும் விவசாயம் உண்டாம்.

### புத்திநாதன்.

செவ்வாய் சஷ்டாஷ்டமவியத்தில் நீசனுய் சத்துரு வீட்டிலிருந்து, பாபர் திருஷ்டியிருந்தாலும், தேகத்திற்கு தாபசுரம் நாற்கால்ஜீவ ஹானி கலகம் பிணி ரோகம் ஸ்தானப் பிரஷ்டம் வரும்.

### புத்திநாதன்.

செவ்வாய் திசாநாதனுக்கு கேந்திர திரிகோணலாபத்தில் பாபருடன் கூடி பாபர் திருஷ்டி பெற்றிருந்தாலும், மாதுர் ஹானி மனைவியாகூலம் துஷ்டகீர்த்தி மானபங்கம் சுரபயம் சர்வவிதத்திலும் விசனம் வரும்.

### புத்திநாதன்.

செவ்வாய் மேலெழுதிய ஸ்தானத்தில், சுபர்திருஷ்டி பெற்றிருந்தால், எழுதிய பலன்கள் கூடாமல், அற்பசௌக்கியம், சொற்ப லாபம், கஷ்டபலனும்.

### புத்திநாதன்.

செவ்வாய் திசாநாதனுக்கு -6-8-12-ல் பாபருடன் கூடினல் கஷ்டமானபீடை சோராக்கினி ஆயுதபயம் பந்துக்கள் சகோதர ஹானி அன்னியதேசவாசம் நிகளபந்தனம்.

# புதன் மகா திசை.

## புத்திநாதன்.

துதியசப்தமாதிபதிகளுடன் கூடினால், அபமிரு...
அதற்கு மூர்த்தி ஜெபஞ் செய்யவும்.

## புதன்மகாதிசையில் இராகுபுத்தி வரு-2, மீ-6-நா...

### இதற்குப் பலன்.

தாரக்கிலேசம் சோராக்கினி விஷபிடை அகால போஜ...
கலகம் வியாதி பீடை ஸ்தானப்பிரஷ்டம் வரும்.

### புத்திநாதன்.

இராகு கேந்திரகோணத்தில் சுபருடன் கூடினால் இராஜப்பிரீதியுண்டாம் கேளிக்கை விலாசமாய்சௌக்கியமான போஜனங்களும் ஆரோக்கியம் கீர்த்தி சகல லாபமுமாம்.

### புத்திநாதன்.

இராகு -6-8-12-ல் திசாநாதனுடன்கூடினால், சயன நிஷ்டூரம் நிலம்விட்டுப் பேர்தலும் பந்தனம் ரோகம் பீடையுமாம்.

### புத்திநாதன்.

இராகு துதியசப்தமாதிபதிகளுடன் கூடினாலும், அந்த ஸ்தானத்திலிருந்தாலும், இலட்சுமீகரமில்லாமல் சூலை ரோகத்தினாற் பிணியும் மரணத்திற்குக் காரணம் வரும். துர்க்கா தேவி ஜெபம் சாவல் தானஞ் செய்யவும்.

## புதன்மகாதிசையில் குருபுத்தி வரு-2, மீ-3-நாள்-6.

### இதற்குப்பலன்.

கேந்திர திரிகோண சொட்சேத்திரத்தில் இலாபாம்சை பெற்றிருந்தால், இராஜப்பிரீதி தனாகமம் கலியாண சம்பிரமம் பசு எருமை புராணகாவியம் கேட்குதல் தியானம் சமாதி ஜெப தபம் தேவகுருபக்தி யாத்திரை சத்கருமங்கள் சர்வ சித்தியுமாம்.

### புத்திநாதன்.

குரு-6-8-12-ல் நீச அஸ்தங்கிதனாய் சனி செவ்வாயுடன் கூடி யிருந்தால், கலகம் இராஜநிஷ்டூரம் பிணி சோராக்கினி பயம் மாதுர் பிணியும் இராஜ கோபம் தனச் சேதமாம்.

### புத்திநாதன்.

குரு திசாநாதனுக்கு கேந்திர திரிகோண லாபத்தில் பெலமாயிருந்தால், பந்துபூஜிதனாய் மனோத்சாகமாய் சுப சோபன சம்பத்துக்களுண்டாம் அன்னதானம் மிகவும் செய்வன்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு -6-8-12-ல் பெலனில்லாதவனு யிருக் ளத்ரபுத்ர விரோதம் பிணி இராஜ கோபத்தினுல், சதம் இருந்தாற்போலிருந்து அபமிருத்துபயமுண்டாம்.

புத்திநாதன்.

குரு துதியசப்தமாதிகளுடன் கூடினுல். தேகத்தில் பிணி ண்பிக்கும். அதற்கு சிவஜெபம் கோதானம் பூதானஞ் செய்யவும்.

## புதன்மகாதிசையில் சனிபுத்தி-வரு-2, மீ-8-நாள்-6.

இதற்குப்பலன்.

கேந்திரகோணலாப உச்சனுய் சுபர்வீட்டில் சொட்சேத்திர உச்சத்தில் இலக்கினுதியுடன் கூடியிருந்தாலும், சிவப்பிரதிஷ்டை செய்வன். சேனுதிக்கம் வரும், சேதுஸ்நானப் பலன் வரும். வீட்டில் பசுசேர்க்கையுமாம்.

புத்திநாதன்.

சனி-6-8-12-ல் நீசத்தில் சத்துரு ஸ்தானத்திலிருந்தால், தேகபிணியும், காரியவிசனமும் ஸ்தானப் பிரஷ்டமும் வரும்.

புத்திநாதன்.

சனி திசாநாதனுக்கு கேந்திரதிரிகோணத்தில் சுபருடன் கூடினுல், இராஜப்பிரீதியும் குதிரையுண்டாம்.

புத்திநாதன்.

சனி திசாநாதனுக்கு -6-8-12-ல் பாபியுடன் கூடினுலும், துக்கம் தாரம் புத்திரகிலேசம் புத்திரலாபம் அன்னியதேச கமனம் கால்நடையான திரிச்சனுமாம்.

புத்திநாதன்.

சனி துதிய சப்தமாதிகளுடன் கூடினுலும், அந்தஸ்தானத்திலிருந்தாலும், தேகத்திற்குப் பிணிகாணும். அதற்கு விஷ்ணு ஜெபஞ் செய்யவும்.

புதன்மகாதிசை முற்றிற்று.

---

# கேதுமகாதிசை வருஷம்-7.

இதற்குப்பலன்.

கேது கேந்திரகோண லாபத்திலிருந்தால், தேசகிராமங்கள் அதிகாரம் அன்னியதேச சஞ்சாரம் புத்ர தாரங்களால் சஞ்சாரமாம், ஆதியில் இராஜயோகம் மத்தியிலும் அந்தியத்திலும் அதிக பலன் உண்டு.

புத்திநாதன்.

கேதுசுபருடன்கூடி திருஷ்டிபெற்று தன்மகன்மாதி சுபர்களுடன் கூடினால், புண்ணியதீர்த்தமான கங்காதீர்த்தபலனுண்டாம்.

புத்திநாதன்.

கேது தனஸ்தானத்தில்-6-8-12-ல் பாபருடன்கூடி பாபர் திருஷ்டியிருந்தாலும், நிகளபந்தனம் ஸ்தானப்பிரஷ்டம் சூத்ர சூன்யரோகமாவது, பாண்டுரோகமாவது காட்டும், குஷ்டம் விஷபீடையுண்டாம்.

## கேதுமகாதிசையில் கேதுபுத்தி-மீ-4-நாள்-27.

இதற்குப்பலன்.

கேது கேந்திர திரிகோணலாபத்தில் லக்கினாதிபதியுடன் தன்மகன்மாதிகளுடன் கூடினால் புண்ணியதீர்த்தஸ்நானம் தேவகுருதரிசனம் யுத்தத்தில்ஜெயமும் இராஜப்பிரீதியும் நினைத்த காரியங் கைகூடுதலுமாம்.

புத்திநாதன்.

சஷ்டாஷ்டம வியத்திலிருந்தால் தேசசஞ்சாரங்களும் அந்திரதாகமும் அதிகக் கிலேசமாம்.

புத்திநாதன்.

கேது துதியசப்தமத்தி லிருந்தால் அபமிருத்துதோஷம் வரும் சாகரஸ்நானஞ் செய்யவும்.

## கேதுமகாதிசையில் சுக்கிரபுத்தி வருஷம்-1-மீ-2.

இதற்குப் பலன்.

சுக்கிரன் கேந்திரதிரிகோண இலாபத்தில் உச்சசொட்சேத்திரம் பெற்றிருந்தால் புத்ர தாரங்கள்விருத்தியும் இராஜப்பிரீதியும் சௌக்கியம் யானைமுதலிய வாகனங்களும் வீட்டில் லட்சுமிவிலாசம் பொருந்தியிருக்கும்.

ஜெயமுனிசூத்திர மொழி பெயர்ப்பு.

## புத்திநாதன்.

சுக்கிரன் தன்மகன்மாதிகளுடன் கூடியிருந்தால் நஷ்ட ராச்சியம் நஷ்டமான திரவியம் வாகனசுகம் சேதுஸ்நானமும் தவகுரு இராஜப்பிரசாதமுண்டாம்.

## புத்திநாதன்.

சுக்கிரன்-6-8-12-ல் நீசத்தில் நீசனுடன்கூடி பாபர் திருஷ்டி பெற்றிருந்தால் மார்வலி மரணம் சகலகாரியத்திற்கும் ஹானி சபலபுத்தியும் தாரம் புத்ராள் தனதானியம் நஷ்டம் கிலேசமுமாம்.

## புத்திநாதன்.

சுக்கிரன் திசாநாதனுக்கு கோணகேந்திர லாபத்தில் விருச்சிகத்திலிருந்தால் தேகாரோக்கியம் சுகம் வீட்டில் கலியாண சோபனமாம்.

## புத்திநாதன்.

சுக்கிரன் திசாநாதனுக்கு 6-8-12-ல் பாபனுடன் கூடியிருந்தால் இருந்தாற்போலிருந்து ஒருகலகமுண்டாம் பசுதன தானியங்களுக்கு ஹானி பந்துத்துவேஷம் சிரரோகம்.

## புத்திநாதன்.

சுக்கிரன் துதியசப்தமாதிகளுடன் கூடினால் தேகசாட்டியம் வரும். அதற்கு துர்க்கைஜெபஞ் செய்யவும்.

## கேதுமகாதிசையில் சூரியபுத்தி-மீ-4-நாள்-6.

## இதற்குப்பலன்.

சூரியன் கேந்திரகோணலாபத்தில் சொட்சேத்திர மித்திர ராசியிலிருந்தால் தனதானியம் சுபகாரியம் இஷ்டசித்தி தாரம் புத்திரசௌக்கியம் நினைத்தகாரியம்ஜெயம் இவைகளுண்டாம்.

## புத்திநாதன்.

சூரியன் -6-8-12-ல் பாபனுடன் கூடினால் இராஜபீடை மாதுர் பிதுருக்கு ஹானி தாயைப்பெற்றவனுக்கு கஷ்டம் பித்தபாண்டுரோகம் மரணம் தேசாந்தரசஞ்சாரம் சோராக்னி பயம் இராஜமந்திரி விரோதம் இராஜகோபத்தால் தனவிரயம் அல்லது தாரக்கிலேசம் சனிவாரத்தில் மனஸ்தாபம் சோமவாரத்தில் சந்தோஷம் புத்திகடைசியில் சௌக்கிய பலனும் அற்பலாபமுமாம்.

## கேது மகா திசை.

### புத்திநாதன்.

சூரியன் திசாநாதனுக்கு கேந்திரதிரிகோண இ[illegible] விருந்தால் சௌக்கியபலனும் தலைநோய் கொஞ்சமாயி[illegible] பட்ட காரியங்கைகூடும்.

### புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன் கூடியிருந்தால் அபமிரு[illegible] தோஷம் வரும் சூரியஜெபஞ்செய்யவும்.

## கேதுமகாதிசையில் சந்திரபுத்தி-மீ 7.

### இதற்குப்பலன்.

கேந்திர திரிகோணலாபத்தில் சொட்சேத்திரனுய்சுபனுடன் கூடியிருந்தால் இராச்சியலாபம் மனேத்சாகம் கலியாணம் வாகன பூஷணம் புத்திரசம்பத்து சர்வ காரியஞ் சித்திக்கும் புண்ணிய தீர்த்தமுமாம்.

### புத்திநாதன்.

6-8-12-ல் பாபயுக்தனுய் நீசம்பெற்றிருந்தால் அற்பசௌக் கியம் மனஸ்தாபம் காரியவிக்கினம் தேகசாட்டியம் உண்டாம்.

### புத்திநாதன்.

சந்திரன் மேலெழுதிய ஸ்தானங்களில், சுபனுடன் கூடினு லும் சுபதிருஷ்டிபெற்றாலும் தருமவிருத்தியும் தாமிசத்தின் பேரில் காரியசித்தியும் வீட்டில் பசுக்கள் சேர்க்கையுமாம்.

### புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு கேந்திர திரிகோண லாபத்தில் சுபருடன் கூடினுல்விவசாயங்கூடுதலும் வித்தையும்விசித்திரமான பூஷணலாபமும் நல்லபுஷ்பாலங்காரமும் நல்லரூபத்தையுடைய பந்துஜனங்களுக்கு பூஜிதனுய்யிருப்பன்.

### புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு 6-8-12-ல் அஷ்டமாதியுடன் கூடி யிருந்தால் தனதானிய ஹானியும் வியாகூலம் பிராணதுவே ஷம் மிகுந்தகோபமும் பள்ளத்தில் கிணற்றில் விழவும் கணக்கு வழக்கு ஆசனரோகமுமாம்.

### புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன் கூடினுலும் சந்திரன் துதியாதிபதி யாயிருந்தாலும், அபமிருத்து தோஷமுண்டாம் சந்திர ஜெபஞ் செய்யவும்,

## கேதுமகாதிசையில் செவ்வாய்புத்தி மீ-4-நாள்-27.

### இதற்குப்பலன்.

செவ்வாய் கேந்திரதிரிகோணத்தில் சொட்சேத்திரனுய் சுபருடன்கூடி சுபர் திருஷ்டி பெற்றிருந்தாலும், கிராம பூமி

தன தானியவிருத்தியும் நாற்கால் ஜீவன் விருத்தியும் வீடு களுமுண்டாம்.

புத்திநாதன்.

செவ்வாய் -6-8-12-ல் நீசனுய் பாபயுக்தனுனுல், ோராக்கினி பயம் சத்துரு விருத்தியும் பசாசுபயம் ஸ்தானப் ரஷ்டம்.

புத்திநாதன்.

செவ்வாய் தன்மகன்மாதிகளுடன் கூடினுல், பூலாபம் சௌக்கிய பலனும்.

புத்திநாதன்.

திசாநாதனுக்கு கேந்திரதிரிகோணலாபத்தில் விருச்சிகத் திலிருந்தால், இராஜப்பிரீதி அதன்மூலமாய் இலாபமும் புத்திர மித்திராள் சௌக்கியமுமாம்.

புத்திநாதன்.

செவ்வாய் திசாநாதனுக்கு-6-8-12-லும் இரண்டிலுமிருந் தால் மரணம் வரும் அல்லது தேசவாசம் வரும் சோராக்கினி பயமாம் புத்தி கடைசியில் கொஞ்சம் சௌக்கியத்தைக் கொடுக் கும்.

புத்திநாதன்.

துதியசப்தமாதிகளுடன் கூடினுல், தாபசுரம் விஷபயம் தார பீடை, அபமிருத்துதோஷமாம். அதற்கு எருது தானஞ் செய்தால் தீரும்.

## கேதுமகாதிசையில் இராகுபுத்திவருஷ-1, நாள்-18.

இதற்குப்பலன்.

இராகு சொட்சேத்திரமித்திர லாபத்திலிருந்தால், தன லாபம் சஞ்சாரம் திரிச்சல் மிலேச்சப்பிரபு மூலத்தில் தனதானி யம் சேர்க்கையும் புத்திமுதலில் விசனத்தைக்கொடுத்து மத்தி யிலுங் கடைசியிலும் சௌக்கியத்தைக் கொடுக்கும்.

புத்திநாதன்.

இராகு-6-8-12-ல் பாபருடன் கூடினுல், வெகு மூத்திர ரோகத்தால், தேகமிளைக்கும் சீதசுரவிஷம் நாலாமுறைக்காய்ச் சல் உபத்திரவம் கலகம் குன்மரோகமும் உண்டாகும்.

புத்திநாதன்.

இராகு துதியசப்தமத்திலிருந்தாலும், அவர்களுடன் கூடி னுலும், தாரக்கிலேசம் அபமிருத்துவாம். இதற்கு துர்க்காதேவி ஜெபஞ்செய்யவேண்டும்.

## கேதுமகாதிசையில் குருபுத்தி மீ-11-நாள்-6.

இதற்குப்பலன்.

குரு கேந்திரகோண லாபத்தில் சொட்சேத்திரனய் இலக்கினதியுடன் தருமகருமாதிகளுடன் கூடியிருந்தால், தனதானிய சம்பத்தும் குதிரை பல்லக்கு புத்ரமித்ரசுபசோபனதிகள் சந்தோஷ புண்ணியதீர்த்த லாபம் இஷ்டதேவதாப் பிரார்த்தனை இராஜப்பிரசாதம் நூதனப் பிரபுக்கள் தரிசனமும் இராஜ சல்லாபமுமாம்.

புத்திநாதன்.

குரு-6-8-12-ல் திசாநாதனுங்கூடி நீசமானல், சோராக்கினி ரெணபயம் கிலேசம் ஸ்தானப்பிரஷ்டம் சகோதரநாசமாம்.

புத்திநாதன்.

குரு திசாநாதனுக்கு கேந்திர திரிகோணலாபத்தில் சுபருடன் கூடினல், விசித்திரமான பூஷணமும் வாகன பூமி லாபம் சந்தன புஷ்பம் ஆடையாபரணலங்காரம் தூரதேசப் பிரயாணமுமாம்.

புத்திநாதன்.

குரு திசாநாதனுக்கு -6-8-12-லிருந்தால் வியாகூலம் கலகம் பீடை இனத்துவேஷமாம்.

புத்திநாதன்.

குரு துதியசப்தமாதிகளுடன் கூடினல், அபமிருத்துவாம். இதற்குச் சொர்ன தானஞ் செய்யவும்.

## கேதுமகாதிசையில் சனிபுத்தி வரு-1, மீ 1-நாள்-9.

இதற்குப்பலன்.

சனி கேந்திரகோணத்திலிருந்தால், இராஜானுக்கிரகம் தன்னுடைய பிரபுவினல் வாகன பூஷண லாபமுண்டாம்.

புத்திநாதன்.

சனி-6-8-12-லிருந்தால், மனஸ்தாபம் காரிய விக்கினம் ஆலசியம் பிதுர்மாதுர் ஹானியுமாம்.

புத்திநாதன்.

சனி துதியசப்தமாதிகளுடன் கூடினல், அபமிருத்துவாம். கறுப்பு எருமை தானஞ் செய்யவும்.

## கேதுமகாதிசையில் புதன்புத்தி மீ-11-நாள்-27.

### இதற்குப் பலன்.

புதன் கேந்திர திரிகோண லாபத்தில் சொட்சேத்திரனு யிருந்தால், இராச்சியலாபம் மகாசுகம் புண்ணியகதை புராண காவியக் கேள்வியும் பூமி புத்திர லாபம் வித்தியா லாபம் தன தானிய விருத்தியும் சுபசோபனுதிகளுமாம். தன்மகன்மாதி களுடனிருந்தால் பாக்கியவிருத்தி சுகசௌக்கியம் மாதுர் பிதுர் சௌக்கியமாம்.

### புத்திநாதன்.

6-8-12-ல் சனி வீட்டில் சனியுடனுவது, பார்வையாவது பெற்றிருந்தால், இராஜவிரோதம் அன்னியவீட்டில் வாசம் வாகனம் தன தானியத்திற்கு லயம்வரும்.தெற்குத்திக்கில்பிரயாணம் போனவிடத்தில் காரியங்கூடுதலும், முதலில் சௌக்கியம் மத்தியில் தனவரத்து அந்தியத்தில் விசனமாம்.

### புத்திநாதன்.

புதன் திசாநாதனுக்கு கேந்திர திரிகோண லாபத்தில் சுபருடன் கூடினுல், சுபபலனும். வாகன பூஷண லாபமுண்டாம். தேகாரோக்கியம் வீட்டில் சுபசோபனம் இலட்சுமீ விலாசம் உண்டாகும்.

### புத்திநாதன்.

புதன் திசாநாதனுக்கு-6-8-12-லிருந்தால் கஷ்டம் தாரம் புத்திராளுக்குப்பீடை அபகீர்த்தியுமாம்.

### புத்திநாதன்.

புதன் துதியசப்தமாதிகளுடன்கூடியிருந்தால் அபமிருத்து தோஷமுண்டாம். இதற்குப் பிராமண போஜனஞ்செய்யவும்.

கேதுமகாதிசை-முற்றிற்று.

---

# சுக்கிரமகாதிசை-வருஷ-20.

### இதற்குப்பலன்.

புத்திரருண்டாம் தனபாக்கியஸ்திரீகளுண்டாம் நல்லசுகந்த பரிமளங்கள் பூஷணங்கள் வாகனங்களும் கீர்த்திப்பிரதிஷ்டையுமாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் உச்சத்திலிருந்து அம்சையில் நீசனுயிருந்தால் சத்கருமங்கள் முதலாகியதும் அர்த்தமில்லாமல் தரித்திரனுய் கஷ்டப்படுவன்.

### புத்திநாதன்.

சுக்கிரன் நீசனுயிருந்து அம்சையில் பரம உச்சனுயிருந்தால் வியாபாரபலிதம் சகலமுங்கிடைக்கும்.

### புத்திநாதன்.

சுக்கிரன் சொட்சேத்திரனுய் மூலத் திரிகோணத்திலாவது இருந்தால் சுபபலத்தைக்கொடுத்து இராஜயோகமாய் தேசாந்தர அயிஸ்வரிய சம்பத்து நவரத்தினுதி லாபங்களுமுண்டாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் தனலாபத்திலிருந்து அல்லது சந்திரனுக்கு தனலாபத்திலிருந்தாலும் நிதி நிக்ஷேபலாபம் கோடிகன்னிகாதானம் தடாகதன்மங்கள் தேவாலயங்களுக்கு உச்சவாதி செய்து வைக்கிறதும் கேளிக்கை முதலாகிய வாத்திய விநோதங்களுண்டாக்குகிறதும் குடைகள் வெண்சாமரங்களுடன் வெளியே புறப்படுகிறதுமாம்.

## சுக்கிரமகாதிசையில் சுக்கிரபுத்தி வரு-3-மீ-4.

### இதற்குப்பலன்.

சுக்கிரன் இலாப உச்சனுயிருந்தாலும் சொட்சேத்திர கேந்திர திரிகோணத்திலிருந்தாலும் இராச்சியத்திற்கு அருகனுகிறதும் வாகனப்பிராப்தியும் யானை குதிரை பசுக்கள் இலாபமும் நித்திய இஷ்டான்னபோஜனமும் அகண்ட மண்டலாதிபத்தியமும் இராஜப்பிரீதிகளும் மிருதங்க வாத்திய கோஷ்டங்களுடனே வீட்டில் இலட்சுமி விலாசமுமாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன் திரிகோணத்திலிருந்தால் இராஜ்யார்த்தம் பந்து விவாகசம்பத்து புத்திர மித்திர கலியாணம் வைபோகம் சேனுதிபத்தியம் நஷ்டராச்சியம் தனப்பிராப்தியும் பசுக்கள் சேர்க்கையுமுண்டாம்.

### புத்திநாதன்.

சுக்கிரன்-6-8-12-ல் நீசனுய் சத்துரு வீட்டிலிருந்தால் ஆத்மபந்து மனக்கிலேசம் தாரவர்க்கங்களிற் பீடையும் தனதானிய சுபக்ஷயமும் ஸ்தானப் பிரஷ்டனுன ஹானியுமாம்.

புத்திநாதன்.

சுக்கிரன் தன்மகன்மாதி யாயிருந்து இலக்கினத்திலாவது நாலிலாவது இருந்தால் திசையிலும் புத்தியிலும் தேசாதிபத்யங் கிடைத்து தேசாந்தர அயிஸ்வரிய சம்பன்னனவன் கீர்த்தியும் ஸ்திரீபுத்திர ஜனங்களும் விசேஷ பாக்கியத்தைக்குறித்து மனோ தைரியமும் இராஜாங்கத்தில் இவன் சொல் கேட்கிறதுமாம்.

புத்திநாதன்.

சுக்கிரன் துதியசப்தமாதிகளுடன் கூடியிருந்தால் தேகத் திற்குப்பிணிகாணும் அதற்கு உருத்திரஜெபஞ் செய்யவும்.

## சுக்கிரமகாதிசையில் சூரியபுத்தி ஷ-1.

இதற்குப்பலன்.

தாபசுரம் இராஜநிஷ்டூரம் தாயாதிகலகம் எதுகாரியமுங் கெடுதலையாகவே முடியும்.

புத்திநாதன்.

சூரியன் உச்சசொட்சேத்திர மித்திரக்ஷேத்திரத்தில் சுப ருடன் கூடியிருந்தால் தன்னுடைய பிரபுவினால் சுகசௌக்கிய மும் இராஜஸ்திரீயுமுண்டாம் தனசம்பத்தும் இராச்சியமும் தன ப்பிராப்தியும் கலியாண சம்பிரமமும் கர்ப்பாதான சந்தோஷ முமாம்.

புத்திநாதன்.

சூரியன் கேந்திர திரிகோணத்தி லிருந்தால் அற்ப பாக்கிய மும் பிதுர்கிலேசம் பயம் தாயாதி ஜனங்களுக்கு ஹானியும் புத்திமுதலில் ஆயுதபயம் விசனம் மத்தியில் சௌக்கியபலனும் கடைசியில் இராஜப்பிரீதியும் கீர்த்தியு முண்டாயிருக்கும்.

புத்திநாதன்.

சூரியன்-6-8-12-ல்-நீசனாய் பாபியுடன் கூடியிருந்தால் நீச கன்மம் தேகபிணியும் இராஜபயம் திரிச்சல் சயனநிஷ்டூரம் தன் னிடத்தில் சேவிக்கப்பட்டவர்களுக்கும் தனக்கும் கலகமும் இராஜவிரோத பயமு முண்டாயிருக்கும்.

புத்திநாதன்.

சூரியன் திசாநாதனுக்கு கேந்திர திரிகோண லாபத்தில் பாபயுக்தனாயிருந்தால், தனவிரயம் ஜனவிரோதம் அவந்தரை யான போஜனம் பாபகன்மங்களைச் செய்கிறதும் புத்தி முதலில் இந்தபலத்தைக் கொடுத்து அந்தியத்தில் சுபபலனைக்கொடுக்கும்.

புத்திநாதன்

சூரியன் திசாநாதனுக்கு 6-8-12-ல் பாபயுக்தனுயிருந்தால், ரெணத்தினுல் அக்கினியால் போக்குவரத்து வழிகளிற் சோர பயம் தேகவுஷ்ணம் சுரம் இவையுண்டாம்.

புத்திநாதன்.

சூரியன்துதியசப்த மாதிகளுடன் கூடியிருந்தால் அபமிருத்து தோஷமாம் இதற்கு சூரியப்பிரீதி செய்யவும்.

## சுக்கிரமகாதிசையில் சந்திரபுத்திவருு-1-மீ-8.

இதற்குப் பலன்.

சந்திரன் இலக்கிஞதியுடன்கூடி, சுபயுக்தனுய் பூரணச் சந்திரனுய் கேந்திர திரிகோண லாபத்திலிருந்தால், இராஜ்யம் சம்பத்து சேனுதிபத்தியம் தேசாந்திர ஐசுவரியம் புண்ணிய தீர்த்தம் தேவகுரு தரிசனம் சங்கீத ஜனங்களுடன் கூடியிருக்கிறதும் நித்யம் இஷ்டான்ன போஜனமுமாம்.

புத்திநாதன்.

சந்திரன் நீசனுய் அஸ்தங்கிதனுய்-6-8-12-லிருந்தால், இந்தப்படி திசாநாதனுக்கு-6-8-12-லிருந்தால், திரிச்சல், தேகாயாசம் இராஜமந்திரி விரோதமாம். தன்னூருக்கு வடபாரிசத்தில் பிரயாணம் போனவிடத்தில் மித்திரனுயிருக்கப்பட்ட பிரபுக்கு ஹானியும் தன் தேகத்திற் பிணிகண்டு வீடுவந்து சேர்தலுமாம்.

புத்திநாதன்.

சந்திரன் திசாநாதனுக்கு கேந்திரகோண லாபத்திலிருந்தால், இராஜப்பிரீதியும் தேசக்கிராமாதிபத்யமும் கீர்த்தி வாகன பூஷணமும் தடாக தன்மங்களுஞ் செய்வன். புத்திமுதலில் நடந்து கடைசியில் விசனத்தைக் கொடுக்கும்.

புத்திநாதன்.

சந்திரன் துதியசப்தமாதிகளுடன் கூடில், தேகத்திற்குப் பிணிகாண்பிக்கும். சகல ரோகமுண்டாம். இதற்குச் சந்திர ஜெபஞ் செய்யவும்.

## சுக்கிரமகாதிசையில் செவ்வாய்புத்திவருு-1-மீ 2.

இதற்குப்பலன்.

செவ்வாய் கேந்திரதிரிகோண லாபத்தில் சொட்சேத்திரமாய், இலக்கிஞதியுடனேயும், தன்ம கன்மாதிகளுடன் கூடியிருந்தாலும், சுபர்திருஷ்டி யிருந்தாலும், இராஜப்பிரீதியுண்டாம்

இலட்சுமி கடாட்சம் பொருந்தி இலட்சணத்துடனே புத்திரா சுபசந்தோஷங்களைப் பெற்று வீட்டில் பசு சேர்க்கையும் பூலாபமும் நினைத்தகாரியமுங் கைகூடுதலுமாம்.

### புத்திநாதன்.

செவ்வாய் -6-8-12-லிருந்தாலும், திசாநாதனுக்கு -6-8-12-லிருந்தாலும், இராஜயோகமாயிருந்த சௌக்கியங்களைக் கெடுதல் செய்யும் சுரதோஷங்கண்டு ஸ்தானப்பிரஷ்டம் வந்து சிரரோகமுண்டாம்.

### புத்திநாதன்.

செவ்வாய் திசாநாதனுக்கு கேந்திர திரிகோணலாபத்தில் விருச்சிகத்திலிருந்தாலும் தானதருமம், வீட்டில் கலியாணம், தனதானிய லாபங்களும் நாற்கால் ஜீவ லாபங்களும் விவசாயங் கூடுதலுமாம்.

### புத்திநாதன்.

செவ்வாய் துதியசப்தமாதிகளுடன் கூடில், அபமிருத்துவாம். அதற்கு எருது தானஞ் செய்யவும்.

## சுக்கிரமகாதிசையில் இராகுபுத்திவரு-3.

### இதற்குப் பலன்.

இராகு கேந்திர திரிகோண லாபத்தில், உச்சனுய், சுபருடன் கூடியிருந்தாலும், தன்ம கன்மாதிகளுடன் கூடியிருந்தாலும் இலக்கினுதிபதியுடன் கூடியிருந்தாலும் சௌக்கியம் சத்துரு ஹானி இராஜப்பிரீதி இராஜயோகமாய் மகா தீர்த்தஸ்நான பலனும் சுக்கிலபட்சத்துச் சந்திரன்போல நாளுக்குநாள் யோக பிரபலமாம். இந்தப் புத்தியில் கார்த்திகை மாசம் வந்தபோது தேகத்திற்கு தாபசுரம் அஜீரணம் காரியவிக்னம் திரிச்சல் மனைவியாகூலம் இவையுண்டாம்.

### புத்திநாதன்.

6-8-12-ல் அசுபன் கூடியிருந்தால், பிதுர் மாதுருக்குக் கருமஞ் செய்யவும். அல்லது அவர்களுக்கு விரோதமாகிலும் சர்வஜன விரோதமாகிலுமாம். இராஜமூலத்தில் அபகரிக்கும் நிருதி மூலையில் பிரயாணம் போனவிடத்தில் காரியங் கூடுதலையில்லாமல் மறுபடியும் ஊர்வந்து சேர்வன்.

### புத்திநாதன்.

இராகு துதிய சப்தமாதிகளுடன், சம்மந்தமிருந்தால், அபமிருத்து தோஷமாம் இதற்கு இராகு சாந்தி செய்யவும்.

## சுக்கிரமகா திசையில் குருபுத்தி-வரு-2-மீ-8.

### இதற்குப்பலன்.

குரு கேந்திர திரிகோணத்தில் சொட்சேத்திரமாய் இந்தப்படியே திசாநாதனுக்கும் இருந்து, மித்துருபாக்கிய கன்மாதிகளுடன் கூடியிருந்தால் நஷ்ட ராஜ்யப்பிராப்தியும் சுயகிராமத்தில் தனதானிய சம்பத்தும் மித்துருக்களால் பிரபு சன்மானமும் சமுசயமில்லாமல் நடக்கும். தெற்குத் திக்கில் பிரயாணம் இராஜமூலத்தில் தனகமமும் இராஜப்பிரீதியினலே கீர்த்தியும் குதிரை முதலாகிய வாகன லாபங்களும் தாரம் புத்ரோத்சவமும் மித்துருக்களுடைய ஒருமைபுமாம்.

### புத்திநாதன்.

குரு -6-8-12-ல் அஸ்தங்கிதனுய், சத்துரு ராசியில் நீசராசியி லிருந்தாலும், அசுபத்தை யடைந்து குன்மம் பாண்டுரோகம் சம்பவிக்கும். தாரத்திற்கு க்ஷயரோகம் சம்பவித்து புத்ரபவுத்ராளுக்கும் அரிஷ்டம் சம்பவிக்கும். விவசாயங்களுக்கும் சத்கருமங்களுக்கும் ஹானி வரும்.

### புத்திநாதன்.

குரு துதியசப்தமாதிகளுடன் கூடியிருந்தால், தேகத்திற்கு உபத்திரவம் வரும். அதற்குக் குரு ஜெபஞ் செய்யவும்.

## சுக்கிரமகா திசையில் சனிபுத்திவரு3-மீ-2.

### இதற்குப்பலன்.

சனி கேந்திர திரிகோண லாபத்தில் சொட்சேத்திரமூலத் திரிகோணத்திலிருந்தாலும், சம்பத்துண்டாம் இலட்சுமிகரமுண்டாம் சத்துரு ஜெயமாம்.

### புத்திநாதன்.

சனிநீசனுய் 6-8-12-ல் சத்துருவீட்டி லிருந்தாலும், வியாதியும் விசனமும் அர்த்தவிரயமுமாம் புத்திகடைசியில் சௌக்கியத்தைக் கொடுக்கும்.

### புத்திநாதன்.

சனி துதிய சப்தமாதிக ளுடன் கூடியிருந்தால் அபமிருத்துவாம் அதற்கு சனிஜெபஞ் செய்யவும்.

## சுக்கிரமகாதிசையில் புதன்புத்தி வருடம்-2-மாதம்-10.

### இதற்குப்பலன்.

புதன் கேந்திர திரிகோண லாபத்தில் சுப உச்சனுய் சொட்சேத்திரமா யிருந்தாலும் இராஜப்பிரீதியும் சௌக்கியமும் புத்திரலாபமும் தனலாபங்களும் தன்னுடைய பிள்ளைக்குக் கலியாணமும் வாகன பூஷணமும் புராணதரும கதைகளைக் கேட்கிறதும் சிங்காரமான கேள்வி விலாசமும் பிரசங்கமுமாம்.

### புத்திநாதன்.

புதன்-6-8-12-ல் பாபயுக்தனுனல் நாற்கால்ஜீவ ஹானியும் அன்னியகிரகத்தில் வாசமும் மனேவியாகூலமும் காலாதி கிரம போஜனங்களும் ருணப்படுகிறதுமாம்.

### புத்திநாதன்.

புதன் துதிய சப்தமாதிகளுடன் கூடியிருந்தால் விசனம் வாதசுரம் பிணிகாண்பிக்கும் அதற்கு புதனைக்குறித்து எள்ளு ஓமம் அறுகம்புல் ஓமஞ்செய்யவும்.

## சுக்கிரமகாதிசையில் கேதுபுத்தி வருடம்-1-மாதம்-2.

### இதற்குப்பலன்.

கேது கேந்திர கோண லாபத்தில் சுபனுடனிருந்தால் தீர்த்தயாத்திரை நித்யம் இஷ்டமான போஜனமும் தேவதாதரிசனம் இராஜதுவாரத்தில் மனக்கிலேசம் மித்துரு ரோசமுமாம்.

### புத்திநாதன்.

கேது-6-8-12-ல் பாபியுடன் கூடி பாபர் பார்வைபெற்றிருந்தால் சோராக்கினிபயம் மரணபயம் புத்திர ஹானி பந்துஜனகலகம் காமாலைரோகம் தனபயம் கிரகப்பிரவேசம் தூரதேசம் போக வரும்.

### புத்திநாதன்.

கேது துதிய சப்தமாதிகளுடன் கூடியிருந்தால் அபமிருத்து தோஷம்வரும். அதற்குப்பரிகாரம் கேதுஜெபம் சாகரஸ்நானம் கம்பளம் இரும்பு தானஞ்செய்யவும்.

சுக்கிரமகாதிசை-முற்றிற்று.

## சூரியதிசை சூரியபுக்தியில் சூரியாதி கிரகங்களின் அந்திராதிய மூவகைப் பலன்களில்

# அந்திரபலன்கள்.

### சூரியாந்திர பலன்.

இராஜ பயம் ரோக பயம் பந்துபயம் தாரரோகம் அபமிருத்து பயம் இவைகள் உண்டாம்.

### சந்திராந்திரபலன்.

பரஸ்திரீகமனம் தத்ஜன சவகாசம் ஸ்திரீபுத்ரலாபம் தனலாபம் வாதபித்தரோகம் அன்னியஜனத் துவேஷம் இவைகளுண்டாம்.

### குஜாந்திரபலன்.

ஸ்தானப்பிரஷ்டம் மனஸ்தாபம் தனவிரயம் குமரகண்டவலி அக்கினிபயம் இவைகள் உண்டாம்.

### இராகு அந்திரபலன்.

முசல்வலி விஷபயம் இராஜகோபம் தனநாசம் தனலாபம் பந்துநாசம் இவைகள் உண்டாம்.

### குரு அந்திரபலன்.

ஸ்திரீ புத்ராள் சௌக்யம் தனலாபம் தேகசௌக்யம் இவைகள் உண்டாம்.

### சனி அந்திரபலன்.

பந்துநாசம் தனநாசம் சிரரோகம் நேத்திரரோகம் இவைகள் உண்டாம்.

### புதனந்திரபலன்.

கிரய விக்கிரய லாபம் மனோத்சாஹம் இவைகள் உண்டாம்,

### கேது அந்திரபலன்

மரணபயம் புத்ரமித்ரநாசம் திரவியநாசம் தாசிதாசாள் நாசம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரனந்திர பலன்.

இராஜ்யலாபம் ,வாகனலாபம் சத்ரலாபம் திரவியலாபம் தான தருமம் இவைகள் உண்டாம்,

அந்திரபலன்கள் முற்றிற்று.

## சூட்சமபலன்கள்.

### சூரியசூக்ஷுமபலன்.

கடன்படுகை பூமிநாசம் மித்திரஜனநாசம் ஸ்தானப்பிரஷ்டம் இவைகள் உண்டாம்.

### சந்திரசூக்ஷுமபலன்.

தேவபக்தி பிராமணபக்தி இஷ்டஜனசந்தோஷம் இவைகளுண்டாம்.

### குஜசூக்ஷுமபலன்.

குரூரகர்மம் சத்ருபீடை ஆயுதபயம் இவைகள் உண்டாம்.

### இராகு சூக்ஷுமபலன்.

சோரபயம் ஆயுதபயம் விஷபயம் ரெணமுகத்திலே அபஜெயம் தானதருமம் இவைகள் உண்டாம்.

### குருசூக்ஷுமபலன்.

இராஜ வெகுமானம், தனலாபம், புத்திர சுகம், மனசந்தோஷம் இவைகள் உண்டாம்.

### சனி சூக்ஷும பலன்.

சௌரியம் துணிபு ஸ்தானசலனம் ரெணமுகத்திலே காயம் தனநாசம் துக்கம் இவைகள் உண்டாம்.

### புதசூக்ஷுமபலன்.

அன்னிய ஜனங்களினுல் நன்மை வஸ்திரலாபம் இவைகளுண்டாம்.

### கேது சூக்ஷும பலன்.

ஸ்திரீநாசம் மாதுர்பிதுர்நாசம் தனநாசம் இவைகளுண்டாம்.

### சுக்கிர சூக்ஷும பலன்.

ஸ்திரீலாபம் புத்திரலாபம் தனலாபம் மித்துருசௌக்கியம் இவைகள் உண்டாம்.

சூட்சுமபலன்கள் முற்றிற்று.

---

## பிராணபலன்கள்.

### சூரியபிராணபலன்.

உலக்கையடி கல்லெறி சத்ருவாதை விஷபயம் மரணபயம் இவைகள் உண்டாம்.

### சந்திர பிராண பலன்.

இஷ்டான்னபோஜனம் தனப்பிராப்தி ஆபரணுதி சௌக்யம் இராஜவைபோகம் அக்கினிமந்தம் தனநஷ்டம் இவைகள் உண்டாம்.

### குஜ பிராண பலன்.

இராஜகோபம் தனநாசம் துக்கம் சௌக்கியநாசம் இவைகள் உண்டாம்.

### இராகு பிராண பலன்.

தனநஷ்டம் அக்கினிபயம் இராஜப்பயம் அன்னத்துவேஷம் இவைகள் உண்டாம்.

### குரு பிராண பலன்.

காரியசித்தி தனலாபம் சௌக்கியம் இவைகள் உண்டாம்.

### சனி பிராண பலன்.

அபமிருத்து தோஷம் தன தானிய நஷ்டம் அவமானம் இவைகள் உண்டாம்.

### புதன் பிராண பலன்.

காரியசித்தி இராஜவெகுமானம் பூலாபம் திரவியலாபம் ஸ்திரீலாபம் இவைகள் உண்டாம்.

### கேது பிராண பலன்.

பாபகர்மம் திரவியநாசம் அபஜெயம் இவைகள் உண்டாம்.

### சுக்கிர பிராண பலன்.

இராசவெகுமானம் பூலாபம் திரவியலாபம் ஸ்திரீலாபம் இவைகள் உண்டாம்.

பிராண பலன்கள் முற்றிற்று.

---

## சந்திரதிசை சந்திரபுத்தியில் சந்திராதிய கிரகங்களின் அந்திராதிய மூவகைப் பலன்களில்

# அந்திரபலன்கள்.

### சந்திராந்திர பலன்.

திரவிய லாபம், பூலாபம், புத்ரலாபம், சேனுதிபத்தியம், விவாகம், புண்ணியவர்த்தனே இவைகள் உண்டாம்.

### குஜாந்திர பலன்.

பந்துலாபம் தன லாபம் சத்ருபயத்தினுற் களத்திர நாசம் உபவாசம் இவைகள் உண்டாம்.

### இராகுஅந்திரபலன்

விஷபயம் சத்துருபயம் தனநாசம் பந்துநாசம் இவைகள் உண்டாம்.

### குரு அந்திரபலன்.

தேவபூஜை பிராமணபூஜை அபீஷ்டலாபம் பூலாபம் இவைகள் உண்டாம்.

### சனி அந்திரபலன்.

மரணபயம் ரோகம் தனச்சேதம் இவைகள் உண்டாம்.

### புதனந்திர பலன்.

ஸ்திரீலாபம் புத்திரலாபம் பூலாபம் தனலாபம் இரத்தின மௌக்திகாதி லாபம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரனந்திர பலன்.

பூலாபம் பூஷணலாபம் வஸ்திரலாபம் மணிப்பிரவாள லாபம் இவைகள் உண்டாம்

### சூரியனந்திர பலன்.

இரத்தபித்தம் சுரம் உதர ரோகம் பிதுர்பீடை இவைகள் உண்டாம்.

அந்திரபலன்கள் முற்றிற்று.

---

## சூட்சுமபலன்கள்.

### சந்திரசூட்சும பலன்.

பூலாபம் வஸ்திரலாபம் இராஜவெகுமானம் தருமசிந்தை இவைகள் உண்டாம்.

### குஜசூட்சும பலன்.

இராஜ விரோதம் வாதபித்த சிலேட்டுமரோகம் அன்னிய ஜனகோபம் குக்ஷிரோகம் பிதுர்மரணம் இவைகள் உண்டாம்.

### இராகுசூட்சும பலன்.

மித்துரு குரோதம் பந்துஜன குரோதம் தேசத் தியாகம் திரவியநாசம் விதேசகமனம் நிகளபந்தனம்இவைகள் உண்டாம்.

### குருசூட்சும பலன்.

அஸ்வாதி வாகனப்பிராப்தி தேஹாரோக்கியம் சம்பத்து ரெணவிஜயம் பூஷணலாபம் இவைகள் உண்டாம்.

### சனிசூட்சும பலன்.

விவகாரங்களிலே் அபஜெயமாதல் தனநஷ்டம் பிராணபயம் இராஜத்துவேஷம் இவைகள் உண்டாம்.

### புதசூட்சும பலன்.

புத்திரசந்தோஷம் விவாகம் திரவிய லாபம் வஸ்திர லாபம் விதேசப்பிராப்தி வாகன லாபம் இராஜ சன்மானம் இவைகள் உண்டாம்.

### கேதுசூட்சும பலன்.

சகல துர்ப்பீடை ஆயுத பயம் விருட்சம் பர்வதம் விஷம் இவற்றால் மரணபயம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரசூட்சுமபலன்.

விவாகம் பூலாபம் வஸ்திரலாபம் பூஷணலாபம் கீர்த்திப்ரதிஷ்டை இவைகள் உண்டாம்.

### சூரியசூட்சுமபலன்.

பசுநாசம் தனதானியநாசம் காரியவிக்கினம் சரீரபீடை தேசத்தியாகம் இவைகள் உண்டாம்.

சூட்சுமபலன்கள் முற்றிற்று.

---

## பிராணபலன்கள்.

### சந்திரபிராணபலன்.

யோகசித்தி சமாதிசித்தி தபசித்தி ஆசாரியத்துவம் இவைகள் உண்டாம்.

### குஜபிராணபலன்.

க்ஷயரோகம் குஷ்டரோகம் இரக்தகாசம் பூதாவேசம் பந்துநாசம் பயங்கரம் இவைகள் உண்டாம்.

### இராகுபிராணபலன்.

பூதபயம் பந்தனம் தேசப்பிரஷ்டம் இவைகள் உண்டாம்.

### குருபிராணபலன்.

பூலாபம் தனலாபம் தர்மசிந்தை தேவப்பிரசாதம் தேகசௌக்கியம் மித்துருஜனதரிசனம் இவைகள் உண்டாம்.

### சனிபிராணபலன்.

தைரியம் சத்துருபீடை பராப்ரவேசம் நேத்திரரோகம் இவைகள் உண்டாம்.

### புதபிராணபலன்.

இராஜவெகுமானம் இராஜஸ்திரீ வெகுமானம் இவைகள் உண்டாம்.

### கேதுபிராணபலன்.

அக்கினிபயம் விஷபயம் குக்ஷிரோகம் புத்திரநாசம் பந்து நாசம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரபிராணபலன்.

பால்யஸ்திரீலாபம் புண்யசகோதரவிருத்தி தனலாபம் தேக சௌக்கியம் இவைகள் உண்டாம்.

### சூரியபிராணபலன்.

கோபம் ரோகம் பிராணபயம் மனோவியாதி இராஜபீடை இராஜத்தியாகம் இவைகள் உண்டாம்.

பிராணபலன்கள் முற்றிற்று.

---

## குஜதிசை குஜபுத்தியில் குஜாதியகிரகங்களின்

அந்திராதிய மூவகைப்பலன்களில்;

# அந்திரபலன்கள்.

### குஜாந்திரபலன்.

நீசஸ்திரீபோகம் பந்துஜனபீடை விபசாரம் இவைகள் உண்டாம்.

### இராகு அந்திரபலன்.

தனதானியநாசம் பசுநாசம் சேவகாள் நாசம் ரோகப் பிராப்தி இவைகள் உண்டாம்.

### குரு அந்திரபலன்.

இராஜசன்மானம் தைரியம் தனலாபம் இவைகள் உண்டாம்.

### சனி அந்திரபலன்.

சூத்திரவிரோதம் தேசத்யாகம் தனநஷ்டம் பந்தனம் இவைகள் உண்டாம்.

### புதாந்திரபலன்.

தனலாபம் இராஜசன்மானம் பந்துக்கள் கூட்டுறவு இவை கள் உண்டாம்.

### கேது அந்திரபலன்.

விவசாயம் தனதானியநாசம் சரீரபீடை இவைகள் உண்டாம்.

### சுக்கிரனந்திரபலன்.

தேககாந்தி பொறுமை நற்புத்தி வாகனம் தாசிதாசாள் இலாபம் இவைகள் உண்டாம்.

### சூரியாந்திரபலன்.

சிரரோகம் குக்ஷிரோகம் கிரந்திரோகம் ஸ்திரீரோகம் பசாசுபீடை இவைகள் உண்டாம்.

### சந்திராந்திரபலன்.

கீர்த்திப்பிரதாபம் பலம் காந்தி சௌரியம் இவைகள் உண்டாம்.

அந்திரபலன்கள் முற்றிற்று.

---

## சூட்சுமபலன்கள்.

### குஜசூட்சுமபலன்.

பூமிநாசம் குமரகண்டவலி நிகளபந்தனம் புஷ்பாலங்காரம் இவைகள் உண்டாம்.

### இராகுசூட்சும பலன்.

விஷபயம் அக்கினி பயம் ஆயுத பயம் சத்துரு பயம் ஸ்திரீ பயம் தன நாசம் சரீரக்கிலேசம் இவைகள் உண்டாம்.

### குருசூட்சுமபலன்.

தேவப்பிரசாதம் மந்திர சித்தி ஆசாரத்துவம் நற்புத்தி இவைகளுண்டாம்.

### சனிசூட்சும பலன்.

பந்துநாசம் தனதான்ய லாபம் தாசிதாசாள் இலாபம் ஞான சித்தி இவைகள் உண்டாம்.

### புதசூட்சுமபலன்.

ஆபரண லாபம் வாதனுரோகணம் காசரோகம் இவைகள் உண்டாம்.

### கேதுசூட்சுமபலன்.

அடிமைப்படுதல் அழுதுக்கொண்டிருத்தல் இவைகள் உண்டாம்.

### சுக்கிரசூட்சுமபலன்.

இஷ்ட ஸ்திரீபோகம் இஷ்டான்ன போஜனம் இஷ்டார்த்த சித்தி இவைகள் உண்டாம்.

### சூரியசூட்சுமபலன்.

இராஜத்துவேஷம் லோகத்துவேஷம் வஞ்சனைப்படுதல் இவைகள் உண்டாம்.

### சந்திரசூட்சுமபலன்.

தேவ பூசை பிராமணபூசை சன்மார்க்கம் ரோகம் ஆதாயம் இவைகள் உண்டாம்.

### சூட்சும பலன்கள் முற்றிற்று.

---

## பிராண பலன்கள்.

### குஜபிராணபலன்.

சர்ப்பபயம் ஆயுதபயம் பாசபந்தனம் மரணபயம் இவைகள் உண்டாம்.

### இராகுபிராண பலன்.

ஸ்தானப்பிரஷ்டம் அவமானம் பந்துஜன பீடை இவைகள் உண்டாம்.

### குருபிராணபலன்.

தேவப்பிரசாதம் மந்திர சித்தி புத்திரபிராப்தி இவைகள் உண்டாம்.

### சனி பிராணபலன்.

அக்கினி பயம் தனநாசம் ஸ்தானப்பிரஷ்டம் இவைகள் உண்டாம்.

### புதபிராண பலன்.

திவ்வியமான பூஷணலாபம் வஸ்திரலாபம் போஜன செளக்கியம் இவைகள் உண்டாம்.

### கேது பிராண பலன்.

பூமியில் விழுந்து கிலேசப்படுதல், சரீரபீடை, நேத்திர வியாதி, தனநஷ்டம், ரோகம், இவைகள் உண்டாம்.

### சுக்கிர பிராண பலன்.

போகபாக்கியம், தனலாபம், போஜன செளக்கியம் இவைகளுண்டாம்.

சூரிய பிராண பலன்.

தீர்க்கரோகம், தாரித்திரம், சுரம், உன்மத்தம், அபகீர்த்தி இவைகள் உண்டாம்.

சந்திர பிராண பலன்.

ஆபரண லாபம், வஸ்திர லாபம், போஜன சௌக்கியம், சீதோஷ்ண ரோகம், இவைகள் உண்டாம்

பிராண பலன்கள் முற்றிற்று.

---

## இராகுதிசை இராகுபுத்தியில் இராகாதிய கிரகங்களின் அந்திராதிய மூவகைப் பலன்களில்

# அந்திர பலன்கள்.

இராகு அந்திர பலன்.

ஓடம், தோணி, பரிசு, தெப்பம், இவற்றில் இருந்து விழுதல், காரியவிக்னம் இவைகள் உண்டாம்.

குரு அந்திர பலன்.

அழகு, தனலாபம், காரியசித்தி, தேவப்பிரசாதம் இவைகள் உண்டாம்.

சனி அந்திர பலன்.

நீசவிருத்தி, பாபகர்மம், துர்மார்க்கம், கோட்சொல்லுதல் இவைகள் உண்டாம்.

புதனந்திர பலன்.

இராஜப்பிரீதி, சுயதேசம், பிராமண பக்தி, தனலாபம் இவைகள் உண்டாம்.

கேதாந்திர பலன்.

அன்னிய கிரக வாசம், பராக்கிரம ஹீனம், அவமானம் புத்திரநாசம், உபத்திரவம் இவைகள் உண்டாம்.

சுக்கிரனந்தி பலன்.

விதேசப் பிராப்தி, வாகன ரோகணம், சத்திரசாமர லாபம், ஸ்திரீ வைபோகம் இவைகள் உண்டாம்.

சூரியாந்திர பலன்.

தான தருமங்கள், தேகாரோக்கியம் இவைகள் உண்டாம்.

### சந்திராந்திர பலன்.

போகபாக்கியம், வழியில்விழுதல், பரோபகாரம், ஸ்தௌத்யம் செய்தல் இவைகள் உண்டாம்.

### குஜாந்திர பலன்.

லோகோபத்ரவமான காரியங்களைச் செய்குதல், சித்தப்பிரமை, சுரபயம் இவைகள் உண்டாம்.

### அந்திர பலன்கள் முற்றிற்று.

---

## சூட்சும பலன்கள்.

### இராகு சூட்சும பலன்.

ஓடம், தெப்பம், பரசு, தோணி, இவற்றிலிருந்து தண்ணீரில் வீழ்தல், தனச்சேதம், ரோகபயம், பாபகர்மம் இவைகள் உண்டாம்.

### குரு சூட்சும பலன்.

தீர்க்கரோகம், தாரித்திரம், தானதர்மம் இவைகள் உண்டாம்.

### சனி சூட்சும பலன்.

துர்மார்க்கம், துராச்சாரம் துர்ப்புத்தி இவைகள் உண்டாம்.

### புத சூட்சும பலன்,

சங்கீதம், ஸ்திரீபோகம், வாச்சாலகம் இவைகள் உண்டாம்.

### கேது சூட்சும பலன்.

இஷ்டஜனநாசம், நாற்கால் ஜீவநாசம், மானபங்கர், பந்தனம் இவைகள் உண்டாம்.

### சுக்கிர சூட்சும பலன்.

இராஜவெகுமானம், தனலாபம், ஆதாயம், பந்நனம் இவைகள் உண்டாம்.

### சூரிய சூட்சும பலன்.

நவரத்ன பொக்கிஷ லாபம், வாகனப்பிராப்தி, தேகசௌக்கியம், நேத்திரவியாதி, குட்சிரோகம், ஆசனரோகம் இவைகள் உண்டாம்.

### சந்திர சூட்சும பலன்.

வித்யாலாபம், தேவதாப்பிரசன்னம், இஷ்டார்த்த சித்தி இவைகள் உண்டாம்.

### குஜ சூட்சும பலன்.

பராக்கிரமம், சேவகரைத் தண்டித்தல், ஜலகண்டம், பந்தனம் இவைகள் உண்டாம்.

### சூட்சும பலன்கள் முற்றிற்று.

---

## பிராண பலன்கள்.

### இராகுபிராணபலன்.

விஷபயம் தனநாசம் உபவாசம் இவைகள் உண்டாம்.

### குருபிராணபலன்.

சௌக்கியம் அக்கினி பயம் வாகனப்பிராப்தி இவைகள் உண்டாம்.

### சனிபிராணபலன்.

காகதகனம் பந்தனம் ரோகம் அர்த்தநாசம் இவைகள் உண்டாம்.

### புதபிராணபலன்.

உபதேசம் பண்ணல் குருபக்தி நற்குணம் இவைகள் உண்டாம்.

### கேதுபிராணபலன்.

புத்திரவிரோதம் கிரகப்பிரஷ்டம் காரியவிக்கினம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரபிராணபலன்.

திரவியலாபம் சத்திரலாபம் வாகனலாபம் சிவாலயப் பிரதிஷ்டை இவைகள் உண்டாம்.

### சூரியபிராணபலன்.

பசுவினுற் பயங்கரம் இராஜ பயம் சோரபயம் இவைகள் உண்டாம்.

### சந்திரபிராணபலன்.

சுகம் நற்புத்தி சாதுசங்கம் குரு தரிசனம் பாவபயம் சந்தோஷம் இவைகள் உண்டாம்.

### குஜபிராணபலன்.

ஜலபயம் விஷபயம் அக்கினி பயம் ஆயுதபயம் ஸ்தானப்பிரஷ்டம் மலினமடைதல் இவைகள் உண்டாம்.

### பிராணபலன்கள் முற்றிற்று.

---

## குருதிசை குருபுத்தியில் குரு ஆகிய கிரகங்களின் அந்திராதிய மூவகைப் பலன்களில்

# அந்திர பலன்கள்.

### குருஅந்திரபலன்.

புத்ரபௌத்ர சந்தோஷம் தனலாபம் ஆரோக்கியம் ஆசாரம் சுகம் இவைகள் உண்டாம்.

### சனிஅந்திரபலன்.

சர்வகாரியங்களிலும் அசாத்தியம் ஊஷ்ணம் நஷ்டம் அவமான காரியங்களிலே திரிகுதல் இவைகள் உண்டாம்.

### புதாந்திரபலன்.

விசேஷவித்தை புராணகாவியங்கள் கேட்குதல் சத்கர்மம் ஊஷ்ணம் சுரம் இவைகள் உண்டாம்.

### கேதாந்திரபலன்.

தேவப்பிராமணத்துவேஷம் பந்துஜனவிரோதம் கலகம் இவைகள் உண்டாம்.

### சுக்கிராந்திரபலன்.

கற்பூராதியசுகந்தலாபம் ஸ்திரீபோகம் வாகனுதிலாபம் இவைகள் உண்டாம்.

### சூரியாந்திரபலன்.

ரோகம் கிலேசம் அபஜெயம் மூத்திரக்கிரிசனம் விருத்த ஸ்திரீயினிடத்துச் சேவகம் ஸ்திரீபுத்திரவஞ்சகம் இவைகள் உண்டாம்.

### சந்திராந்திரபலன்.

வியாதிபயம் குளிர்பயம் தைரியம் சத்சங்கமம் இவைகள் உண்டாம்.

### குஜாந்திரபலன்.

விவாதம் அக்கினிபயம் படுகுழியிலே வீழ்தல் ஸ்தானபேதம் இடறிவீழ்தல் பித்தரோகம் இவைகளுண்டாம்.

### இராகுஅந்திரபலன்.

பந்துத்துவேஷம் தனக்ஷயம் பிராமணத்துவேஷம் இவைகள் உண்டாம்.

அந்திரபலன்கள் முற்றிற்று.

---

## சூட்சுமபலன்கள்.

### குருசூட்சுமபலன்.

சிவார்ச்சனை அக்கினிகோத்திரம் திரவியம் வாகனம் சத்ர லாபம் கோபம் இவைகள் உண்டாம்.

### சனிசூட்சுமபலன்.

அழுதுக்கொண்டே தனச்செலவிடுதல் பிர்ம்மஹத்திபண்ணல் மஞ்சமஹாபாதங்கள்பண்ணல் இவைகளுண்டாம்.

### புதசூட்சுமபலன்.

ஞானம் தனலாபம் அக்கினிகோத்திரம் சிவபூஜை சத்சங்கம் இவைகள் உண்டாம்,

### கேதுசூட்சுமபலன்.

புத்திரலாபம் திரவியலாபம் ஆரோக்கியம்இவைகளுண்டாம்.

### சுக்கிரசூட்சும பலன்.

தருமசிந்தை பூலாபம் இராஜாபிமானம் வஸ்திரபூஷண மௌக்திகாதி ரத்தினலாபம் இவைகள் உண்டாம்.

### சூரியசூட்சுமபலன்.

வாதரோகம் அக்கினிபயம் அஸ்வபயம் இவைகளுண்டாம்.

### சந்திரசூட்சுமபலன்.

குட்சிவியாதி சத்ரலாபம் இவைகளுண்டாம்.

### குஜசூட்சுமபலன்.

விதேசகமனம் பிராந்தி பயித்தியம் கிரஹாக்கினிதகனம் ஸ்திரீத்துவேஷம் இவைகளுண்டாம்.

### இராகு சூட்சுமபலன்.

மாதுர்பிதுர்நாசம் வஸ்துக்கள் நாசம் சோரபயம் விஷபயம் இவைகளுண்டாம்.

சூட்சுமபலன்கள் முற்றிற்று.

---

## பிராணபலன்கள்.

### குருபிராணபலன்.

புத்திரலாபம் சௌக்கியம் ஆரோக்கியம் இவைகளுண்டாம்.

### சனிபிராணபலன்.

பெலஹீனம் தேசப்பிரஷ்டம்பந்துநாசம் இவைகளுண்டாம்.

### புதபிராணபலன்.

கீர்த்திவாகனலாபம் சம்பத்து விருத்திகரம் இவைகள் உண்டாம்.

### கேதுபிராணபலன்.

விதேசகமனம் இராஜபயம் பந்துகிலேசம் பாபித்தியம் இவைகளுண்டாம்.

### சுக்கிரபிராணபலன்.

வஸ்திரலாபம் இஷ்டான்னபோஜனம் மித்திராள் பந்து விவாகம் அலங்காரம் இவைகள் உண்டாம்.

### சூரியபிராணபலன்.

சுரம் ஊஷ்ணம்ரோகம் ஸ்தாபம் புத்திர பீடை இவைகளுண்டாம்.

### சந்திரபிராணபலன்.

வாதசாட்டியம் அகாரியம் தனலாபம் சம்சாரதுக்கம் இவைகள் உண்டாம்.

### குஜபிராணபலன்.

சுரம் சர்வகாரியநாசம் தீவாந்தர வஸ்துலாபம் இவைகள் உண்டாம்.

### இராகுபிராணபலன்.

ரோகபயம் விஷபயம் இவைகளுண்டாம்.

பிராணபலன்கள் முற்றிற்று.

---

## சனிதிசை சனிபுத்தியில் சனியாகிய கிரகங்களின் அந்திராதி மூவகைப் பலன்களில்

# அந்திரபலன்கள்.

### சனிஅந்திரபலன்.

நேத்திரரோகம் நேத்திரபங்கம் தலைபுடைதல் குட்சிரோகம் இவைகள் உண்டாம்.

புதாந்திரபலன்.

பிராமணபூஜை ஆரோக்கியம் மித்துருநேசம் ஸ்திரீபுத்திராள் இலாபம் வாகனலாபம் இவைகள் உண்டாம்.

கேதாந்திரபலன்.

மானபங்கம் அதிக நஷ்டம் தனநாசம் மாதுருநாசம் இவைகள் உண்டாம்.

சுக்கிராந்திரபலன்.

புத்திராள் திரவியம் ஆபரண லாபம் ஆரோக்கியம் இவைகள் உண்டாம்.

சூரியாந்திரபலன்.

குஷ்டரோகம் தாபச்சுரம் ஜலகண்டம் சிரரோகம் குட்சிரோகம் இவைகள் உண்டாம்.

சந்திராந்திரபலன்.

திரவிய லாபம் அஸ்வலாபம் ஸ்திரீலாபம் ஆரோக்கியம் இவைகள் உண்டாம்.

குஜாந்திரபலன்.

பந்துநாசம் ஸ்திரீ நாசம் விஷாக்கினிபயம் ஆயுதபயம் இவைகளுண்டாம்.

இராகுஅந்திரபலன்.

பயித்யம் நீரிழிவு பசாசு பயம் இராஜபயம் சோரபயம் இவைகள் உண்டாம்.

குருஅந்திரபலன்.

கூபம் தடாகம் தேவாலயம் தர்மசாலை முதலியன உண்டுபண்ணுதல் சத்துரு ஜெயம் இவைகளுண்டாம்.

அந்திரபலன்கள் முற்றிற்று.

---

## சூட்சும பலன்கள்.

சனிசூட்சுமபலன்.

ஸ்திரீநாசம் பிச்சாடனம் மனோ பீடை வியாதி பயம் புத்திசபலம் குலநாசம் இவைகள் உண்டாம்.

புதசூட்சுமபலன்.

தாசிதாசாள் நாற்கால் ஜீவலாபம் வியாபாரபலிதம் இவைகள் உண்டாம்.

### கேதுசூட்சுமபலன்.

சோரபயம் குஷ்டரோகம் குட்சிரோகம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரசூட்சுமபலன்.

சம்பத்து அபிஷேகம் ஆயுதாப்யாசம் ஆரோக்கியம் தேவப்பிராமண பூசை அலங்காரம் இவைகளுண்டாம்.

### சூரியன்சூட்சுமபலன்.

பூமிநாசம் குமரகண்டவலி மாதுரு துக்கம் க்ஷயரோகம் இவைகள் உண்டாம்.

### சந்திரசூட்சுமபலன்.

தனலாபம் ஸ்திரீபோகம் இராஜ வெகுமானம் இவைகளுண்டாம்.

### குஜசூட்சுமபலன்.

பிதுர் மாதுர் குரு இவர்கள் நாசம் புத்திசபலம் இவைகள் உண்டாம்.

### இராகுசூட்சுமபலன்.

சித்தப்பிரம்மை இராஜதண்டனை க்ஷயரோகம் இடறிவீழ்தல் இவைகள் உண்டாம்.

### குருசூட்மபலன்.

போகபோக்கியம் வாகனம் சத்திர லாபம் திரவிய லாபம் இவைகள் உண்டாம்.

### சூட்சுமபலன்கள் முற்றிற்று.

---

## பிராணபலன்கள்.

### சனிபிராணபலன்.

சுரம் வசூரிகண்டம் குஷ்டம் ஜலமரணம் இவைகள் உண்டாம்.

### புதபிராணபலன்.

சுபசோபனம் திரவியம் புத்திர லாபம் இராஜ சன்மானம் பாக்கியம் தான தர்மம் இவைகள் உண்டாம்.

### கேதுபிராணபலன்.

சுனகபயம் இஷ்டஜன விரோதம் பால்யர்களால் பயம் இராஜபயம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரபிராணபலன்.

புத்திரசௌக்கியம் தனப்பிராப்தி அக்கினிசித்தி விவாகாதி லாபம் இவைகள் உண்டாம்.

### சூரியபிராணபலன்.

உதரரோகம் நேத்திரரோகம் சிரரோகம் அக்கினிபயம் குருவுக்குக்கிலேசம் தனதானியம் இவைகள் உண்டாம்.

### சந்திரபிராணபலன்.

ஆரோக்கியம் புத்திரலாபம் சுபசாந்திசெய்தல் தேவப்பிராமணபூஜை இவைகள் உண்டாம்.

### குஜபிராணபலன்.

உலக்கையால் கல்லெறியினுல் அக்கினியால் மிருகத்தால் பயம் ஆரண்ய பயம் இவைகள் உண்டாம்.

### இராகுபிராணபலன்.

தேசத்தியாகம் இராஜபயம் விஷபயம் அண்டவியாதி வாத பித்த சிலேட்டுமரோகம்.

### குருபிராணபலன்.

குருமுத்திரையாகுதல் தபசு சேனுதிபத்தியம் பூமிலாபம் இவைகள் உண்டாம்.

### பிராணபலன்கள் முற்றிற்று.

---

## புததிசைபுத்தியில் புதாதியகிரமங்களில் அந்திராதியமூவகைப்பலன்களில்

# அந்திரபலன்கள்.

### புதாந்திரபலன்.

வித்தைஞானம் வாகனம் இவைகள் உண்டாம்.

### கேது அந்திரபலன்.

சத்துருபயம் மித்துருவிரோதம் நேத்திரரோகம் மிகவும் வஞ்சிக்குதல் இவைகள் உண்டாம்.

### சுக்கிராந்திர பலன்.

ஞானசாஸ்திர விசாரணை இராஜவெகுமானம் இவைகள் உண்டாம்.

### சூரியாந்திர பலன்.

ஸ்திரீ புத்ராள்நாசம் திரவியநாசம் ஆத்மஜனநாசம் இவைகள் உண்டாம்.

### சந்திராந்திரபலன்.

அன்னவஸ்திராபரணலாபம் இராஜப்பிரீதி இவைகள் உண்டாம்.

### குஜாந்திரபலன்.

மரணபயம் வைசூரிகண்டம் ஸ்தானசலனம் ஜலபயம் இவைகள் உண்டாம்.

### இராகு அந்திரபலன்.

கிலேசம் பாபகர்மம் சுரம் சகோதரபேதம் சோரபயம் விஷபயம் இவைகள் உண்டாம்.

### குரு அந்திரபலன்.

ஜெபதபம் இஷ்டான்ன போஜனம் பூலாபம் புத்திரோற்பத்தி தனலாபம் இவைகள் உண்டாம்.

### சனி அந்திரபலன்.

பிராணதியாகம் இராஜபயம் ஊஷ்ணதிக்கம் இவைகள் உண்டாம்.

அந்திரபலன்கள் முற்றிற்று.

---

## சூட்சுமபலன்கள்.

### புதசூட்சுமபலன்.

சௌபாக்கியம் இராஜவெகுமானம் சத்துருஜெயம் இவைகள் உண்டாம்.

### கேதுசூட்சும பலன்.

ஆயுதபயம் அக்கினிபயம் துர்மார்க்கம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரசூட்சுமபலன்.

வாகனலாபம் ஜலத்திலேநடத்தல், சம்பத்து சுபகாரியம் இவைகள் உண்டாம்.

### சூரியசூட்சுமபலன்.

இராஜபயம் சுரபயம் துர்ப்புத்தி இவைகள் உண்டாம்.

### சந்திரசூட்சும பலன்.

தயிரியம் தன தானியம் சுபவிருத்தி மித்திராள்சிநேகிதம் இவைகள் உண்டாம்.

### குஜசூட்சுமபலன்.

ஸ்திரீயால் விஷத்தினால் பயங்கரம் தேகசாட்டியம் தாரித்திரியம் சித்தப்பிரம்மை ஸ்தானப்பிரஷ்டம் இவைகள் உண்டாம்.

### இராகு சூட்சுமபலன்.

ஆயுதமரணம் விஷபீடை அக்கினிபீடை விதேசகமனம் தேகசாட்டியம் உண்டாம்.

### குருசூட்சுமபலன்.

தியாகம் போகம் புத்திரசௌக்கியம் இவைகள் உண்டாம்.

### சனிசூட்சுமபலன்.

நானுவிதசிந்தனை பாபகர்மம் ஆரோக்கியம் தர்மம் இவைகள் உண்டாம்.

### சூட்சுமபலன்கள் முற்றிற்று.

---

## பிராண பலன்கள்.

### புதபிராணபலன்.

போஜனசௌக்கியம் ஆரோக்கியம் சிவார்ச்சனை இவைகள் உண்டாம்.

### கேதுபிராணபலன்.

சோராக்கினிபயம் விஷபயம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரபிராணபலன்.

கீர்த்திப்பிரதாபம் தேவபூஜை இவைகள் உண்டாம்.

### சூரியபிராணபலன்.

அந்த்ரதாகம் சுரம் உன்மத்தம் பந்துக்கள் இகழ்தல் அலங்காரபங்கம் இவைகள் உண்டாம்.

### சந்திரபிராணபலன்

குஷ்டரோகம் நேத்திர ரோகம் விஷபயம் தானியலாபம் இராஜசௌக்கியம் இவைகள் உண்டாம்.

குருபிராணபலன்.

உதரரோகம் குஷ்டரோகம் தந்தரோகம் விஷபயம் ஆரோக்கியம் தனலாபம் இவைகள் உண்டாம்.

இராகுபிராணபலன்.

கடன்படுகை செவிமந்தம் பந்துவிரோதம் வஸ்திராபரணப் பிரீதி இவைகள் உண்டாம்.

குருபிராணபலன்.

பூஷணலாபம் தேககாந்தி விஜயலாபம் தனலாபம் குருத்துவம் இவைகள் உண்டாம்.

சனிபிராணபலன்.

தாரித்திரியம் சோரபாதை ஸ்திரீபாதை இவைகள் உண்டாம்.

பிராணபலன்கள் முற்றிற்று.

---

## கேதுதிசை கேதுபுத்தியில் கேதாதியகிரகங்களின் அந்திராதியமுவகைப்பலன்களில்

# அந்திரப் பலன்கள்.

கேதந்திரபலன்.

மூத்திரரோகம் தந்தரோகம் சிரரோகம் தனட்சயம் மானபங்கம் இவைகள் உண்டாம்.

சுக்கிராந்திரபலன்.

ஆரோக்கியம் தனப்பிராப்தி சிலேட்டுமரோகம் இவைகள் உண்டாம்.

சூரியாந்திரபலன்,

பிதுர் மாதுர் மரணம் சத்துரு பீடை சுரபயம் இவைகள் உண்டாம்.

சந்திராந்திரபலன்.

ஞானம் மித்துரு பிராப்தி தனலாபம் வியாபார லாபம் சுமுகசந்தோஷம் இவைகள் உண்டாம்.

குஜாந்திரபலன்.

இரத்தாதிசாரம் குஷ்டரோகம் மகாபயம் பூதபயம் இவைகள் உண்டாம்.

### இராகாந்திரபலன்.

ரோகம் விஷாக்கினிபீடை ஆயுதபயம் இவைகள் உண்டாம்.

### குருஅந்திரபலன்.

ஸ்திரீபோகம் ஆரோக்கியம் வாகன லாபம் ஆயுள் விருத்தி இவைகள் உண்டாம்.

### சனிஅந்திரபலன்.

பந்தனம் ரோகம் பசாசு பீடை பசுநாசம் விதேசமரணம் இவைகள் உண்டாம்.

### புதாந்திரபலன்.

ஆரோக்கியம் அக்கினிகோத்திரம் பசுலாபம் மஹிஷலாபம் அன்னியதேச தனப்பிராப்தி இவைகள் உண்டாம்.

அந்திரபலன்கள் முற்றிற்று.

---

## சூட்சுமபலன்கள்.

### கேதுசூட்சுமபலன்.

புத்திரபிராப்தி தாரித்திரியம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரசூட்சுமபலன்.

ஆரோக்கியம் புத்திரபிராப்தி கீர்த்தி மித்துருபாந்தத்துவம் இவைகள் உண்டாம்.

### சூரியசூட்சுமபலன்.

யாத்திரை யுத்தம் மித்துருகிலேசம் தனவிரயம் இவைகள் உண்டாம்.

### சந்திரசூட்சுமபலன்.

ஜெயம் தாசிதாசாள் இலாபம் கீர்த்தி இவைகள் உண்டாம்.

### குருசூட்சும பலன்.

சிரரோகம் குன்மரோகம் ஆரண்யத்திலே இடறிவீழ்தல் சோரபயம் அன்னத்தினல் பயம் இவைகள் உண்டாம்.

### இராகுசூட்சுமபலன்.

நீசஸ்திரீயினல் விபத்து ஆயுதபயம் குரு ஜனக் கிலேசம் இவைகள் உண்டாம்.

### குருசூட்சுமபலன்.

சத்துரு விரோதம் விஷபயம் சம்பத்து இராஜ்யம் பசு லாபம் இவைகள் உண்டாம்,

### சனிசூட்சுமபலன்.

ஸ்திரீவிரோதம் இராஜவிரோதம் பந்தனம் விவசாயநஷ்டம் இவைகள் உண்டாம்.

### புதசூட்சுமபலன்.

இஷ்டமான ஜனங்களுக்கு ஆயாசம் மரணபயம் இடம் விட்டுப்போகுதல் சத்துருபயம் இராஜசம்பத்து இவைகள் உண்டாம்.

### சூட்சுமபலன்கள் - முற்றிற்று

---

## பிராணபலன்கள்.

### கேதுபிராணபலன்.

மரத்தில் ஏறி வீழ்தல் இடறிவீழ்தல் விஷபயம் இவைகள் உண்டாம்.

### சுக்கிரபிராணபலன்.

பூலாபம் தனலாபம் அஸ்வாதி நாற்கால் ஜீவலாபம் இவைகள் உண்டாம்.

### சூரியபிராணபலன்.

ஜலபயம் இராஜஸ்திரீயால் பயம் தீர்க்கரோகம் இவைகள் உண்டாம்.

### சந்திரபிராணபலன்.

தீர்த்தஸ்நான பலன் தேவபக்தி பிராமணபக்தி நேத்திரம் அஸ்தம் இவைகளிலே ரோகம் இவைகள் உண்டாம்.

### குஜபிராணபலன்.

ரோகம் அஜீர்ணபாதை சத்துரு பீடை இவைகள் உண்டாம்.

### இராகுபிராணபலன்.

ஆயுதபயம் கிரந்தி வியாதி மித்துருபீடை ஸ்திரீபுத்ராள் திரவியநாசம் கஜதுரகாதியவிரோதம் இவைகள் உண்டாம்.

### குருபிராணபலன்.

பூஷணலாபம் அலங்காரம் இராஜசேவை இராஜவசீகரம் இவைகள் உண்டாம்.

### சனிபிராணபலன்.

யுத்தத்தில் சத்துருவால் குரூரம் வாக்குத் துவேஷத்தினுல் பந்தனம் இவைகள் உண்டாம்.

### புதபிராணபலன்.

சயனசௌக்கியம் சந்தனுதிசுகந்தம் அணிதல் போஜன சௌக்கியம் இவைகள் உண்டாம்.

### பிராணபலன்கள் முற்றிற்று.

---

## சுக்கிரதிசை சுக்கிரபுத்தியில் சுக்கிராதிய கிரகங்களின் அந்திராதிய மூவகைப் பலன்களில்

# அந்திர பலன்கள்.

### சுக்கிராந்திரபலன்.

ஸ்திரீபுத்ராள் வாகனம் திரவியம் சுகந்தபரிமளங்கள் பூஷணங்கள் இவைகள் உண்டாம்.

### சூரியாந்திரபலன்.

விதேசகமனம் ஆத்மசம்மந்தமான ஜனங்களிலே பீடை மனக்கிலேசம் இவைகள் உண்டாம்.

### சந்திராந்திரபலன்.

மாதுர் பிதுர் வர்க்கங்களிலே சத்கர்மம் தன தானியவிருத்தி வியாபார பலிதம் இவைகள் உண்டாம்.

### குஜாந்திரபலன்.

ஸ்தானப்பிரஷ்டம் தனட்சயம் அபவாதமான வார்த்தை உஷ்ணுதிக்கம் இவைகள் உண்டாம்.

### இராகு அந்திரபலன்.

விஷாக்கினிபயம் இராஜதண்டனை தென்மேற்கு திக்கிலே பிரயாணம் போனவிடத்திலே காரியவிக்கினம் இவைகள் உண்டாம்.

### குருஅந்திரபலன்.

தேவகுரு தரிசனம் தேவப்பிராமண பூஜை இஷ்டார்த்த சித்தி இவைகள் உண்டாம்.

### சனிஅந்திரபலன்.

சவர்த்தனை ஆசாரபங்கம் துஷ்டகீர்த்தி பர்வதாரோகணம் இவைகள் உண்டாம்.

### புதாந்திரபலன்.

வியாபாரபலிதம் தேக சௌக்கியம் இஷ்டதேவதா பிரார்த்தனை இஷ்டார்த்தசித்தி இவைகள் உண்டாம்.

### கேதுஅந்திரபலன்.

நாற்கால் ஜீவநஷ்டம் இரத்தபேதி சீதளசுரம் கர்ப்ப ஸ்திரீ சங்கமம் இவைகள் உண்டாம்.

### அந்திரபலன்கள் - முற்றிற்று.

---

## சூட்சும பலன்கள்.

### சுக்கிர சூட்சுமபலன்.

களத்ரலாபம் மௌக்திகாதி ரத்னலாபம் சத்கீர்த்தி தடாக தர்மம் நூதன கிரகப்பிரவேசம் இவைகள் உண்டாம்.

### சூரியசூட்சுமபலன்.

மனோவியாகூலம் இராஜகோபம் பிராமண சாபம் பசாசு பயம் இவைகள் உண்டாம்.

### சந்திரசூட்சுமபலன்.

ஜெபதபம் பண்ணுதல் தாரவர்க்கங்களிலே சுபம் மணி மந்த்ரௌஷதாதிகளிலே அனுகூலம் இவைகள் உண்டாம்.

### குஜசூட்சுமபலன்.

சோராக்கினி பீடை சுரபீடை ஆயுதபயம் பந்துத்துவேஷம் வெகுஜனவிரோதம் இவைகள் உண்டாம்.

### இராகுசூட்சுமபலன்.

அன்னத்துவேஷம் அகாலபோஜனம் இராஜத்துவாரத்திலே காத்திருத்தல் ரெணபரு சிலந்தி இவைகள் உண்டாம்.

### குரு சூட்சுமபலன்.

இராஜப்பிரசாதம் குடும்பத்திலே விவாகாதி சுபகாம் சத்துருபலாயனம் இவைகள் உண்டாம்.

### சனி சூட்சுமபலன்.

அற்பசிநேகம் ஜாதிப்பிரஷ்டம் ஆஸ்தியான பொருள்களிலே நஷ்டம் இவைகள் உண்டாம்.

### புதசூட்சுமபலன்.

வாகனப்பிராப்தி புத்திரோற்பத்தி தீவாந்திரவஸ்துலாபம் வெகுஜனரட்சணை இவைகள் உண்டாம்.

### கேதுசூட்சுமபலன்.

பர்வதாரோகணம் குட்டிரோகம் நேத்திரவியாதி புத்திரஹானி இவைகள் உண்டாம்.

### சூட்சுமபலன்கள்-முற்றிற்று.

---

## பிராணபலன்கள்.

### சுக்கிரபிராணபலன்.

இஷ்டான்னபோஜனம் இஷ்டார்த்தசித்தி பாக்கிய ஸ்திரீலாபம் பால்பசுவிருத்தி இவைகள் உண்டாம்.

### சூரியபிராணபலன்.

இராஜசேவை மரணபயம் பந்துநாசம் ஸ்திரீசகோதரநாசம் பூஸ்திதி இவைகள் உண்டாம்.

### சந்திரபிராணபலன்.

இலட்சுமீ கடாட்சம் இஷ்டதேவதாபிரார்த்தனை தூரதேசப்பிரயாணம் ஜலபயம் இவைகள் உண்டாம்.

### குஜபிராணபலன்.

பஹுமூத்ரரோகம் இரக்தப்பிரமேகம் அன்னியகிராமம் அல்லது அன்னியகிரகங்களிலேவாசம் இவைகள் உண்டாம்.

### இராகுபிராணபலன்.

பசாசுபயம் இராஜவிரோதம் குரூரவசனம் பாபகர்மம் பண்ணுதல் இவைகள் உண்டாம்.

### குருபிராணபலன்.

புண்ணியதீர்த்தஸ்நானம் தேவாலயப்பிரதிஷ்டை நூதனக்கிரகப்பிரவேசம் இவைகள் உண்டாம்.

### சனிபிராணபலன்.

சேவகாவிருத்தி கல்யாண சம்பிரமம் பால்ய ஸ்திரீலாபம் தடாககருமம் இவைகள் உண்டாம்.

### புதபிராணபலன்.

விப்ர சன்மானம் புத்திரவிருத்தி விவசாயங்கெடுதல் உத்தரவாதி பண்ணுகை இவைகள் உண்டாம்.

### கேதுபிராணபலன்.

அபஜெயம் தனட்சயம் சாபத்தியமாத்ருவிகாதம் குருவிகாதம் சபலசித்தம் காரியஹானி பந்தனம் ரோகாக்கினி தகனம் இவைகள் உண்டாம்.

### பிராணபலன்கள் முற்றிற்று.

---

## அந்திராதிய மூவகைப் பலன்களின்

# தோஷ நிவர்த்தி.

சூரியாதி கிரஹங்கள் இலக்கின சொட்சேத்திரங்களுக்கும் தசா புத்தி யந்தர சூட்சும நாதர்களுக்கும் தனலாபகேந்திரத் திரிகோணங்களிலே உச்சசொட்சேத்திர மித்துரு சேத்திரம் பெற்றுசுபவர்க்கமும் சுபசஹிதமும்பெற்றால் இந்த கிரந்தத்திற் கூறிய சகல தோஷமும் நிவர்த்தியாய் சுப பலன்கள் நடக்கும்.

---

### புத்தி பிரிக்கும் வகை.

கோள்களின் றிசையிற் புத்தி குறித்திடிற் றிசையோ னுண்டை
நீள்புத்தி நாத னுண்டால் நேர்படப் பெருக்கிக் கண்ட
வாளமர் தொகையொன் றிற்கு மருவுநாண் மூன்ற தாகும்
வாள்கடல் கெண்டை வண்டு வனசமாம் விழியி னாளே. 1

## சித்திரம் பிரிக்கும் வகை.

அவரவ ரபகா ரத்தி னுண்டொன்றின் மூன்று நாளும்
நவிலுமா தங்கால் நாளும் நாளொன்றிற் பாதிக் கன்னல்
இவை மூன்று தொகையுங் கோட்க டிசையாண்டாற்பெருக்கிவந்த
தவலறு தொகையைச் சேர்க்கத் தான்வருஞ் சித்திரந்தான். 2

சித்திரபலனென்பது அந்திர பலனும்.

---

## உட்சித்திரம் பிரிக்கும் வகை.

வெண்பா.

ஒருநாளுக் கோரரை நாழியாத் தோற்றும்
ஒருநாழி கைக்கரைவி நாடி — துருவமாம்
எந்தத்தி சைக்கு மிவர்வருடங் கொண்டெண்ணச்
சிந்தனைக்குட் சித்திரமாச் செப்பு.

உட்சித்திர பலனென்பது சூட்சுமபலனும்.

---

குருப்யோந்நமஹா.

## புத்திஅந்திரசூக்ஷ்ம பிராணங்களைப் பிரிக்கும் அடைவு.

திசை புத்தி அந்திர சூட்சும வருடத்தொகையை 120-ல் கழித்த வருடத்தை புத்தி அந்திர சூட்சும பிராண நாதர்களின் வருடத் தொகையில் தனித்தனிப் பெருக்கப் புத்தி அந்திர சூட்சும பிராணங்களின் வருடாதிய காலங்களாம்.

ஜெயமுனி வாக்கியம் என்று வழங்குகின்ற

ஜெயமுனி சூத்திர மொழிபெயர்ப்பு,

முற்றிற்று.

---

உ

முருகக்கடவுள் துணை.

# ஜெயமுனி சூத்திரம்.

நித்தியா சொரூப நிருபனை வணங்கிப்
பத்தியாய்க் கோசரப் பலனுரைப்பேனே.

## கோசர பலன்கள்.

### அறுசீர் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

ராசி யதிப னுச்சமுறில் நல்ல அறிவுந் தோன்றுமிகத்
தேசு மிலகுந் திரவியங்கள் சேருஞ் சுகியாய்த் தானிருப்பன்
நேசம் புவியில் ஜெயங்கொள்வன் நினைத்த கருமங் கைகூடும்
பேசு மிவரைத் தீக்கோள்கள் பிடித்து நோக்கிற் பிழையாமே. 1

ஆமே ராசி பதிநீச மமரிற் றுயா மடைந்துவரும்
போமே யலது திரவியமும் பொருந்தா நிலமை வேறுபடும்
தாமே தீக்கோ ளிவனோடு தானுங் கூடிற் பார்த்திடுகிற்
சாமே யலது தரித்திரஞ்ச் சமைந்து நோயிற் றுன்படுமே. 2

படுமே ராசி யாதிசொட்சேத் திரத்தி லிருக்கிற் பயந்தீரும்
விடுமே நோயுஞ் சுகமுண்டு விளங்குங் கீர்த்தி மிகவுண்டாம்
கொடுமே நிதிய மளவுவருங் குறித்த கருமங் கைகூடும்
அடுமே பாவக் கோள்பற்றி யணுகில் நோக்கி லணுகாதே. 3

ஆதே ராசி பதிமித்ரு வான வீட்டி லமர்ந்திருக்கின்
மாதே கலியா ணங்கள்வரும் மனது பீடை யகன்றுவிடும்
மீதே தரியா ருறவாவர் விளங்கு மரசர் மகிழ்ந்திடுவர்
எதே தீக்கோ ளுடன்கூடி லெதிர்த்து நோக்கி லழிந்திடுமே. 4

அழியா ராசி பதிசத்ரு வான வீட்டி லமர்ந்திருக்கில்
ஒழியாத் துக்க நோய்விளையும் ஒக்கு முறவும் பகையாவர்
செழியா தேசந் திரிந்திடுவன் செறியும் நிதியஞ் சிலவாகும்
பழியாம் பாபக் கோள்நோக்கிற் படியில் மரணம் பலித்திடுமே 5

பலிக்கு மிராசி பதிசுபனோ டோங்கி யிருக்கிற் பதிபோராங்
மிகல[illegible]ம்படையுந் திரவியங்கள் கிடைக்குஞ் சிநேகம்புத்திரர்கள்
சலிப்பு நீங்கு மடந்தையர்கள் தனது போகம் மிகுத்துவரும்
வலிக்குந் தீக்கோள் பார்த்திடுகிற் சொன்ன பலன்கள் வாராதே. 6

வாரா ராசி யாதிபதி வந்த பாவ ருடன்கூடில்
தீரா நோயுந் தரித்திரமுஞ் சேரும் நிதியம் பறிபோகும்
போரா நெஞ்சங் கலங்கிவிடும் பிரியாத் திருவும் பிரிந்துவிடும்
சேரார்துடர்வர்பயஞ்செனிக்குஞ் செய்யுங்கருமஞ்சிதைந்திடுமே 7

சிதையா விராசி யாதிபதி சீறி யிகழ்சத் துருவுடனே
மதியா திருக்கின் மனப்பீடை மனதிற் றுக்கம் வருமலது
பதிபோ மொண்ணார் பயஞ்செனிக்கும் பழியாங் கலக்க மிகவுண்டாம்
நிதிபோம் பயிரும் பலியாது நோரா நிந்தை நெடிதாமே. 8

நெடிதா மிராசி யாதிபதி நீங்கா தத்த மனமாகில்
மடிவா மனது பிரமிக்கும் மருவு நிதியங் கெடுமுடனே
கொடியே ரிடையார் சுகமில்லை கூடார் வந்து வளைந்திடுவர்
படிமே லெங்குந் திரிந்திடுவர் பழியா மாசர் பகையாமே. 9

பகையா மிராசி யாதிபதி படியி லுதிக்கிற் பலகீர்த்தி
மிகவாங் கனக ரத்தினமும் மென்மேல் வசமாம் வினைநீங்கும்
சுகமாந் தேகம் வாகனங்கள் தோற்று மொண்ணார் தனைச் செயிப்பர்
செகமேல் விளங்குந் தொழிலுண்டாம் சிறையும் நீங்குஞ் செருக்காமே. 10

செருக்கு மிராசி யாதிப்தி சீறுங் கேது ராகுவுந்தான்
இருக்கில் வழியில் நடந்திடுகி லீரும் வாளி ஞுலவதி
பெருக்கும் விரணங் கடனோய்கள் பெருகுந் திருவும் பொருட்சேதம்
உருக்கு மனதில் வரும்பீடை ஒண்ணா ரலைப்ப ருறுதியிதே. 11

உறுதி ராசி யாதிபதி யொன்றோ டைந்தி லொன்பானில்
அறுதி யாக வமர்ந்திருக்கி லதிக நிதிகள் வருமுடனே
பிறிதி யான தொழிலணுகும் பிறங்குஞ் சுபக்கோள் நோக்கநலம்
இறுதி கொடுக்குந் தீக்கோள்க ளிருந்தும் நோக்கி விணங்காதே. 12

[..]ங்கு மிராசி யொன்பதஞ்சி லேற்குஞ் சுபக்கோ ளிருந்திடுகில்
[..]ணங்கோள் நிதியம் வருந்தொழில்கள் கரும மனைத்துங் கைவசமா[..]
அணங்கின் போக சவுக்கியங்க ளாகு மரச ருறவாவர்
சுணங்கும் பாவக் கோள்நோக்கிற் சொன்ன பலன்கள் தோன்றாதே 13

தோன்று மிராசி யொன்பதனுற் றொடர்ந்து பாவக் கோளிருக்கில்
ஊன்றுஞ் சுரமும் பலபிணியும் ஓங்கு நிதியந் தான்கெடு[..]
ஈன்ற குழவி யுயிர்ச்சேதம் இலாபஞ் சிறிதும் பலியாது
தூன்ற மனது சஞ்சலமாம் தோறாப் படையுந் தோற்றிடுமே. 14

தோற்று மிராசி யாதிபனைச் சுபமாம் வியாழம் பார்த்திடுகில்
எற்ற தொழிலுந் திரவியமும் இருந்த விடத்தி லெய்திடுமாம்
ஆற்ற புகழும் புதன்சசியும் அடர்ந்து பார்க்கி லதிசயமாம்
கூற்றங் கதிர்சேய் பாம்புசனி பார்க்கிற் பலன்கள் கூடாதே. 15

கூடு மிராசிக் கிருபுறமுங் கூறு மதிபர்க் கிருபுறமும்
நீடுஞ் சுபக்கோள் நின்றிடுகில் நிதியஞ் சேருஞ் சுகமுண்டாம்
மூடும் பாவக் கோளிருக்கில் முயலுங் கருமங் கூடாது
தேடும் பொருள்க ளழிவாகுந் தேக மதற்குக் கண்டமதே. 16

கண்ட ராசி யாதிபதி கதிர்கள் நீங்கி வக்கிரிக்கில்
கொண்ட பொருள்க ளழிவாகுங் குடிவிட் டோட்டுங் கலகமுறும்
அண்டும் பிணிகள் தீராமல் அதிக மாகுந் தொழில்முடக்கும்
விண்ட பலன்கள் வக்கிரந்தீர்ந் துடனே வந்து விளைந்திடுமே. 17

விளையு மிராசி யாதிபதி விரைந்தே நிற்கு மிராசியினுக்
குளையுந் திரிகோ ணந்தனக்கே உற்ற சுபக்கோள் நிற்கில்நலம்
வளையும் பாவக் கோளிருக்கில் வருத்தும்பிணிகள்பொருட்சேதம்
கிளையும் பகையாம் பலனில்லை கெலிப்பு நீங்கு மறிவீரே. 18

அறியு மிராசி யாதிபதி யறுமீ ராறெட்டதனில்
நிறுவி யிருக்கி லவபலனும் நிதியு மிழக்கும் நிலைநீங்கும்
உறுதி சுபக்கோள் கூடியிடி லுண்ணும் பலன்கள் கைவசமாம்
இறுதி பாவக் கோள்கூடில் இகத்தில் மரணங் கிட்டிடுமே. 19

கிட்டு மிராசி யதிபன்முதற் கிளரும் சுபக்கோள் திரிகோணம்
திட்ட ராசி யுடனிருக்கிற் சேரும் பலமென் றுரைத்ததுமெய்
யிட்ட மூன்றின் வீட்டோர்க ளிருக்குந் தானம் பிலத்திருக்கில்
தொட்ட பலன்சம் பூரணமாய்த் தோணக் கிடைக்குந் தொலையாதே. 20

தொலையா தொருவர் தாம்பிறந்து தோன்றும் நாட்கள் மூன்றிலுந்தான்
[illegible] சுபக்கோள் நின்றிடுகில் நிதியஞ் சேரும் நிறைதீக் [illegible]கோள
உலைய[illegible] திருக்கிற் பொருளழிவாம் உடம்பு பீடை யுறுங்கலகம்
தலையா[illegible] பதிவிட் டேகிவிடுந் தானே பலன்கண் டறிந்துரையே 21

உரைய[illegible] பிறக்கும் நாளினுக்கே ஓங்குங் கிரக மொன்பதுதான்
நிலை[illegible] பவத்தை வேதையுறில் நிதிய மிழக்கும் நிலைநீங்கும்
விரைவாம் பலன்கள் வாராது விசனம் பிணிநோய் மனஸ்தாபம்
புரைசே ரரசர் பயமிகுதி போரில் மரணம் புகல்வீரே. 22

புகலு மிராசிக் கிரண்டஞ்சிற் பொருந்துஞ் சுபக்கோள் நின்றிடுகில்
இகலு மரசர் முகவசியம் எவர்க்கும் பிரிய மாயிருப்பர்
அகலு மூன்றீ ரைந்திடத்தில் ஆகாக் கிரக மமைந்து நிற்கில்
நிகரும் பொருந்தா ரோடிருந்தால் இளைப்போர் செயிப்பர் நிச்சயமே. 23

சயமா மிராசிக் கஞ்சினிலே சாரும் பாவக் கோளிருக்கில்
நயமாந் தாரந் தனக்கதிக பீடை பிணியாம் நான்கதனிற்
சுயமாஞ் சுபக்கோள் நின்றிடுகில் சுகமாந் தேகம் பத்தினிலே
வயமாம் பாவக் கிரகமுறில் வலிமை கீர்த்தி வறண்டிடுமே. 24

இடமா மிராசிக் கொன்பதனில் இசையாப் பாவக் கோளுதிக்கில்
அடுமே தனதின் பிதுர்பீடை அணுகும் நாலா மிடந்தனிலே
விடுமே பாவ ருறில்வீட்டை விட்டே வோட்டும் பதினொன்றில்
நெடிதாம் சுபக்கோள் நின்றிடுகில் நிதியஞ் சேரு மிதுநிசமே. 25

நிசமா மிராசிக் கெட்டினிலே நெடிய பாவ ரிருந்துவிடில்
வசமாந் தேக பீடைகள்தான் வருமே யொன்ப தாமிடத்தில்
விசையாஞ் சுபக்கோள் வீற்றிருக்கில் விளைவுந் தருமங் குருபத்தி
நசையாந் தெய்வ பத்திகளும் நன்றாய் வருமாம் நங்கையரே. 26

நங்கை ராசி கேந்திரத்தில் நற்கோள் நிற்கில் லாபமுறுஞ்
சங்கை யுடைய மருவலரைச் சாடித் தூரத்தி ஜெயித்திடுவர்
மங்கும் பாவக் கிரகமுறில் மருவ லார்கள் மிஞ்சிடுவர்
தங்கும் பாவர் சுபருமுறிற் சுபமும் அவமுந் தரும்பலனே. 27

பலமா மிராசி யாதிபதி பரிவாஞ் சொட்சேத் திரமுச்சங்
குலமாங் கோட்கள் தன்னுடனே கூடி யிருக்கிற் றிருவுண்டாம்
நலமாந் தேகம் நிதியுண்டாம் நடுக்கந் தீரு மறிவுதரும்
தலமாந் தொழிலு மிகலுண்டாஞ் சாரும் பிணியுந் தவழ்ந்திடுமே. 28